Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.

வெளியீடு : 14 - 10 - 2003 Issued : 14 - 10 - 2003

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மார்ச் 31, 2003 – தொகுதி 38 – எண் 2

**Monday the 31st March, 2003– Volume 38 – No. 2**

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
...Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

D
V211,31'P03
P03.38.2.
184536

31-3-2003

## உள்ளடக்கம்

பக்கங்கள்


**1. வினாக்கள்-விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 203-239

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 239-298
(பட்டியல்கள் 10 மற்றும் 11)

**2. விதி 110-ன்கீழ் அறிக்கை—**

விசைத்தறித் துணிகள் மீது மத்திய அரசின் கலால் வரியை நீக்க, விலக்களிக்கக் கோருதல் குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சரின் அறிக்கை 299-300

**3. தகவல் கோரல்—**

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 300

**4. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்—தொடர்ச்சி** 301-319, 331-380

திரு. பி.எம். நரசிம்மன் 301-313

திரு. லா. சந்தானம் 313-315, 318-319, 331-333, 338, 340-341

திரு. எச். ராஜா 341-349

திரு. ஜி. பழனிசாமி 349-356, 357-362

திரு. ஜே. ஹேமச்சந்திரன் 363-380

**5. உரிமை மீறல் பிரச்சினை—**

திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் 28-3-2003 அன்று அவையில் தெரிவித்த கருத்து 319-330

**6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 381


53-21—1

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 17, சித்ரபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034**
**2003 மார்ச் 31, திங்கட்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு*
*உரிமை உடைத்திவ் வுலகு"*

தமது கடமையாகிய தொழிலுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வண்ணம் இரக்கம் உள்ளவர்களாக இருக்கும் சிறந்த திறம் உடையவர்களுக்கு இந்த உலகமே உரிமை உடையதாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 141, திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**141—**

**சீரமைக்கும் பணி**

***1765—திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநாவலூர் தொகுதியில் புத்தனந்தல் அணை மற்றும் ஆற்று வாய்க்காலைச் சீரமைக்கும் பணியினைச் செய்துதர அரசு ஆவன செய்யுமா?

[2003 மார்ச் 31

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் தொகுதி, புத்தனந்தல் அணை மற்றும் ஆற்று வாய்க்காலைச் சீரமைக்கும் பணிக்காக ரூ.30 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி வினாவைத் தொடுக்கின்றேன். இந்த புத்தனந்தல் அணை மற்றும் ஆற்று வாய்க்கால் சுமார் 40 ஆண்டு காலமாகச் சீரமைக்கப்படாததன் காரணமாக ஏரிகளுக்கு நீர்வாத்து இல்லாமல் விவசாயப் பெருமக்களுக்கு பயன்படாத வகையில் இருந்து வருகின்ற காரணத்தால் இந்தக் கிராமத்திற்குச் சென்ற ஆண்டே பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் இந்த அணைக்கட்டைச் சீர் செய்யவும், தூர் வாருவதற்கும் ரூ. 30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து பணி எடுத்துக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. அதனை அறிந்த அந்தப் பகுதி விவசாயப் பெருமக்களும், பொதுமக்களும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பத்திரிகை மூலமாகவும், மனுக்கள் மூலமாகவும் நன்றி தெரிவித்துள்ளார்கள். எனவே அந்தப் பகுதியிலே 40 ஆண்டு காலமாக இருக்கின்ற பிரச்சினையை இந்த நிதி ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் தொகுதி புத்தனந்தல் அணை மற்றும் ஆற்று வாய்க்காலைச் சீரமைக்கும் பணி ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும் என்பதையும், இக்கூடுதல் பணிக்கான கருத்துரு தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம் அவர்களால் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு, வரும் நிதி ஆண்டில் நிதிநிலைமைக்கேற்ப இப்பணி எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த நிதி ஆண்டிலே இப்பணி எடுத்துக்கொள்ளப்படும்

18453b
சென்னை-600 008



2003 மார்ச் 31]

என்பதைத் தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 142, திரு. து. நெப்போலியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**142—**

**மேம்பாலம்**

**•19812—திரு. து. நெப்போலியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வில்லிவாக்கம்-செங்குன்றம் நெடுஞ்சாலை மேற்கு இரயில்வே கடவில் தரைப்பாலம்/மேம்பாலம் இல்லாததால் நெரிசல் மிகுந்த நேரங்களில் போக்குவரத்து பாதிக்கப்படுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வில்லிவாக்கம்-செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம் யார்டு அருகில் இரயில்வே கி.மீ.9/25 முதல் 27 வரை இரயில்வே கடவு எண்-2க்குப் பதிலாகக் கட்டப்பட வேண்டியது மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் ஆகும். இப்பணியை இரயில்வே திட்டப் பணிகளில் சேர்க்க, முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்க இரயில்வே துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறிய பதிலுக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது கடந்த வருடமே இந்தப் பட்டியலில் இடம் பெற்று இருக்கின்றது. வில்லிவாக்கத்தில் இருந்து செங்குன்றம் செல்லும் பாதையில் லெவல் கிராசிங்-2, வில்லிவாக்கத்திலிருந்து பெரம்பூர் செல்லும் பாதையில் லெவல் கிராசிங்-1, இந்த 2 இடங்களுக்கும் பாலம் தேவை என்று பொதுமக்கள் 20 ஆண்டு காலமாகப் போராடி வருகிறார்கள். ஆனால் எந்த நடவடிக்கையையும் மத்திய அரசாங்கமும்,

மாநில அரசாங்கமும் இதுவரை எடுக்காமல் இருந்தன. 2001 கணக்கீட்டின்படி இரயில்வே துறை குறிப்பிட்டுள்ள நிபந்தனையின்படி இரயில்வே இலாகா மூலம் Train Vehicular Unit (TVU) 1 இலட்சம் வாகனங்கள் ஓர் ஆண்டிற்கு அந்த லெவல் கிராசிங்கைக் கடந்தால் R.O.B. or R.U.B.—மேம்பாலமோ அல்லது கீழ்ப் பாலமோ— அமைக்கப்படவேண்டும் என்பது இரயில்வேயின் நியதி. அந்த் அடிப்படையில் 2001 கணக்கீட்டைப் பார்த்தோமானால் லெவல் கிராசிங் 1-ல் வாகனங்கள் 10 இலட்சத்தைத் தாண்டிவிட்டன. லெவல் கிராசிங் 2-ல் வாகனங்கள் 12 இலட்சத்தைத் தாண்டிவிட்டன. நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 2 ஆண்டு காலம் ஆகின்ற நிலையில் வாகனங்கள் 14 இலட்சத்தைத் தாண்டிவிடக் கூடிய நிலை உள்ளது. இப்படி இருக்கும்போது, நான் பல்வேறு அதிகாரிகளைச் சந்தித்து மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, இன்றைக்கு மத்திய அரசாங்கமும் நிதி ஒதுக்கும் நிலைமைக்கு வந்துள்ளது.

50 சதவிகிதம் மத்திய அரசாங்கமும், 50 சதவிகிதம் மாநில அரசாங்கமும் நிதி ஒதுக்க வேண்டும். இதற்கு மத்திய அரசாங்கம் நிதி ஒதுக்க இப்போது தயாரான நிலையில் உள்ளது. ஆனால் மாநில அரசாங்கம் சென்றமுறை பட்டியலில் 5-வது இடத்திலும், 6-வது இடத்திலும் announce செய்து, இன்றுவரை எந்தச் செயல்பாடுகளும் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்து, உடனடியாக அதற்கான நிதியை ஒதுக்கிட மாநில அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரால் குறிப்பிடப்பட்டுள்ள இடமான வில்லிவாக்கம்-செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம் யார்டு அருகில் இரயில்வே கி.மீ.9/25 முதல் 27 வரை இரயில்வே கடவு எண் 2-க்குப் பதிலாகக் கட்டப்பட வேண்டியது மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் ஆகும். மேற்கண்ட இடமானது சென்னை மாநகராட்சியைச் சேர்ந்தது. இவ்விடத்தில் மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் அமைக்கும் பணி 2001-02 ஆம் ஆண்டு இரயில்வே திட்டப் பணியில் சேர்க்க இரயில்வே துறை அனுப்பியுள்ள 97 இரயில்வே மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலப் பணிகளில் வரிசை எண் 6-ல் இடம் பெற்றுள்ளது. இப்பணிக்கான தனி வரைபடம் மற்ற விவரங்கள் சென்னை



மாநகராட்சியால் 2-4-2002-இல் இரயில்வே துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன் இப்பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 50 சதவிகித நிதி ஒதுக்கீடு செய்வதற்குத் தயாராக உள்ளது. ஒரு மேம்பாலத்திற்கு 8 கோடி ரூபாய் என்ற அளவில் இரண்டு மேம்பாலங்களுக்கும் 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும். அதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய பங்கீடு 8 கோடி ரூபாய். அதை ஒதுக்குவதற்குத் தயாராக இருக்கிறது. C.M.D.A.விலிருந்து அந்தக் கடிதம் சென்று விட்டது. ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், தயாராக இருக்கிறது என்றால் அமைச்சருக்குத் தகவல் சொல்லச் சொல்லுங்கள், மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்கு.

**திரு. து. நெப்போலியன்:** மாநில அரசுதான் கேட்டுப்பெறவேண்டும். மாநில அரசு, கூடிய விரைவில் அதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, அது எப்போது நடைபெறும் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பாலப் பணியின் அவசர, அவசியத்தைக் கருதி, மத்திய இரயில்வே துறைக்குக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. அங்கிருந்து ஒப்புதல் கிடைத்தவுடன் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 143, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

**143—**

### நீதிமன்றக் கட்டடம்

**•3630—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் புதிய குற்றவியல் நடுவர் நீதிமன்றக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி நகரில் இயங்கிவரும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் கடந்த 20 ஆண்டுகளாக வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பழமையான கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்தக் கட்டடத்தில் எழுத்தர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்குத் தனியே அறைகள்கூடக் கிடையாது. இதனால் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க முடியாமல் தேக்க நிலை உள்ளது. மேலும் வட்டாட்சியர் அலுவலகம் இயங்குவதற்குப் போதிய இடம் இல்லாமல் அவர்களும் சிரமப்படுகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகத்தில் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் கட்டுவதற்குப் போதிய இடவசதி உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதியும், வழக்குகளை விரைந்து முடிக்கவும் ஒருங்கிணைந்த புதிய கட்டடத்திலே நடுவர் நீதிமன்றம் இந்த ஆண்டிலேயே கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**(மாண்புகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அரசுக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. எந்த ஒரு நீதிமன்றம் கட்டப்பட வேண்டும் என்றாலும் அல்லது அமைக்கப்பட வேண்டுமென்றாலும் உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தைப் பெற்றுத்தான் அமைக்க முடியும்; கட்ட முடியும். எனவே மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி உயர்நீதிமன்றத்தினுடைய கருத்துரு அனுப்பப்படவில்லை. எனவே அவசியத் தன்மை கருதி, மாண்புமிகு





உறுப்பினருடைய கருத்து உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். உயர் நீதிமன்றத்திடம் கருத்துப் பெற்ற பிறகு, மத்திய அரசு நிதி உதவியை அளித்த பிறகு--வரும் ஆண்டிலே நிதி அளிப்பார்கள் என்ற நம்பிக்கை நிச்சயம் இருக்கின்ற சூழ்நிலையில்--அவருடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 144, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**144—**

## தங்கும் விடுதி

***20865—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி அருள்மிகு லிங்கேஸ்வரர்-கருணாம்பிகை அம்மன் திருக்கோவிலில் தங்கும் விடுதி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், அவிநாசி அருள்மிகு அவிநாசி லிங்கேஸ்வரர் திருக்கோவில் சார்பாக பக்தர்கள் தங்கும் விடுதி கட்ட போதிய இடவசதியில்லாத காரணத்தால் திருக்கோவில் மூலம் தங்கும் விடுதி கட்டும் வாய்ப்புத் தற்சமயம் இல்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை நோக்கி எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொண்டு, அவிநாசி அருள்மிகு லிங்கேஸ்வரர் கோயில் என்பது 'காசியிலே வாசி அவிநாசி' என்று

[2003 மார்ச் 31

சொல்வார்கள். அப்பேற்பட்ட புகழ்பெற்ற அவிநாசி அருள்மிகு லிங்கேஸ்வரர் கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் சித்திரை மாதத் திருவிழாவுக்கு வருகை தருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு எந்தவொரு விடுதியும் இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே நமது அறநிலையத் துறையின் மூலமாக, பொதுமக்கள் நலன் கருதி தங்கும் விடுதி அமைத்துத் தரப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயிலுக்கு ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், நஞ்சை புளியம்பட்டி கிராமத்தில் 8 ஏக்கர் 83 செண்ட் நஞ்சை நிலமும், அவிநாசி கிராமத்தில் 2.46 ஏக்கர் புஞ்சை நிலமும், கட்டடங்கள் 18-ம், மனைகள் 9-ம் உள்ளன. இத்திருக்கோயிலின் ஆண்டு வருவாய் ரூபாய் 22 இலட்சத்து 39 ஆயிரம்தான். எனவே, திருக்கோயிலுக்குச் சொந்தமாகக் காலியாக உள்ள 8 ஆயிரம் சதுர அடி நிலத்தில் உபயதாரர்களால் பக்தர்கள் தங்கும் மண்டபம் கட்டப்படவுள்ளது. அறநிலையத் துறையின் மூலம் தற்சமயம் கட்ட இயலாது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கம். இதை அடுத்த ஆண்டாவது அரசு பரிசீலித்து பொதுமக்களின் நலன் கருதி தங்கும் விடுதி அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத் தனியார் ஒருவர் முன்வந்து உபயதாரர்கள் மூலம் பக்தர்கள் தங்கும் மண்டபம் கட்டுவதற்கு இந்த ஆண்டே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; அதன் மூலம் கட்டப்படும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 145, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.



2003 மார்ச் 31]

**145—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**•8661—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பெட்டைகுளம் கிராமத்தில் இயங்காமலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைச் செயல்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பெட்டைகுளம் கிராமத்தில் இயங்கிவருவது துணைச் சுகாதார நிலையம் ஆகும். அது ஆரம்ப சுகாதார நிலையம் அல்ல. 1965 ஆம் ஆண்டு கட்டப்பட்ட அந்தக் கட்டடம் பழுதடைந்து இருப்பது உண்மைதான். இருந்தாலும் கிராம சுகாதார செவிலியர் அங்கே தங்கி பணிபுரிந்து வருகிறார். இக்கட்டடத்தைப் புதுப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. அதற்கான மதிப்பீடும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக அந்தத் துணைச் சுகாதார நிலையம் புதுப்பிக்கப்படும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்டைகுளத்தைச் சுற்றியிருக்கக்கூடிய ஆர்.சி. நந்தபுரம், பருத்திகட்டி, பெருங்குளம், தரகம்காடு, குமாரபுரம், வாழைத்தோட்டம், உருமங்குளம், கம்மாளபுரம், கம்மாளபுரம் (வடக்கு) ஆகியவற்றைச் சுற்றி 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஒரு கிராமம் பெட்டைகுளம். ஆகவேதான் அதனுடைய நிலையை அறிந்து, அந்தப் பகுதியில் 1965 ஆம் ஆண்டு துணைச் சுகாதார நிலையத்தை அமைத்தார்கள். முன்பு ஆரம்ப சுகாதார நிலையமாக அது பயன்படுத்தப்பட்டதால் மருத்துவர்கள் சென்று வந்துகொண்டிருக்கிறார்கள். அதைத்தான் அந்த ஊர்மக்கள் என்னுடைய கவனத்திற்குச் சொன்னார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறியதைப் போன்று, துணைச் சுகாதார நிலையமாக இருந்தாலும் அதை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தி, அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு அது பயன்படும் வண்ணம் செய்து தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலம் கேட்டுக்கொள்வதோடு,

பழுதடைந்திருக்கும் கட்டடத்தை உடனடியாக மதிப்பீடு செய்து அதை இந்த ஆண்டே கட்டுவதற்கு உறுதியளித்ததற்கும் நன்றியை கூறிக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. அப்படிப் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கிறபொழுது நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 146, திரு. கே.என். சேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**146—**

**மருத்துவமனை**

**•18748—திரு. கே.என். சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி-தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் துவாக்குடி, திருவெறும்பூர் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏதேனும் ஒன்றை 30 படுக்கைகள் கொண்ட நவீன மருத்துவ வசதிகள் கொண்ட மருத்துவமனையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தகுதி உள்ள ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முடிவு எடுத்துள்ளது. துவாக்குடி மற்றும் திருவெறும்பூர் ஆகிய இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் எந்த ஆரம்ப சுகாதார நிலையம்



மேம்படுத்தப்படத் தகுதியுள்ளதோ அதில் ஒன்றை உரிய நோத்தில் பரிசீலித்து அந்த ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்படும்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

வினா 147, திரு. கே.சி. கருப்பணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**147-**

**பூச்சிக் கொல்லி மருந்து**

**•27649—திரு. கே.சி. கருப்பணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போலி பூச்சிக் கொல்லி மருந்துகள் அதிகமாக விற்பனையில் உள்ளதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூச்சி மருந்து சட்டம், 1968, மற்றும் அதன்கீழ் வரும் பூச்சி மருந்து விதிகள் 1971, விதிகளின் கீழ் தரமற்ற/போலி பூச்சி மருந்து தயாரிப்பாளர்கள்/விநியோகஸ்தர்கள்/விற்பனையாளர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தரமான பூச்சி மருந்துகள் மட்டும் விவசாயிகளுக்குக் கிடைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பூச்சி மருந்துகள் என்று சொல்லப்போனால், நுவாக்சிரான், மோனோகுரோடோபாஸ், டைத்தேன் எம் 45, பவிஸ்டின் போன்ற விலையுயர்ந்த மருந்துகளில்தான் அதிகமாகப் போலி மருந்துகள் வருகின்றன. இது அரசுக்குத் தெரியுமா? இதைக் கண்டுபிடித்து சென்ற ஆண்டு எத்தனை நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான பூச்சி மருந்துகள் தருவதை உறுதி செய்கிற வகையில் ஒவ்வொரு உதவி வேளாண்மை இயக்குநர் அலுவலகத்திலும் ஒரு தரக் கட்டுப்பாட்டு அலுவலர் நியமிக்கப்பட்டு பூச்சி மருந்துகளின் மர்திரி எடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாதத்திற்கும் இவ்வளவு பூச்சி மருந்துகளின் மாதிரி எடுக்கப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. 2001-2002-ல் 16,236 மாதிரிகள் எடுக்க வேண்டும். மாதிரி எடுக்கப்பட்டவை 16,296 எண்கள். தரமற்றவை 55 எண்கள்--சட்ட நடவடிக்கை 30 எண்கள்; துறை நடவடிக்கை 25 எண்கள்--என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில தனியார் மருந்து கம்பெனிகள் இந்தப் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தயாரிக்கும்போது அந்த மருந்துகளை எல்லாம் உபயோகப்படுத்துவதால் அந்தப் பூச்சிகள் உடனடியாகச் சாவது இல்லை. அதற்குக் காரணம்; அந்தப் பூச்சி மருந்துகள் தரம் குறைவாக, வீரியம் குறைவாக இருக்கிற காரணத்தினால் விவசாயிகள் அதை ஒரு முறை அல்ல, பல முறை பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் விவசாயிகளுக்குப் பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் தரக் கட்டுப்பாடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். அந்தத் தரக் கட்டுப்பாட்டினுடைய தரத்தை அதிகப்படியாக தற்போதைய விஞ்ஞான யுகத்துக்குத் தகுந்தபடி உயர்த்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா, அரசே இந்த தரக் கட்டுப்பாடுகளை அதிக அளவில் உயாத்தி, நல்ல தரமான மருந்துகளைத் தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பூச்சிக்கும் ஒவ்வொரு பூச்சி மருந்து இருக்கின்றது. அந்தந்தப் பூச்சி மருந்தைத்தான் அடிக்க வேண்டும். விவசாயிகள் பெரும்பாலும் கடைக்காரர்கள் சொல்கிற மருந்தை வாங்கி அடிப்பதால்தான் இதுபோன்ற நிலைமை வருகிறது. ஆகவே ஆங்காங்கே இருக்கக்கூடிய வேளாண்மை விரிவாக்க அலுவலர்களிடம் பயிர்களை என்ன பூச்சிகள் தாக்கியிருக்கின்றன என்பதைக் கேட்டு அறிந்து, அதற்குத் தேவையான மருந்துகளை அடித்தால் பூச்சிகள் நிச்சயமாக ஒழிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருப்பணன்.

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக வெளி மாநிலங்களிலிருந்து வரும் பூச்சி மருந்துகளில்தான் அதிகமான போலி மருந்துகள் வருகின்றன. அதேபோல, கர்நாடகத்திலிருந்து வரும் மருந்துகளில் தமிழில் குறிப்பிடப்படுவதில்லை. கிராமத்திலுள்ள விவசாயிகள் பெரும்பாலும் ஆங்கிலம் அதிகமாகக் கற்றுக்கொள்ளாத காரணத்தினால், படித்து இதனுடைய விவரங்கள் தெரிந்துகொள்ள முடிவதில்லை. அந்தக் குறிப்புகளைத் தமிழில் எழுத அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்து வரக்கூடிய மருந்துகளில் தமிழில் அச்சிடப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்கள். இனிமேல் தமிழில் அச்சடிக்கப்படவேண்டும் என்று அதற்கான ஆணை இடப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஃபாலிடால் போன்ற மருந்துகளைச் சாப்பிட்டுவிட்டு மனிதர்கள்தான் தற்கொலை செய்து கொள்வது அதிகமாக இருக்கிறதே தவிர, பூச்சிகள் அழிவதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட பூச்சி மருந்துகள் தரமானதாக இருக்க வேண்டுமென்பதற்காக பல்வேறு சோதனைகளைச் செய்வதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக இப்படித் தரமான மருந்துகளை அக்ரி-கிளினிக்குகளில் தொடங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அக்ரி-கிளினிக்குகளில் தரமான மருந்துகளைத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்ரி-கிளினிக் தொடங்கும்போது இதுபோன்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பூச்சிக்கொல்லி மருந்துகள் எந்த அளவிற்கு நாம் விற்பனை

செய்தாலும்கூட, அவை தரமான மருந்துகளாக இல்லாமல், விவசாயிகளுடைய பயிர்கள் எல்லாம் பூச்சியினுடைய அந்த வீரியத்திற்கு அழிந்துபோய்க் கொண்டிருக்கிற நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே தமிழக அரசே இப்படிப்பட்ட மருந்துகளை எல்லாம் தயாரித்து, விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய ஒரு திட்டத்தைத் தீட்டி--தனியார் கம்பெனிகளை நம்பிப் பிரயோசனம் இல்லை, அவர்கள் ஏதாவது இலாப நோக்கோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிற காரணத்தினாலே, தமிழக அரசே ஒரு முதலீடு செய்து, அரசே ஒரு தொழிற்சாலையை உருவாக்கி, நல்ல மருந்துகளை விவசாயிகளுக்கு சப்ளை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்களும் நல்ல மருந்தைத்தான் விற்கிறார்கள். எந்தெந்தப் பூச்சிக்கு எந்தெந்த மருந்தை அடிக்க வேண்டும் என்று அதிலே எழுதப்பட்டிருக்கிறது. எந்தப் பூச்சி தாக்கியிருக்கிறதோ அந்தப் பூச்சிக்குத் தகுந்தாற்போலப் பூச்சி மருந்துகள் அடித்தால் அந்தப் பூச்சிகள் அழிக்கப்படுகிற வாய்ப்பு இருக்கும். ஆனால் பொதுவாக நம்முடைய விவசாயிகள் அதைப் பின்பற்றாமல் கடைக்காரர்கள் சொல்வதையே அவர்கள் பின்பற்றுகிற காரணத்தினால் சில நேரங்களில் இப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இனி வரும் காலங்களில் பாதுகாக்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போலி மருந்துகள் என்பதை குறிப்பாக--என்னுடைய கடலூர் மாவட்டத்தில் முந்திரி சீசன் 3 மாதங்கள்தான் இருக்கும். அந்த 3 மாதங்களில் வெளிநாடுகளிலிருந்து வரும் மருந்துகள், இன்னும் பல்வேறு வகையான போலி மருந்துகள் கொண்டு வந்து அந்த வியாபாரிகள் அதை விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு புகைப்படங்களை அதிகமாக முந்திரி காய்த்து தொங்குவது போல, பழங்கள் எல்லாம் தொங்குவது போல, அட்டைகளிலே பிரின்ட் செய்து விவசாய மக்களை ஏமாற்றி--அந்தக் குறிப்பிட்ட 3 மாத காலத்திற்குள்--அதிக இலாபத்தைச் சம்பாதித்து விடுகிறார்கள். அதை நம்பி அப்பாவி விவசாய மக்கள் அந்த





மருந்துகளை வாங்கி முந்திரியில் அடிக்கின்ற காரணத்தினால் அந்த முந்திரியினுடைய பூக்கள் எல்லாம் கருகி மிகப் பெரிய இழப்புக்கு விவசாய மக்கள் ஆளாகி வருகிறார்கள். ஆகவே இதுபோன்ற போலி நிறுவனங்களைக் கண்டுபிடித்து--இப்போது காந்தப்படுக்கைகளைக் கண்டுபிடித்து இருக்கிறார்களே அதுபோல இந்தப் போலி வெளிநாட்டு மருந்துகளை எல்லாம் கண்டுபிடித்து--இந்த அரசு அந்த விவசாயிகளின் வாழ்க்கையில் ஒளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலி மருந்துகள் இருக்கும் என்று சொன்னால் அவற்றைக் கண்டுபிடித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பது மட்டும் அல்ல; உறுப்பினர் அவர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். விவசாயிகளும் இதுதொடர்பாக வேளாண்மை விரிவாக்க அலுவலர்களோடு தொடர்பு கொண்டு இதுபோன்று இருப்பதாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் என்று சொன்னால் அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாதிரிகள் எடுக்கப்பட்டு நடைமுறை ரீதியாக கண்டுபிடிக்கப்பட்டதிலே கடைசியாகப் பார்த்தால் துறை நடவடிக்கை என்பது கிட்டத்தட்ட 30-க்குள்ளாகத்தான் வருகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறை ரீதியாகப் பார்த்தால் விவசாயிகள் பயன்படுத்துகிற அந்த மருந்துகளை விவசாயத்திற்குப் பயன்படுத்தினால் பச்சைப் பூச்சி வருகிறது, அதை அழிப்பதற்கு ஒரு மருந்தை சிபாரிசு செய்த அடிப்படையிலே விவசாயிகள் பயன்படுத்தினால் பச்சைப் பூச்சி இறந்து மஞ்சள் பூச்சி உருவாகிவிடுகிறது. ஆகவே மஞ்சள் பூச்சிக்கு ஒரு மருந்தை அடித்தால் அது சிவப்புப் பூச்சியாக மாறுகிறது. ஆகவே ஒரு பூச்சியைக் கொல்வதற்கு ஒரு மருந்தைக் கண்டுபிடித்து அதை அமல்படுத்தினால் வேறு ஒரு பூச்சி உருவாகிறது. இது கடந்த காலங்களில் தொடர்ந்து இருக்கிற ஒரு பிரச்சினைக்குரிய விஷயமாக இருக்கிறது. ஆகவே இதைப்பற்றி நமது வேளாண் துறை ஆழமாக ஆய்வு செய்து இப்படிப்பட்ட பாதிப்புகள் வராத வண்ணம் மருந்துகளைத் தயாரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதோடு இப்போது இருக்கிற நவீன

[2003 மார்ச் 31

முறையைப் பார்க்கும்போது வேளாண் துறையிலேயே இப்படிப்பட்ட மருந்துகளை உபயோகித்தால் எல்லா வகையிலும் பாதிக்கிறது என்ற ஒரு கருத்தை உருவாக்கி இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று சிபாரிசு செய்கிறீர்கள். ஆகவே அதைப்பற்றிய ஆய்வு எந்த நிலையிலே இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பச்சையாக இருக்கிற பூச்சிக்கு மருந்து அடித்தால் பிறகு மஞ்சளாகப் பூச்சி வந்துவிடுகிறது என்றும், மஞ்சள் பூச்சிக்கு மருந்து அடித்தால் பிறகு சிவப்புப் பூச்சி வருகிறது என்றும் சொல்கிறார்கள். ஆனால் அரசைப் பொறுத்த அளவில் எந்தப் பூச்சியாக இருந்தாலும், எந்தப் பூச்சிக்குரிய மருந்தை அடிக்க வேண்டுமோ, அந்தப் பூச்சிக்குரிய மருந்தை அடித்தால் நிச்சயமாக அந்தப் பூச்சிகள் அழிக்கப்படும். இப்படி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக எந்த இடத்தில் எந்த மருந்தைப் பயன்படுத்தி, இப்படி அடித்ததனால் இப்படி வந்தது என்று குறிப்பாக அவர்கள் சொல்வார்களேயானால் அதற்குரிய தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் வேளாண்மைத் துறை பற்றியும் பூச்சிக் கொல்லிகளைப் பற்றியும் மிக விரிவாக எடுத்துச்சொல்லி வருகிறார்கள். ஆனால் சென்ற ஆண்டு இந்த அவையிலே நான் சொல்லியிருந்தேன். என்னுடைய தோட்டத்திலேயே 3 ஏக்கரா பருத்தி போட்டு இருந்தோம். அதற்குக் களைக் கொல்லி அடிக்க சென்ற வாரம் 3 ஏக்கராவிற்கு 3 லிட்டர் களைக் கொல்லி வாங்கிக் கொடுத்து விட்டு வந்திருந்தேன். இந்த வாரம் ஊருக்கு போகும்போது மூன்று ஏக்கராவில் அனைத்திலும் களை முளைத்திருக்கிறது. அதனால் அந்தக் களைகளை எடுக்க 104 பேரைக் கூலிக்கு அமர்த்தியிருக்கிறார்கள். ஒரு ஆளுக்கு 40 ரூபாய் என்றால் 104 பேருக்கு எத்தனை ஆயிரமாகிறது. 4,160 ரூபாய் கூலி கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். அந்தக் களைக் கொல்லியின் விலை--1,200 ரூபாய். ஒரு விவசாயி எப்படி உருப்படுவான்? கிட்டத்தட்ட 6 ஆயிரம் ரூபாய்க்குப் பருத்திக் கொட்டை முளைப்பதற்கே இவ்வளவு செலவு செய்தால் விவசாயினுடைய நிலைமை என்னவாகும்? இவற்றையெல்லாம் போக்க இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒவ்வொரு ஒன்றியத்திலும்



2003 மார்ச் 31]

இருக்கக்கூடிய வேளாண்மை அலுவலகத்திலே நல்ல தரமான பூச்சி மருந்துகளை விற்பனை செய்ய இந்த அரசு முன்வருமா என்பதனை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய வயலிலே அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு மிகப் பெரிய நட்டம் ஏற்பட்டதாகவும் சொல்லியிருக்கிறார்கள். களை அதிகமாக இருந்து அதற்குக் களைக் கொல்லி மருந்து அடித்து, அதற்கும் போகவில்லை என்று சொன்னார்கள். உழுகிறபோதே, நிலத்தைப் பண்படுத்துகிறபோதே நன்றாகப் பண்படுத்தியிருக்க வேண்டும். இருந்தாலும்கூட உறுப்பினர் அவர்கள் குறிப்பாகச் சொல்லியிருக்கிற காரணத்தினால், அவர்களுடைய நிலத்திலேயே வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் சென்று பார்த்து, என்ன காரணம் என்பதையும், அதற்காக இவர்கள் அடித்த மருந்துகளையும் அறிந்து அதற்குரிய ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 148, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**148—**

**மாணவர்களுக்குச் சலுகை**

**•5556—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வெளியம்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 6, 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்குச் சத்துணவு, இலவசப் பாடநூல், சீருடைகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், வெளியம்பாக்கம் அரசு நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக 2000-2001 ஆம் ஆண்டு முதல் தரம்

உயர்த்தப்பட்டு, இப்பள்ளியில் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும், சத்துணவு உட்கொள்ளும் மாணவர்களுக்குச் சத்துணவு, இலவசப் பாடநூல் மற்றும் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவண்ணாமலை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அதிலும் குறிப்பாக, வந்தவாசி தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. நான் குறிப்பிட்டிருக்கின்ற வெளியம்பாக்கம் அரசு உயர்நிலைப் பள்ளி 2000 ஆம் ஆண்டுதான் நடுநிலைப் பள்ளியாக இருந்து உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. 60 சதவீதம் பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களும், 38 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களும் அங்கே பயின்று வருகிறார்கள். நான் இங்கே வைத்திருக்கின்ற இந்தக் கேள்வி 2001 ஆம் ஆண்டு அரசுக்குக் கொடுக்கப்பட்ட கேள்வியாகும். ஆனால், 2001 ஆம் ஆண்டிலிருந்து இன்றைக்கு வரை மூன்று ஆண்டுகளாகியும்கூட சத்துணவு கொடுப்பது ஆரம்பத்திலே நடுநிலைப் பள்ளியாக இருந்தபோது ஒதுக்கப்பட்ட அளவுதான் இப்போதும் இருக்கிறதே தவிர, உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்ட பிறகும் முறையான அளவில் சத்துணவு அங்கே வழங்கப்படவில்லையென்றும், இதுவரை ஓராண்டு முடிவு பெற்று இப்போது முழு ஆண்டுத் தேர்வு எழுதுகிற இந்த நேரம் நெருங்குகின்ற வரையிலும்கூட, மிகவும் ஏழ்மை நிலையில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்கள் 90 சதவீதம், 99 சதவீதம் படிக்கின்ற அந்த நிலைமையிலும்கூட இதுவரைக்கும் சீருடைகள் வழங்கப்படவில்லை என்றும் தொடர்ந்து அந்தப் பகுதியைச் சார்ந்த மக்கள் என்னிடம் புகார் மனுக்கள் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, இத்தகையதோர் நிலைமை மாற்றப்படுமா, மாணவர்களுக்கு உரிய முறையில் சத்துணவு, இலவசப் பாடநூல், சீருடைகள் வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிற அதே நேரத்தில், இலவசப் பாடநூல் என்பது மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறதா என்பதையும், அப்படியில்லையென்றால், அவர்களுக்கு வழங்குவதற்கு அரசே முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பதிலிலேயே 2000-2001 ஆம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டது என்றுதான் குறிப்பிட்டிருக்கிறேன். ஆக, அதிலே ஒரு மாறுபட்ட கருத்து இல்லை. ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை மட்டும்தான் இப்போது சீருடை வழங்கப்பட்டு வருகின்றது. அதிலேயும் சத்துணவு வழங்குகிறபோது ஜாதி மத பேதம் எதுவுமே பார்த்துச் சத்துணவு வழங்கப்படுவதில்லை. அது, எந்தப் பள்ளியிலே படித்தாலும் ஜாதி பார்த்துச் சத்துணவு சாப்பிடுவதற்கு யாரும் வருவதில்லை. அனைவருக்கும் ஒன்றாகத்தான் — விரும்புகிறவர்களுக்கு — சத்துணவு வழங்குகிறோம். சில பள்ளிக்கூடங்களிலே சீருடை வாங்க வேண்டும் என்பதற்காகச் சத்துணவு சாப்பிட வேண்டுமென்று பெயர் தந்துவிடுகிறார்கள். சில நேரங்களில் அந்தக் கிராமத்திலே இருக்கின்ற சூழ்நிலையின் காரணத்தால், அவர்களுடைய வசதி வாய்ப்பின் காரணத்தால் சாப்பிட மறுத்துவிட்டுச் சீருடையை மட்டும் பெற்றுக்கொண்டு போகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்த வெளியம்பாக்கம் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டு, பிறகு 320 பேர்கள் சத்துணவு சாப்பிடுவதற்குப் பெயர் குறிப்பிடப்பட்டு, தற்போது சாப்பிட்டு வருகிறார்கள். சீருடை, பாடப்புத்தகங்கள் 295 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டு, இப்போது வழங்கப்பட்டு வருவது 203 பேர்களுக்கு மட்டும்தான் இந்தப் பயனை அரசாங்கத்தின் மூலமாகப் பெற்றிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு வழங்கப்படுவதில் சாதிப் பாகுபாடு இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. சீருடைகளையும், இலவசப் பாட நூல்களையும் பெறுவதில் சமூக அடிப்படையிலான அளவுகோலை அரசு வைத்திருக்கிறதா? அது தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் ஏழ்மையில் இருக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கும் வழங்கப்படுமா என்பதை அறிந்துகொள்வதோடு 203 பேர்களுக்கு இலவச பாடநூல்கள், சீருடைகள் அந்தப் பள்ளியில் வழங்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். அது, 'இப்போது

வழங்கப்பட்டுள்ளதா அல்லது இனிமேல்தான் வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசச் சீருடை என்பது ஜூன் மாதம், ஜூலை மாதங்களில்தான் அந்தப் பிள்ளைகளுக்குப் போய்ச் சேரும். கடந்த ஆண்டு ஏற்கெனவே, வழங்கியாகி விட்டது. இந்த ஆண்டு வழங்கப்படுகிற சீருடைகள் கூட்டுறவுத் தையல் சங்கங்கள் மூலமாகத் தைத்துத் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் இந்தச் சத்துணவு வழங்குவதில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்கிற எந்தவிதமான பாகுபாடும், வரைமுறையும் பார்த்து வழங்கப்படுவதில்லை. இரண்டாவது, சத்துணவு சாப்பிடுகிற பிள்ளைகளுக்கு மட்டும்தான் இலவசப் பாடநூல், இலவசமான சீருடைகள் வழங்கப்படும் என்பதை மீண்டும், மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 149, திரு. இரா. திருமாவளவன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**149—**

### உடற்பயிற்சி ஆசிரியர் நியமனம்

***7163—திரு. இரா. திருமாவளவன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கி வரும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) மொத்தமுள்ள 153 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் 16 பணியிடங்கள் காலியாக உள்ளன. காலியாக உள்ள 16 பணியிடங்களை



வரும் கல்வியாண்டின் ஆரம்பத்திற்குள் நிரப்பிட நியமன அலுவலர்களான அந்தந்த மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கி வருகிற உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் கடந்த சில ஆண்டுகளாகவே ஆசிரியர் பணி நியமனம் நிறுத்தப்பட்டுள்ளது. அதற்குச் சொல்லப்படுகிற காரணம் இந்த ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்குகிற பள்ளிகளை எல்லாம் கல்வித் துறையின்கீழ் இயங்குகிற பள்ளிகளாக அந்தப் பள்ளிகளோடு இணைக்கிற முயற்சி அரசிடம் திட்டமாக உள்ளது என்பதால் இந்தப் பணி நியமனத்தை நிறுத்தி வைத்திருப்பதாக உடற் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மத்தியிலே கருத்து நிலவுகிறது. அந்த அடிப்படையில்தான் இது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா அல்லது பணியிடங்களை நிறுத்தி வைப்பதற்கான வேறு காரணங்கள் இருக்கின்றனவா என்பதைத் தங்களின் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1018 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளும் 247 பழங்குடியினர் நலப் பள்ளிகளும் ஆக மொத்தம் 1265 பள்ளிகள் இயங்கி வருகின்றன. ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் சுமார் 2.24 இலட்சம் மாணவர்களும், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் சுமார் 39,000 மாணவர்களும் ஆக மொத்தம் 2 இலட்சத்து 63 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இதில் மாணவிகளின் எண்ணிக்கை மட்டும் 1.25 இலட்சம். இப்பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் உட்பட சற்றேறக்குறைய 8100 ஆசிரியர் பணியிடங்கள் உள்ளன. இப்பணிகளில் 20 உடற் கல்வி இயக்குநர் பணியிடங்களும், 153 உடற் கல்வி ஆசிரியர் பணியிடங்களும் அடங்கும். 20 உடற் கல்வி இயக்குநர் பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன. 153 உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் ஏற்கெனவே சொல்லப்பட்ட 16 பணியிடங்கள் தற்போது காலியாக உள்ளன. இப்பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் நிரப்பப்பட வேண்டும். நடப்பு கல்வி ஆண்டுகளில் ஆரம்பத்திலேயே இப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நியமன அதிகாரிகளான மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இதர ஆசிரியர் பணியிடங்களும், முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள்

[2003 மார்ச் 31

514-ல் 25 பணியிடங்களும் காலியாக உள்ளன. இதில் 3 பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமும், 22 பணியிடங்களைப் பதவி உயர்வு மூலமும் நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல் இளங்கலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் 832-ல் 88 பணியிடங்கள் காலியாக உள்ளன. இதில் 44 பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமும் 44 பணியிடங்களைப் பதவி உயர்வு மூலமும் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் 5,200-ல், 625 பணியிடங்கள் காலியாக உள்ளன. ஓர் ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்ற விகிதத்தில், தேவைப்படும் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களைக் கொண்டு கணக்கிட்டு, நிரவல் மூலம், அதாவது அதிகப்படியாக உள்ள ஆசிரியர்களை, ஆசிரியர்கள் குறைவாக உள்ள இடங்களுக்கு மாற்றம் செய்து அதன்படி கண்டறியப்படும் காலிப் பணியிடங்களை வேலைவாய்ப்பகம் மூலம் நிரப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ள நியமன அலுவலர்களான மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. திருமாவளவன்.

**திரு. இரா. திருமாவளவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்குகிற பள்ளிகளை கல்வித் துறையின்கீழ் இயங்குகிற பள்ளிகளாக மாற்றிட அரசிடம் திட்டம் இருக்கிறதா என மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோல் தற்போது திட்டம் எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிற ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகளில் பணி நியமனம் செய்யப்படுகிறபோது, ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களையே போட்டு நிரப்பப்பட வேண்டும் என்கிற ஒரு மரபு இருந்தது. அதுவே தொன்றுதொட்டு 40 ஆண்டுகாலத்திற்கு மேலே நடைமுறையில் இருந்தது. ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை மாற்றி விட்டார்கள். ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து தேர்ந்து



2003 மார்ச் 31]

எடுக்கப்படுகிறவர்களை நியமிக்கலாம், அதிலே பொதுவாக யார் வேண்டுமானாலும் வந்து பங்கேற்கலாம் என்று மரபை மாற்றி அமைத்துவிட்டார்கள். ஆகவே, மீண்டும் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளில் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களைக்கொண்டு பணி நியமனம் செய்யப்படுகிற வகையிலே அந்தத் திருத்தம் மாற்றியமைக்கப்படுமா என அமைச்சரிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் பணியிடங்கள் தற்போது ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம்தான் நிரப்பப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், இருக்கையில் இல்லை.

வினா எண் 150, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**150—**

### சொகுசுப் பேருந்து

***9680—திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூரிலிருந்து சிங்கம்புனரி வழியாக சென்னைக்கு சொகுசுப் பேருந்து இயக்க தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் திருப்பத்தூரிலிருந்து சென்னைக்கு சிங்கம்புனரி வழியாக சொகுசுப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.கே. உமாதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை

[2003 மார்ச் 31

வணங்குகிறேன், திருப்பத்தூர் ஒரு பேரூராட்சியாகும். சிங்கம்புனரியும் ஒரு பேரூராட்சியாகும். தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்துகள் இயக்க வழி இல்லையென்றால், அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பிலாவது திருப்பத்தூரிலிருந்து இயக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சிங்கம்புனரியிலிருந்து சென்னை நகருக்குத் தடம் எண் 141-ன் மூலமாக 21-9-2001 முதல் சொகுசுப் பேருந்து ஒன்று இயக்கப்பட்டு வருகிறது. அதேபோல் தடம் எண் 138-ன் மூலமாக, திருப்பத்தூரிலிருந்து புதுக்கோட்டை, திருச்சி வழியாக சென்னைக்கு இரண்டு பேருந்துகள்—இரண்டு நடைகள்—இயக்கப்படுகின்றன. ஆகவே, சிங்கம்புனரி பகுதி மக்களும் திருப்பத்தூர் மக்களும் பெரிதும் பலன் அடைகின்ற வகையிலே ஏற்கெனவே பேருந்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் இந்தத் தடம் எண் 141 - சிங்கம்புனரியிலிருந்து சென்னைக்கு வருகிற அந்தப் பேருந்தில், சொகுசுப் பேருந்தில், போதிய அளவில்—இப்போது ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்திலேயே போதிய அளவிற்கு—பயணிகள் அடர்வு இல்லை. இந்த நிலையில் மேலும் கூடுதலாக ஒரு பேருந்து இயக்குவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 151, மாண்புமிகு திரு. அ. அருணாசலம், பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**151—**

**துணை மின் நிலையங்கள்**

***7752—மாண்புமிகு திரு. அ. அருணாசலம்,** (பேரவைத் துணைத் தலைவர்):

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மார்ச் 31]

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஒன்றியத்தில் திம்மூருக்கும் கடலூருக்கும் இடையில் ஒரு துணை மின் நிலையமும் வேப்பூர் ஒன்றியத்தில் தேனூரில் ஒரு துணை மின் நிலையமும் அமைத்து அங்குள்ள மின் விநியோகத்தைச் சீர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்த இரண்டு துணை மின்நிலையங்களையும் வரும் நிதியாண்டில் அமைத்துத் தர முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய 'ஆம்' என்ற பதிலுக்கு என்னுடைய நன்றியை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் சிறு, குறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரத்தை இரத்து செய்கிற வகையில் 100 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் கேட்டிருக்கிற அந்தத் துணை மின் நிலையத்தை கோட்டூர் பகுதியிலும், தேனூர் பகுதியிலும் மின் அழுத்தம் குறைவாக வருவதால்—அங்கே விவசாயத்திற்கு மின்சாரம் கிடைப்பதற்குச் சிரமமாக இருக்கின்றது. ஆகவே கூடிய விரைவிலே அதை—அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று உங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெகு விரைவில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 152, திரு. ஜெ. அன்பழகன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

[2003 மார்ச் 31

**152—**

**கடன் வசதி**

**•22728—திரு. ஜெ. அன்பழகன்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் செயல்பட்டுவரும் நகர கூட்டுறவு வங்கிகளில் வழங்கும் வீட்டு அடமானக் கடன் திரும்பச் செலுத்தும் கால அளவை 5 ஆண்டுகளில் இருந்து 10 ஆண்டுகளாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நகர கூட்டுறவு வங்கிகள் மூலம் வீடு கட்டுதல் மற்றும் வீடு அடமானம் வைத்தல் ஆகியவற்றிற்கு வழங்கப்படும் கடன்களைத் திரும்பச் செலுத்தும் கால அளவிலே, 60 மாத, ஐந்து ஆண்டுகள் தவணையிலேயிருந்து, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு வந்ததற்குப் பின்னால் 180 தவணைகளாக, 15 ஆண்டுகளுக்கும் மற்றும் 120 தவணைகளாக 10 ஆண்டுகளுக்கும் நீட்டித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மூலமாக ஆணையிடப்பட்டிருக்கிறது என்பதைப் பணிந்து அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் இயங்கிக் கொண்டிருக்கிற தனியார் வங்கிகள், தேசவுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எல்லாம் இன்றைக்குப் போட்டிபோட்டுக் கொண்டு, வீடு கட்டுவதற்கும், வீடு வாங்குவதற்கும், அதேபோல், திருமணச் செலவு, வியாபாரச் செலவு இப்படி பல வகையிலும் கடன்களை, கால அளவுகளை அதிகமாக்கித் தந்துகொண்டிருக்கிறார்கள். நம்முடைய நகர கூட்டுறவு வங்கிகளில் இன்றைக்குத் தேவைக்கு அதிகமாக





Surplus fund என்று சொல்கிற அளவில் பல வகையில் கோடிக்கணக்கான ரூபாய் இன்றைக்கு முடக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இங்கு பதிலுரையிலே 60 மாத கால அளவை நகர கூட்டுறவு வங்கிகள் 10 ஆண்டுகளுக்கும் அதற்கும் மேலாகவும் மாற்றியிருப்பதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கும் சென்னை நகரிலே உள்ள கூட்டுறவு வங்கிகளில் 60 மாத கடன்களைத்தான் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஒரேயொரு வங்கிக்கு மட்டும் 7 ஆண்டு காலம் வழங்கலாம் என்று இணைப் பதிவாளர் அனுமதி தந்திருக்கிறார். மீதி உள்ள வங்கிகளுக்கெல்லாம் அந்த அனுமதி கிடையாது. ஆகவே, சென்னை நகர கூட்டுறவு வங்கிகள் இப்படித் தொடர்ந்து இயங்கிக் கொண்டு இருந்தால் வரும் ஆண்டுகளில் அந்த Surplus fund அதிகமாக இருக்கிற காரணத்தால் நஷ்டத்திற்கு வரவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும். ஆகவே, தமிழக முதல்வர் இதிலே கவனம் செலுத்தி, ஏழையெளிய மக்கள் மட்டுமல்ல, நடுத்தர குடும்பங்களில் உள்ளவர்கள் இன்றைக்கு மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வீடு கட்டவோ அல்லது வீடு அடமானம் வைக்கவோ கூட்டுறவு வங்கிகளை அணுகுகிறபோது 60 மாத கடன்தான் தரப்படும் என்று அதிகாரிகள் எல்லாம் சொல்லுகிற காரணத்தினால் சென்னை நகரிலே உள்ள கூட்டுறவு வங்கிகள் மூலமாக இந்தக் கடன் வழங்கும் திட்டம் அரசுக்கு இருக்கிறதா என்பதற்காக ஒரு அரசாங்க ஆணை வெளியிடப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர வங்கி உறுப்பினர்களுக்கு வீடு கட்டுகின்ற கடனும், வீடு அடமானக் கடனும் அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஐந்து இலட்சம் பெறுகிறவர்கள் 60 மாதங்களிலே திருப்பித்தர வேண்டியது 15 ஆயிரம் வரை மாதத் தவணையாகிவிடுகிறது என்பதனால் அந்தப் பகுதியிலே இருக்கிறவர்களும், கூட்டுறவாளர்களும் தெரிவித்த கருத்துக்கு இணங்கத்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களால் இப்பொழுது 180 தவணைகளாக 10-12-2002-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இங்கே உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போன்று அப்படி அங்கே நடைபெற்றிருக்குமானால் அதன்மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவித்தவாறு அந்த வங்கிகளில் எல்லாம் வழங்கப்படும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இது கூட்டுறவு வங்கிகளுக்கு மட்டும் பொருந்துமா அல்லது வீட்டு வசதி சங்கம் Housing Society மூலம் தரப்படும் கடன்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்துமா என்றும் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்படுகின்ற கடன்களுக்கு எல்லாம் இப்பொழுது அதிக Interest rate இருந்து கொண்டிருக்கிறது. தனியார் வங்கிகளில் இப்பொழுது 6½%-க்கு எல்லாம் கடன் கொடுத்துக்கொண்டிருக்கிற காரணத்தாலே தனியார் வங்கிகளுக்கு ஏற்ப இந்தக் கூட்டுறவு வங்கியால் தரப்படும் கடனுக்கும் 6½% வட்டி மட்டுமே வசூலிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கோரிக்கைகள் எல்லாம் வந்துகொண்டிருக்கின்றன. இதற்குத் தக்கதொரு நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. முறையாகத் தக்கதொரு அறிவிப்பு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 153, திரு. ப. இளவழகன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

153—

### குடிநீர் வரி

***1677—திரு. ப. இளவழகன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



பேரூராட்சிகளில் குடிநீர் இணைப்புப் பெறுவதற்கு ஒவ்வொரு பேரூராட்சியிலும் வெவ்வேறு தொகை வசூல் செய்யப்படுவதால், தமிழகம் முழுவதும் ஒரே தொகை நிர்ணயம் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகம் முழுவதும் உள்ள 611 பேரூராட்சிகளிலும் வீட்டு இணைப்பிற்காக ஒரே மாதிரியான தொகை நிர்ணயம் செய்ய சாத்தியமில்லை.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சிகளில் வீடுகளுக்குக் குடிநீர் இணைப்புப் பெறுவதற்கு ஒவ்வொரு பேரூராட்சியிலும் வெவ்வேறு தொகையை நிர்ணயம் செய்து முன்வைப்புத் தொகையாக வசூல் செய்கின்றார்கள். உதாரணத்திற்கு, பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் பேரூராட்சியிலே முன் வைப்புத் தொகை 4 ஆயிரம் என்றும், பெரம்பலூர் பேரூராட்சியில் முன்வைப்புத் தொகை 3 ஆயிரம் என்றும், உடையார்பாளையம் பேரூராட்சியில் முன்வைப்புத் தொகை 4,250 ரூபாய் என்றும் இப்படி ஒவ்வொரு பேரூராட்சியிலும் வெவ்வேறு தொகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறு ஆய்வு செய்து தமிழகம் முழுக்க அனைத்துப் பேரூராட்சிகளிலும் குடிநீர் இணைப்புப் பெறுவதற்கு ஒரே சீரான முன்வைப்புத் தொகையை நிர்ணயம் செய்து வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளின் குடிநீர் வழங்கும் திட்டப் பணிகளுக்கு ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ஒரு தனிப்பட்ட தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது. காரணங்கள்; அரசு மானியம், அரசு கடன், ஆயுள் காப்பீட்டுக் கழகம் மற்றும் உலக வங்கித் திட்டத்தின்கீழ் கடன் பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும்போது வட்டியுடன் செலுத்த வேண்டும். பராமரிப்புக் கட்டணம், மின் கட்டணம், குடிநீர்த் திட்டப் பணிகளுக்குப் பிரிவுப் பணி, அலுவலகத்தினுடைய ஊதியக் கட்டணம் மற்றும் இதர திட்டங்களுக்கான செலவுக் கட்டணம் போன்று, அந்தந்தப் பேரூராட்சிகளில் குடிநீர் மாதாந்திரக் கட்டணம், டெபாசிட் தொகை நிர்ணயம் செய்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் மூலம் தீர்மானங்கள்

நகராட்சிகளுக்கு ஒரு அடிப்படையிலும், பேரூராட்சிகளுக்கு ஒரு அடிப்படையிலும், எளவுள்ள அதனுடைய நிலையைக் கருத்தில்கொண்டு அந்த அடிப்படையிலே அதிகப்படியான இந்த வசூலை முன்வைப்பு நிதியானாலும் சரி, மற்றதானாலும் செய்யாமல் இருப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளிலே குடிநீர்க் கட்டணம், மாதத்திற்குக் குறைந்தபட்சமாக 50 முதல் 100 ரூபாய் வரை வீட்டு இணைப்புக்கு; அப்படி அல்லாததற்குக் குறைந்தபட்சம் 100 ரூபாய் முதல் அதிகபட்சமாக 200 ரூபாய் வரை; நிர்ணயம் செய்யப்பட்டு வாங்கப்பட்டுள்ளது. இந்த முறையில்தான் பேரூராட்சிகளில் குடிநீர் இணைப்புக்குண்டான கட்டண வரி வசூல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 154, திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**154—**

### கணினிமயமாக்குதல்

**•9762—திரு. வி. ஜெயராமன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்வேறு ஊரக வளர்ச்சித் திட்டங்களின் செயல்பாட்டினையும், நிதிப் பயன்பாட்டினையும் சரிவரக் கண்காணிக்க ஏதுவாக அனைத்து ஊராட்சி ஒன்றியங்களையும் கணினி மயமாக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் இதுவரை அரசு நிதியிலிருந்து 130 ஊராட்சி ஒன்றியங்களும், ஒன்றிய பொது நிதியிலிருந்து 73 ஊராட்சி ஒன்றியங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. அரசின் நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு மீதமுள்ள ஊராட்சி ஒன்றியங்களையும் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.





**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தமிழகத்தைச் சிறந்த மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று சபதம் ஏற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயலாற்றிக்கொண்டு இருக்கிற இந்த நல்ல நேரத்திலே, மீதமுள்ள ஒன்றியங்களையும் விரைவில் அரசு நிதியிலிருந்தோ அல்லது சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தோ கணினிமயமாக்கும் திட்டத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய பொது நிதியிலிருந்து கணினி வாங்குவதற்கு போதிய நிதி வசதி இல்லையெனத் தெரிவிக்கப்பட்டால், அரசு அதற்கான நிதி உதவி அளிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 155, திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**155—**

### மரக்கன்றுகள் வளர்ப்பு

**•20984—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனக்குழுவால் காடுகளில் நடப்படும் மரக்கன்றுகளுக்குத் தண்ணீர் விடாததால் அவை பட்டுப்போய் விடுகின்றன என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வனப்பகுதிகளில் வனக்குழுவால் மரக்கன்றுகள் ஏதும் நடவு செய்யப்படுவதில்லை.

வனத்துறையின் மூலம்தான் மரக்கன்றுகள் நடவு செய்யப்படுகின்றன. நடப்பட்ட மரக்கன்றுகளுக்கு மூன்று ஆண்டுகள் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பராமரிப்புப் பணிகளின்போது பட்டுப்போன கன்றுகளுக்குப் பதிலாக புதிய மரக்கன்றுகள் நடப்படுகின்றன.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் நெல்லைசீமைக்கு வருகை தந்தார்கள். ஆலங்குளம் சட்டமன்றத்திற்கு உட்பட்ட மானூர் கூட்டுக்குடிநீர்த் திட்டத்திற்கு 79 கோடி நிதியும் ஒதுக்கி, அதற்கு அடிக்கல் நாட்டி மானூர் பகுதி மக்களின் தாகத்தை தீர்த்த மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்திய துணைக் கண்டத்திலுள்ள நிலப்பரப்பில் 33 விழுக்காடு காடுகள் இருக்கவேண்டும். ஆனால், தமிழகத்தில் 19 விழுக்காடு காடுகளே உள்ளன. அதை மேம்படுத்துகின்ற வகையில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் வனக்குழுவால் நடப்படும் மரக்கன்றுகளுக்குத் தண்ணீர் விடாமல், மழை பொய்ப்பதால் பட்டுப் போய்விடுகின்றன. அவ்வாறு பட்டுப் போகாமலிருக்க ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தண்ணீர் பாய்ச்சுவதற்கும், இந்தப் பணியை அந்தப் பகுதிகளிலுள்ள சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைக்கவும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறு, காட்டுப் பகுதிகளில் அமைப்பது சிரமம். அப்படிக் கிணறு அமைக்கப்பட முடியுமா என்பதை ஆய்வு செய்ய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இப்போது, உத்தரவிட்டிருக்கிறது. அப்படி ஆழ்குழாய்க் கிணறு அங்கு success ஆக நிறுவப்பட்டால் உறுப்பினர் அவர்களுடைய திட்டம் நிறைவேற்றப்படும். ஆனால், இப்போது பருவமழையை ஆதாரமாக வைத்துத்தான் காடு வளர்ப்புத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் மூன்றில் ஒரு பங்கு காடு இருக்க வேண்டும் என்று. ஆனால் ஆறில் ஒரு பங்குதான் தமிழ்நாட்டில் காடு இருந்தது. அம்மா அவர்கள் 1994 ஆம் ஆண்டு இதை உயர்த்த வேண்டுமென்று ஒரு திட்டம்



தயாரித்து ஜப்பான் நாட்டு கூட்டுறவு வங்கியின் உதவியுடன் காடு வளர்ப்புத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஜி. இராஜேந்திரன்.

**திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எங்கள் பகுதியில் 3 வனக் குழுக்கள் செயல்படுகின்றன. என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து, அந்தப் பகுதியிலுள்ள ருக்மிணி அம்மாள்புரத்திற்கு, ஒதுக்கினேன். அந்தப் பகுதியில் நல்ல தண்ணீர் உள்ளது. ஆகவே, அதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, அந்த இடங்களில் உள்ள மரங்கள் பட்டுப் போகாமல் தடுக்க கண்டிப்பாக ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்துத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** தலைவர் அவர்களே, தண்ணீர் வசதி இருந்தால் நிச்சயமாக ஆழ்குழாய்க் கிணறு அமைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.

**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனக் குழுக்களால் நடப்படும் மரக் கன்றுகளை நல்ல முறையில் வளர்ப்பதற்காக அவை தனியாருக்கு விடப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாருக்கு விடப்படுகின்ற சாத்தியக்கூறுகள் இல்லை. காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வனத் துறையே நல்ல வீரியமான செடிகளை, நல்ல விதைகளை உற்பத்தி செய்து தனியாரை விடச் சிறப்பாக இப்போது கன்றுகளைப் பராமரித்து வருகிறது, உற்பத்தி செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடு வளர்க்கிற இந்தத் திட்டத்தில் பொதுவாக மலைப்பகுதி மற்றும் சாலையோரங்களில் மட்டும், தண்ணீர் வசதி இல்லாத பகுதிகளிலே

நட்டு பிறகு தண்ணீர் ஊற்ற முடியாமல் போகிற நிலையெல்லாம் வந்துவிடுகிறது. ஆகவே, இதற்கு 1991-96ஆம் ஆண்டு கால கட்டங்களிலே பார்த்தால் ஒவ்வொரு ஏரியிலும் கருவேல மரங்களை நிறைய நட்டார்கள் அதனால் பஞ்சாயத்துக்கும் வருவாய் வந்தது; அரசுக்கும் வருவாய் வந்தது. அதோடு மூன்றில் ஒரு பங்கு காடு இருக்க வேண்டுமென்கிற அந்த இலக்கை ஒட்டியும் நாம் போய்க் கொண்டிருந்தோம். ஆனால் அந்தத் திட்டம் நடுவிலே கைவிடப்பட்டு, பிறகு இப்போது மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, பொதுவாக ஏரிகளிலே மரங்களை நட்டு வளர்ப்பதற்கு அரசு முன்வருமேயானால் அந்த மரங்களைக் காப்பாற்றக்கூடிய வாய்ப்பும் அதிகமாக இருக்கிற காரணத்தினால் ஏரிகளிலே தண்ணீர்ப் பிடிப்பு இடம் போக, மற்ற பகுதிகளில் நடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஜப்பான் உதவியோடு வனக் காடுகள் வளர்ப்பதற்கான திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்திலே, மழை இல்லாது வறட்சியிலே பாதிக்கப்பட்டிருக்கிற இந்த நேரத்தில், இருக்கின்ற நீரைச் சிறப்பாகப் பயன்படுத்துகின்ற வகையிலே சொட்டு நீர்ப்பாசன முறையை அந்தப் பகுதியிலே அமைத்து, அந்த நிதியுதவியிலே அந்த, காடு வளர்ப்புத் திட்டத்தைச் செம்மையாக நடத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பருவகாலத்திலே பெய்கின்ற மழை நீரைச் சேமித்து வைக்கக் கசிவுநீர் குட்டை மற்றும் Check dams போன்றவை கட்டப்பட்டிருக்கின்றன. வறட்சிக் காலத்தில் தண்ணீர் வற்றிப் போய்விடுகிறது. வறட்சிக் காலத்தில்தான் சில செடிகள் தண்ணீர் இல்லாது பழுது அடைகின்றன; பட்டுப்போகின்றன. போதுமான தண்ணீர் இருந்தால்தான் சொட்டு நீர்ப்பாசன முறையையும் கையாள முடியும். முன்னால் பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல ஆழ்குழாய்க் கிணறு போட்டால்தான் சொட்டு நீர்ப்பாசனத்திலும் வெற்றி காண முடியும். தண்ணீர் ஆதாரம் இருந்தால், அப்படியிருக்கின்ற இடத்தில் ஆழ்குழாய்க் கிணறு போடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த அளவு தண்ணீர் கிணற்றிலே இருந்தாலும்கூடச் சொட்டு நீர்ப் பாசனம் மிகவும் பயன்படும். உதாரணமாகத் தென்னைக்கு நீங்கள் 6 மணி நேரம் மின்சாரம் தருகிறீர்கள். போதிய அளவு மின்சாரம் இல்லை என்று சொன்னால் இரண்டு மணி நேரத்தில் எல்லாத் தென்னை மரங்களுக்கும் சொட்டு நீர்ப்பாசனம் மூலமாகத் தண்ணீர் கொடுக்க முடியும். எனவே, ஆழ்குழாய்க் கிணறு இருந்தால் மட்டுமே சொட்டு நீர்ப் பாசனம் பயன்படும் என்பது சரியான வாதம் அல்ல. எனவே, கிணற்றிலேயிருந்தும் சொட்டு நீர்ப்பாசனம் கிடைக்கும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிற வரைக்கும் பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளில், காட்டைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கிணறுகளில் வறட்சிக் காலத்தில் தண்ணீர் இல்லாமல் போய் விடுகிறது. அதற்குத்தான் கசிவு நீர்க் குட்டை, Check dams போன்றவை கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றில் தண்ணீர் இருக்கும்போது அந்தத் தண்ணீரின் மூலமாகச் செடிகளுக்குத் தண்ணீர் விடப்படுகின்றது. உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பற்றி விரிவாக ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

### (பட்டியல்கள் 10 மற்றும் 11)

### (பத்தாவது பட்டியல்)

**1—**

### ஒணான் செடிகளை அகற்றுதல்

**வினா 7920—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2003 மார்ச் 31

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஏரியில் ஒணான் செடிகளை அகற்றிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) செஞ்சி தொகுதி, வல்லம் ஏரியில் ஒணான் செடிகளை அகற்றிட அரசிடம் திட்டம் ஏதுமில்லை

(ஆ) பதில் எழவில்லை.

2—

**வாய்க்கால்**

**வினா 15224—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, கொளகம்பட்டி வாய்க்கால் வெட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

அரூர் தொகுதி, கொளகம்பட்டி வாய்க்கால் வெட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் வாணியாறு அணையில் மழைக்காலத்தில் கிடைக்கும் வெள்ள உபரி நீரை வாணியாறு அணையின் இடதுபுறக் கால்வாய் நெடுகை 14.30 கி.மீட்டரிலிருந்து ஒரு கிளைக் கால்வாய் மூலம் ராமியம்பட்டி செக்கான் ஏரி வரையில் உள்ள 16 ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு ரூ.616 இலட்சங்களுக்கு (2001-2002) ஒரு முதல் நிலை அறிக்கை Preliminary Report தயாரிக்கப்பட்டு துறையின் பரிசீலனையில் உள்ளது. இம்முதல் நிலை அறிக்கைக்கு ஒப்புதல் பெறப்பட்டால் விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்போது அரூர் தொகுதியிலுள்ள கொளகம்பட்டி ஏரிக்கு நீர் வழங்க வாய்க்கால் வெட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.



2003 மார்ச் 31]

3—

**பாசன வசதி**

**வினா 17260—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் கொல்லங்கரம்பை ஏரி சருக்கையில் உடன் தண்ணீர் வடிய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், கொல்லங்கரம்பை ஏரிக்கு வரத்து வாய்க்கால் 1998-1999 ஆம் ஆண்டு தூர் வாரப்பட்டது. ஏரியின் எதிர்வாயில் தற்போது நீர்ப்பிடிப்பு இல்லாததால் கொல்லங்கரம்பை ஏரியில் ஏற்கனவே உள்ள வடிகால் கட்டுமானம் வழியாக (Through existing surplus weir) அதிகப்படியான தண்ணீர் உடனடியாக வடிந்து விடுகிறது. எனவே தற்போதுள்ள வடிகால் வசதியே போதுமானது.

4—

**விளை நிலங்கள்**

**வினா 18311—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி கொள்ளிடம் ஒன்றியம் வேட்டங்குடி ஊராட்சியில் உள்ள கேவரொடை கிராமம் மற்றும் வாடி கிராமத்தில் சுமார் 400 ஏக்கர் நிலம் தரிசாக உள்ளது. பொதுப் பணித் துறையின் மூலம் ஒரு 20 எச்.பி. பம்ப் செட், வாலி ஓடை ஆற்றின் வடிகால் கரையில்

அமைத்து கடலில் உபரியாக கலக்கும் தண்ணீரை பாசனத்திற்கு இறைத்து கொடுத்து தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதும் தற்போது ஆய்வில் இல்லை.

(ஆ) மேற்கண்ட திட்டம் பற்றி சட்டமன்ற உறுப்பினர் மாவட்ட ஆட்சியர் நாகைக்குக் கடிதம் எழுதியிருந்ததின் பேரில் மாவட்ட ஆட்சியர் நாகை, கண்காணிப்புப் பொறியாளர் தஞ்சாவூர், உபகோட்டப் பொறியாளர் சீர்காழி, சட்டமன்ற உறுப்பினர் சீர்காழி ஆகியோர் தளஆய்வு செய்த பொழுது மின் மோட்டார் அறை, மின்மோட்டார் தளவாடங்கள், பாசன வாய்க்கால்கள் அமைத்தல் போன்றவை மற்றும் மின்சாரக் கட்டணம் போன்றவற்றை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தார்கள் ஏற்க முன்வர தேவையான தீர்மானம் இயற்றவேண்டும் என்றும், அவ்வாறு தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் வெள்ள நீரைக் கொண்டே பாசனம் செய்து கொள்ள வேண்டும் என்றும், பாசன நீர் அளிப்பதற்கு எவ்வித உறுதி மொழியும் தர இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

5—

## பாசனம்

**வினா 25694—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, ஆழியார் வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சி, மற்றும் வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகளில் உள்ள விவசாயிகளுக்குத் தொடர்ந்து 3 மணி நேரம் தண்ணீர் பாய்வது இல்லையென்பதை அரசு அறியுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதிக்குட்பட்ட ஆழியார் வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் பரம்பிக்குளம்-ஆழியார் திட்ட ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டுள்ள நிலங்களுக்கு, பாசன நீர், பாசன காலத்தில் அணைக்கட்டில் உள்ள நீர் இருப்புக்கு ஏற்ப முறையான விதிமுறைக்குட்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மூன்று மணி நேரத்திற்குக் குறைவாக எந்தக் கால்வாய்களிலும் பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கப்படுவதில்லை.

6—

## கட்டட வசதி

**வினா 10538—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட குள்ளஞ்சாவடி ஊராட்சியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நூலகத்திற்கு அரசு புதிதாக ஒரு கட்டடம் கட்டித் தர ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட குள்ளஞ்சாவடியை சார்ந்த வழுதலாம்பட்டு ஊராட்சியில், வழுதலாம்பட்டு ஊர்ப்புற நூலகம் வாடகை இல்லாத இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்குக் கட்டடம் கட்ட காலிமனை கிடைக்கப் பெறாததால், சொந்தக்கட்டடம் கட்ட இயலவில்லை.

[2003 மார்ச் 31

7—

## நூலகம்

**வினா 18954—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்நிதியாண்டில் சங்கராபுரம் தொகுதியில் நூலகம் இல்லாத கிராமங்களில் எத்தனை கிராமங்களில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யும்?

**விடை—**

**மாண்புமிகு செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் 115 கிராமங்கள் உள்ளன. அவற்றில் 8 கிராமங்களில் பொது நூலகத் துறை சார்ந்த நூலகங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. இந்நிதியாண்டில் புதிதாக நூலகம் ஏதும் திறக்கப்படவில்லை. அத்தொகுதியில் மக்கள் தொகை 1000க்கு மேல் இருக்கும் மற்ற கிராமங்களில் அக்கிராமங்களைச் சார்ந்த பொதுமக்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளை பூர்த்தி செய்து தரும் பட்சத்தில் ஒரு நூலகம் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்:

(1) நூலகம் இயங்க வாடகையற்ற உறுதியான கட்டடம் அளிக்கப்படவேண்டும்.

(2) வருங்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலிமனை விழுப்புரம் மாவட்ட நூலக ஆணைக் குழு பெயருக்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தரப்படவேண்டும்.

(3) 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

(4) ரூ.2000 பெறுமானமுள்ள தளவாடங்கள், நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

(5) தலா ரூ.1000 வீதம் செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்படவேண்டும்.



2003 மார்ச் 31]

8—

## துணை சுகாதார நிலையம் புதுப்பித்தல்

**வினா 24912—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மற்றும் ஒன்றியம் வேம்பனேரியில் உள்ள துணை சுகாதார நிலையம் பழுதடைந்து உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வேம்பனேரி துணை சுகாதார நிலையம், 1985 ஆம் ஆண்டு டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்டது. இதில் ஏற்பட்ட பழுதுகள் பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்டத்தின்கீழ் ரூ.35773/-செலவில் பழுதுபார்க்கப்பட்டுள்ளது.

9—

## பொது நூலகம்

**வினா 25497—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியத்தில் வடவாளம் ஊராட்சி, வடவாளத்தில் பொது நூலகம் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2003 மார்ச் 31

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் ஊராட்சி, வடவாளம் கிராமத்தில் 26-8-1997 முதல் ஊர்ப்புற நூலகம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**10—**

**நூலகம் மற்றும் கணினி வசதி**

**வினா 27160—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு கூடுதலாக நூலக வசதி மற்றும் கணினி வசதிகளை அரசு ஏற்படுத்தித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது தேவை எழவில்லை.

**11—**

**இண்டர்நெட் இணையம்**

**வினா 27230—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட தலைமை நூலகங்களில் இண்டர்நெட் இணையம் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2003 மார்ச் 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட மைய நூலகத்தில் தற்போது கணிப்பொறி அமைக்கப்பட்டுள்ளது. கணிப்பொறியில் நூல் தகவல்கள் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விவரங்கள் உள்ளீட்டுப் பணிகள் முடிக்கப்பட்டதும், கணிப்பொறியின் திறன் அதிகப்படுத்தப்பட்டு வருங்காலத்தில் இணைய வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**12—**

**மழலையர் பள்ளிக்கூடம் அமைத்தல்**

**வினா 27382— திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் நெடுங்கல்புதூர் கிராமத்தில் மழலையர் பள்ளிக்கூடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு மழலையர் பள்ளிகளை ஏற்படுத்துவது இல்லை. ஆதலால் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**13—**

**சலவைப் பெட்டி வழங்குதல்**

**வினா 27782—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம் வாகைக்குளம் மற்றும் பெரிய சோழாண்டி பகுதியில் சலவைப் பெட்டி கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பா சுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், வாகைக்குளம் மற்றும் சோழாண்டி பகுதியில் சலவைப் பெட்டி கோரி எவரும் விண்ணப்பம் செய்யவில்லை. எனவே, இப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு சலவைப் பெட்டிகள் வழங்கும் வினா எழவில்லை.

**14—**

## கட்டடத் தொழிலாளர்

**வினா 25109—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 2001-2002 ஆம் ஆண்டில் கட்டடத் தொழிலாளர்கள், கட்டடத் தொழிலில் வேலை செய்யும்போது தவறி விழுந்து இறந்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுக்கு அரசு அளித்த நிவாரணம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கட்டடத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களில் பணியில் இருக்கும் போது தவறி விழுந்து இறந்தவர்கள் 16 பேர்.

(ஆ) தவறி விழுந்து இறந்த மேற்படி 16 நபர்களுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் மொத்தம் ரூபாய் பதினாறு இலட்சம் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற்று, தொழிலாளியின் நியமனதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஈமச்சடங்கு உதவி நிதியாக தலா ரூபாய்



இரண்டாயிரம் வீதம், மொத்தம் ரூபாய் முப்பத்தி இரண்டாயிரம் வழங்கப்பட்டுள்ளது.

**15—**

## பேருந்து வசதி

**வினா 9685— திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி, பக்கம்பட்டி, தாளப்பள்ளம் வரை செல்லும் நகரப் பேருந்து 4-ஐ நல்லானூர், கோணங்கிஹள்ளி, ஏறுபள்ளி வரை நீட்டித்து இயக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் டி4 கீழ்க்கண்ட வழித் தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன:—

1. தருமபுரி - நாகதாசம்பட்டி 28 கி.மீ. 4 நடைகள்
2. தருமபுரி - ஆலமரத்துப்பட்டி 20 கி.மீ. 10 நடைகள்
3. தருமபுரி - பாப்பாரப்பட்டி 16 கி.மீ. 2 நடைகள்

மேற்படி தடத்தில் ஆலமரத்துப்பட்டி வரை செல்லும் நடைகளை நல்லானூர், கோணங்கிஹள்ளி மற்றும் ஏறுபள்ளி வரை நீட்டித்து இயக்கினால், கால நேரங்கள் மாறவும், இயக்கப்பட்ட நடைகள் குறையவும் வாய்ப்புள்ளது. இதனால், ஏற்கெனவே பேருந்து வசதி பெற்று வரும் பள்ளி மாணவ, மாணவிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். மற்றும் பேருந்து வசதி கோரப்பட்ட கிராமங்கள் அனைத்தும் ஏற்கெனவே தருமபுரி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் டி17 மற்றும் டி46-ன் மூலம் பேருந்து வசதி பெற்றுள்ளதால், தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி, பக்கம்பட்டி, தாளப்பள்ளம் வரை செல்லும் நகரப் பேருந்து 4-ஐ நல்லானூர், கோணங்கிஹள்ளி, ஏறுபள்ளி வழித்தடத்தில் பேருந்தை நீட்டித்து இயக்கிட இயலாத நிலையுள்ளது.

16—

### பேருந்து நிறுத்தம்

**வினா 11006—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், பழவூர் ஊராட்சி, கே.சி. பழவூர் புதிய காலனி பகுதியில் பேருந்துகள் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

காவல்கிணறு விலக்கிலிருந்து பழவூர் வழியாக கன்னியாகுமரிக்குச் செல்லும் சாலையிலிருந்து பிரிந்து உட்புறமாக சுமார் 1 பர்லாங் தூரத்தில் கே.சி. பழவூர் காலனி அமைந்துள்ளது. இந்த காலனி சுமார் 80 வீடுகளும் மக்கள் தொகை தோராயமாக 250-க்குள்ளும் கொண்டது. தற்போது பிரதான சாலையில், அதாவது கே.சி. பழவூர் காலனியிலிருந்து இரு திசைகளில் 1 பர்லாங் தூரத்தில் உள்ள பழவூர் விலக்கு மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் ஏற்கெனவே பேருந்து நிறுத்தம் உள்ளது. இந்நிறுத்தங்களில் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் ஏற்கெனவே நின்று செல்கின்றன. கே.சி. பழவூர் புதுகாலனி பேருந்து நிறுத்தமாக அனுமதிக்கப்பட்டு அவ்வழியாகச் செல்லும் நாகர்கோவில் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்து நகரப் பேருந்துகளும் நின்று செல்கின்றன.

17—

### மின் அழுத்தம்

**வினா 10855—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன் விளை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12 பகுதியில் மின்னழுத்தம் குறைவாக உள்ளதை அரசு அறியுமா?



(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை 12-வது வார்டு பகுதிக்கு (மருத்துவ காலனி) தற்பொழுது மின்சாரம் திசையன்விளை மின் மாற்றி எண் 3-லிருந்து வழங்கப்பட்டு வருகின்றது. மின்னழுத்தக் குறைபாடு கண்டறியப்பட்டதால் 2 மின் கம்ப இடைவெளி தூரம் 7/2.59 ஏ.சி.எஸ்.ஆர். மின் கம்பி அமைத்தும் 27 அடி உயரமுள்ள இரண்டு மின் கம்பங்கள் நட்டும், ஒருமுனை மின்சாரத்தை மும்முனை மின்சாரமாக மாற்றியும் ரூ.24,225 செலவில் 22-6-2002 அன்று விரிவாக்கப் பணிகள் முடிக்கப்பட்டு மின்னழுத்தம் குறைபாடு நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டது. தற்போது மின்னழுத்தம் 220 வோல்டாக உள்ளது.

18—

### மின்சாரக் கம்பங்களை இடமாற்றம் செய்தல்

**வினா 10885—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, புதூர் கிராமத்தில் தேர்பவனிக்கு இடையூறாக உள்ள மின்சார கம்பங்களை இடமாற்றம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், அச்சம்பாடு ஊராட்சி, புதூர் கிராமத்தில் 6-6-2002 அன்று உதவி செயற்பொறியாளர்/விநியோகம், வள்ளியூர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டதில் தேர்பவனிக்கு இடையூறாக மின் கம்பங்கள் எதுவுமில்லை. எனவே, மின் கம்பங்களை இடமாற்றம் செய்ய தேவையில்லை.

19—

## மின் இணைப்புகள்

**வினா 12347—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு ரூ.25,000 செலுத்தினால் விவசாயக் கிணறு இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் எத்தனை விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது?

(ஆ) அதன் விவரத்தை, அரசு மாவட்டம் வாரியாக தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் விவசாயத்திற்கு ரூ.25,000 செலுத்தினால் விவசாயக் கிணறுகளுக்கு மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் 31-3-2002 வரை 62,824 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) மாவட்ட வாரியான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ.எண் | மாவட்டம் | மின் இணைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஈரோடு | 7,929 |
| 2. | சேலம் | 4157 |
| 3. | நாமக்கல் | 2,772 |
| 4. | திண்டுக்கல் | 1,250 |
| 5. | மதுரை | 405 |
| 6. | சிவகங்கை | 595 |
| 7. | இராமநாதபுரம் | 105 |
| 8. | தேனி | 350 |



| வஎண் | மாவட்டம் | மின் இணைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 9. | தர்மபுரி | 5,279 |
| 10. | காஞ்சிபுரம் | 908 |
| 11. | திருவள்ளூர் | 1,066 |
| 12. | வேலூர் | 3,484 |
| 13. | தஞ்சாவூர் | 5,495 |
| 14. | திருவாரூர் | 1,301 |
| 15. | திருச்சி | 2,090 |
| 16. | கரூர் | 2,431 |
| 17. | நாகப்பட்டினம் | 1,138 |
| 18. | புதுக்கோட்டை | 745 |
| 19. | பெரம்பலூர் | 1,127 |
| 20. | கோயம்பத்தூர் | 6,511 |
| 21. | கடலூர் | 482 |
| 22. | நீலகிரி | 21 |
| 23. | திருவண்ணாமலை | 5,788 |
| 24. | விழுப்புரம் | 4,565 |
| 25. | தூத்துக்குடி | 494 |
| 26. | விருதுநகர் | 390 |
| 27. | கன்னியாகுமரி | 230 |
| 28. | திருநெல்வேலி | 1,716 |
| 29. | சென்னை | — |
| | மொத்தம் | 62,824 |

[2003 மார்ச் 31

20—

## மின் கம்பம்

**வினா 20338—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி 23-வது கோட்டம், திருவாகவுண்டனூர் சாலையின் மையப் பகுதியில் மின் கம்பம் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அகற்ற நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி 23-வது கோட்டம் திருவாகவுண்டனூர் சாலையின் மையப்பகுதியில் இருந்த மின் கம்பம் 6-2-2002 அன்று மாற்றி அமைக்கப்பட்டுவிட்டது.

21—

## மின் கட்டணம்

**வினா 20558—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, கந்தலி ஒன்றியம், கரியம்பட்டியில் உள்ள துணை மின் நிலைய மின் விநியோகப் பணம் குனிச்சியில் வசூல் செய்வதை மாற்றி கந்திலி அல்லது கரியம்பட்டி மின்நிலையத்தில் வசூலிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு பிரிவிலுள்ள ஊர்களிலும் உள்ள மின் நுகர்வோர்களிடம் அந்தந்தப் பிரிவு அலுவலகங்களில்தான் மின்



2003 மார்ச் 31]

கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நாட்றாம்பள்ளி தொகுதி, கரியம்பட்டி ஒன்றியம், கரியம்பட்டியில் 33/11 கே.வி. மின் நிலையம் உள்ளது. அதிலிருந்து மின்சாரம் கீழ்க்கண்ட ஊர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. கரியம்பட்டியில் உள்ள துணை மின் நிலையத்தின்கீழ் வரும் ஊர்களில் உள்ள மின் நுகர்வோர்கள் கந்திலியில்தான் தற்சமயம் மின் கட்டணம் செலுத்துகின்றனர்:

| கந்திலி விரிவு | குறிச்சி பிரிவு |
|---|---|
| 1. கரகம்பட்டி | கீழ்மாங்குப்பம் |
| 2. மேல்மாங்குப்பம் | கொண்டப்பன் நாயக்கன்பட்டி |
| 3. நரியனேரி | பலந்தோப்பு |
| 4. தேச்சியம் | அனுமன்பட்டி |
| 5. கெஜல் நாயக்கன்பட்டி | பெரியகரம் |
| 6. நாரியூர் | மேல்குரவம்பட்டி |
| 7. மண்டல நாயணகுண்டா | கீழ்குருவம்பட்டி |
| 8. கந்திலி | மதனவாடி |
| 9. தொங்கானூர் | நரியனேரி |
| 10. சின்ன கந்திலி | மானவள்ளி |
| 11. அரிகானூர் | ஜல்லியூர் |
| 12. சோத்தலகுட்டா | பெரிய சரம்புதூர் |
| 13. மேட்டூர் | பெரிய கன்னாலம்பட்டி |
| 14. கரியம்பட்டி | |

ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஊர்களிலுள்ள மின் நுகர்வோர்களிடமிருந்து மின் கட்டணம் அந்தந்தப் பிரிவு அலுவலகங்களில் வசூலிக்கப்படுகிறது. இதில் குனிச்சியில் உள்ள எந்தப் பகுதிக்கான மின் கட்டணத்தை கந்திலியில் வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தினால், அதனைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

22—

## வசூல்

**வினா 20657—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், திரிகூடபுரத்திலுள்ள மின் இணைப்புகளுக்கு மின் கட்டணம் செலுத்த இங்குள்ள மக்கள் சொக்கம்பட்டி சென்றுவர வேண்டியுள்ளதால் இக்குறையை நீக்கி திரிகூடபுரத்தில் வைத்து வாரத்தில் இரண்டு நாட்கள் வந்து மின் கட்டணத் தொகை வசூல் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

சொக்கம்பட்டியில் இருக்கும் வசூல் மையத்திற்கும் திரிகூடபுரத்திற்கும் இடையே 0.4 கி.மீ. தூரம்தான் உள்ளது. ஆகவே திரிகூடபுரத்தில் வசூல் மையம் அமைக்கத் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

23—

## மின் அழுத்தம்

**வினா 22870—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காட்டுவோக்கொல்லை கிராமத்தில் குறைந்த மின் அழுத்தத்தை சீராக்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காட்டுவோக்கொல்லை பகுதிக்கு வடக்குத்து துணை மின் நிலையத்தில் இருந்து 11 கே.வி. கீழுர் பீடர் வழியாக சுமார் 10 கி.மீ. தூரத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குறைந்த மின் அழுத்தத்தை நிவர்த்தி செய்ய சத்திரம் பகுதியில் 110/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்துவதற்கான தொகை அரசிடம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட துணை மின் நிலையம் அமைக்க வரும் நிதியாண்டில் நிர்ணயிக்கப்படும் இலக்கீட்டிற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறைந்த மின்னழுத்தம் நிவர்த்தி செய்யப்படும்.

24—

## தொழிற்கல்வி

**வினா 17065—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் 2000-2001 ஆம் ஆண்டில் உறுப்பினர்களின் மகன்/மகள் எவ்வளவு பேருக்கு தொழிற்கல்வி பயில கடன் வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அதன் உறுப்பினர்களின் மகன்/மகள் தொழிற்கல்வி பயில ரூ.50,000/-வரை கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 2000-2001 ஆம் ஆண்டில் இத்தகைய கடன் வழங்கக்கோரி உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏதும் பெறப்படாததால், கடன் ஏதும் வழங்கப்படவில்லை.

25—

**கூட்டுறவு வங்கிகள்**

**வினா 20197—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ரூ.50 இலட்சத்திற்கும் அதிகமாக வைப்புத் தொகை வைத்துள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் 211 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 148 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ரூ.50 இலட்சத்திற்கு அதிகமாக வைப்புத் தொகைகள் கொண்டுள்ளன.

26—

**வாகனம் வாங்க கடன்**

**வினா 21262—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி 2001-2002 ஆம் ஆண்டில் வாகனங்கள் வாங்க எவ்வளவு நபர்களுக்குக் கடன் வழங்கியது?

(ஆ) வழங்கிய கடன் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.**

(அ) சேலம் மாவட்டம். மத்திய கூட்டுறவு வங்கி 2001-2002 ஆம் ஆண்டில் சிறு போக்குவரத்து வாகனங்கள் வாங்க 2 நபர்களுக்குக் கடன் வழங்கியுள்ளது.

(ஆ) ரூ.2.20 இலட்சம்.



27—

**நகைக் கடன்**

**வினா 21648—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டிற்கு கூட்டுறவு வங்கிகள் மூலம் நகைக் கடனாக எவ்வளவு கடன் வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.36,310.89 இலட்சம் நகைக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

28—

**கட்டட வசதி**

**வினா 23307—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, எம்.டி. தனி 109 வாலாந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தற்போது யூனியன் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், தனியாக கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

[2003 மார்ச் 31

29—

## கடன் வழங்குதல்

**வினா 26422—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டதாரி இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க கூட்டுறவு வங்கிகள் முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) கூட்டுறவு வங்கிகள் மூலம் பட்டதாரி இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க கடன் வழங்கும் தனித் திட்டம் ஏதுமில்லை. இருப்பினும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவை இவர்களுக்கு தொழில் தொடங்க பண்சாராக் கடன்கள் ஏற்கெனவே வழங்கி வருகின்றன. இக்கடன் கோரி பெறப்படும் விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ள திட்டச் செலவினம் மற்றும் பிணை வைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) எழவில்லை.

30—

## தொகுப்பு வீடுகள்

**வினா 6825—திரு. க. பாரமலை:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996 ஆம் ஆண்டிலிருந்து 2001 ஆம் ஆண்டு வரை கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்தில் மொத்தம் எத்தனை தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டன?



2003 மார்ச் 31]

(ஆ) அதற்கு எவ்வளவு தொகை செலவிடப்பட்டது என்பதை ஆண்டு வாரியாக அறிவிக்க இயலுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு தொகுப்பு வீடுகள் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் கட்டப் பட்டுள்ளன:

| | |
|---|---|
| *1996-1997-ல்* | *63,959* வீடுகளும் |
| *1997-1998ல்* | *55,630* வீடுகளும் |
| *1998-1999-ல்* | *68,207* வீடுகளும் |
| *1999-2000-ல்* | *55,509* வீடுகளும் |
| *2000-2001-ல்* | *49,340* வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. |

(ஆ) தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் தொகுப்பு வீடுகள் கட்ட கீழ்க்கண்டவாறு தொகை செலவிடப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| *1996-1997-ல்* | *158* கோடியே *93* இலட்சமும் |
| *1997-1998-ல்* | *208* கோடியே *81* இலட்சமும் |
| *1998-1999-ல்* | *139* கோடியே *42* இலட்சமும் |
| *1999-2000-ல்* | *161* கோடியே *66* இலட்சமும் |
| *2000-2001-ல்* | *126* கோடியே *38* இலட்சமும் இந்த ஐந்து ஆண்டுகளில் செலவழிக்கப்பட்டுள்ளது. |

31—

## கட்டட வசதி

**வினா 10737—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகர்கூடல் ஊராட்சி, கூலிக்கொட்டாய்க்கு சத்துணவுக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகர்கூடல் ஊராட்சி, கூலிக்கொட்டாய்க்கு சத்துணவுக் கட்டடம் கட்ட போதிய நிதி ஆதாரம் இல்லை. எனவே, மேற்கூறிய சத்துணவுக் கூடம் கட்ட தற்சமயம் வாய்ப்பில்லை.

32—

**குடிநீர் வசதி**

**வினா 10761—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, கோட்டூர்மலைக்கு குடிநீர் வசதி இல்லாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வட்டுவனஅள்ளி ஊராட்சி, கோட்டூர்மலை கிராமத்தில் ஏற்கெனவே இரண்டு ஆழ்துளைக் கிணறுகளும், ஒரு திறந்தவெளிக் கிணறும் உள்ளன. தற்போது ஊராட்சியில் நிதிவசதி இல்லாத காரணத்தால் இதைத்தவிர கூடுதலாக குடிநீர் வசதி செய்ய வாய்ப்பில்லை.



33—

**குடிநீர் வசதி**

**வினா 10779—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், தொகுதி, பேடறஅள்ளி ஊராட்சி, பேடறஅள்ளிக்கு போதுமான குடிநீர் வசதி செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பேடறஅள்ளி ஊராட்சியிலும், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திலும் தற்போது நிதி வசதியில்லை. எனவே, தற்போது பேடறஅள்ளிக்கு கூடுதல் குடிநீர் வசதி செய்ய சாத்தியமில்லை.

34—

**கைப்பம்பு**

**வினா 11221—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், கோமனஅள்ளி ஊராட்சி, கண்ணம்மாள் ரைஸ்மில் அடுத்த வைரன் கொட்டாய்க்கு புதியதாக கைப்பம்பு ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், கோமனஅள்ளி ஊராட்சியில் தற்போது போதிய

நிதி வசதி இல்லை. எனவே, கண்ணம்மாள் ரைஸ்மில் அடுத்த வைரன் கொட்டாய்க்கு புதிதாக கைப்பம்பு அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**35—**

### சமையல் அறை

**வினா 11268—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, நடுமேட்டுக்குப்பம் கிராமத்தில் உள்ள அரசு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சமையல் அறை ஒன்று அரசு கட்டித் தர ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டத்தில் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு செய்தால் நடுமேட்டுக்குப்பம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்கு சமையலறை கட்டித் தரப்படும்.

**36—**

### குடிநீர் வசதி

**வினா 13393—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, திருவள்ளுர் நகருக்கு போதுமான குடிநீர் வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, திருவள்ளுர் நகருக்கு 2000-2001-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆழ்துளைக் கிணறு அமைத்து மேல்நிலைத் தொட்டி அமைக்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**37—**

### குடிநீர் வசதி

**வினா 13394—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, அண்ணாநகர் கிராமத்திற்கு போதுமான குடிநீர் வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பருவதனஅள்ளி ஊராட்சி, அண்ணாநகர் கிராமத்திற்கு 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆழ்துளைக் கிணறு அமைத்து ஒரு மேல்நிலைத் தொட்டியும் அமைக்கப்பட்டு, தற்போது நல்ல நிலையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2003 மார்ச் 31

38—

### குடிநீர் தொட்டியைப் பழுதுபார்த்தல்

**வினா 13431—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், போடாரம்பட்டி மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடன் பழுதுபார்த்து குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், போடாரம்பட்டி, மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி பழுதுபார்க்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

39—

### குடிநீர் வசதி

**வினா 15055—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமர்கூடல் கிராமத்திற்கு கூடுதலாக குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், பண்டஹள்ளி ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, பண்டஹள்ளி ஊராட்சியில் அமைந்துள்ள,



2003 மார்ச் 31]

இராமர்கூடல் கிராமத்திற்கு கூடுதலாக குடிநீர் வசதி செய்ய தற்போதைக்குச் சாத்தியமில்லை.

40—

### குடிநீர் மற்றும் தெரு விளக்கு வசதி

**வினா 15227—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, செல்லம்பட்டியில் குடிநீர் வழங்க மற்றும் தெரு விளக்கு அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரூர் தொகுதி, செல்லம்பட்டியில் 136 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 121 தெரு விளக்குகள் எரிகின்றன. 15 தெரு விளக்குகளை புதியதாக மாற்ற ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. செல்லம்பட்டி ஊராட்சியில் 36 கைப்பம்புகள் உள்ளன. மேலும், கூடுதலாக கைப்பம்புகள் அமைக்க ஊராட்சியில் நிதி வசதி இல்லை.

41—

### குடிநீர் மற்றும் தெரு விளக்கு வசதி

**வினா 15237—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, மருதிப்பட்டி, எம். புதூரில் குடிநீர் மற்றும் தெரு விளக்கு வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரூர் ஊராட்சி ஒன்றியம், மருதிப்பட்டி, எம். புதூரில் தற்போது இரண்டு தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு கைப்பம்பும், ஒரு பொதுக் கிணறும் உள்ளது. எனவே, போதுமான குடிநீர் வசதியும் உள்ளது.

இங்கு புதிதாக குடிநீர் மற்றும் தெரு விளக்குகள் அமைத்திடும் திட்டம் தற்போது அரசிடமில்லை.

42—

**மின் விளக்குகள்**

**வினா 15502—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பெத்தரெங்கபுரம் கிராமத்தில் புதிதாக சோடியம் மின் விளக்குகள் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பெத்தரெங்கபுரம் கிராமத்தில் புதிதாக சோடியம் மின் விளக்குகள் அமைக்க வாய்ப்பில்லை.

43—

**பொதுக் குழாய்**

**வினா 22616—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் ரைஸ்மில் வடக்குத் தெருவில் பொதுக்குழாய் அமைத்துக் கொடுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், லெவிஞ்சுபுரம் ரைஸ்மில் வடக்குத் தெருவில், தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டத்திலிருந்து புதிய பொதுக்குழாய் அமைத்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.





44—

**பொதுக் குடிநீர் குழாய்**

**வினா 22617—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், குட்டம் ஊராட்சி, தோப்புவிளை கிராமத்தின் வழியாகச் செல்லும் கன்னியாகுமரி திருச்செந்தூர் சாலையின் தென்புறம் பொது குடிநீர் குழாய் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், குட்டம் ஊராட்சி, தோப்புவிளை கிராமத்தின் தென்புறத்தில் உள்ள குடியிருப்புகளுக்கு எதிரே வடபுறம் உள்ள பொதுக் குழாயிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு அங்குள்ள 4 குடும்பங்களும் பயன் பெற்று வருகின்றன. எனவே தென்புறத்தில் பொதுக் குழாய் அமைக்க வேண்டிய அவசியமில்லை.

45—

**பொது குடிநீர் குழாய்**

**வினா 22623—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், செட்டிகுளம் ஊராட்சி, வேதக்கோயில் தெருவில் பொது குடிநீர் குழாய் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், செட்டிகுளம் ஊராட்சி, வேதக்கோயில் தெருவில் 2000-2001-ஆம் ஆண்டு 11-வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் புதிய பொது குடிநீர் குழாய் அமைத்து தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

[2003 மார்ச் 31

46—

### சோடியம் விளக்கு வசதி

**வினா 27789—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சி ஒன்றியம் மேலையூர் ஊராட்சிக்கு சோடியம் விளக்கு வசதி செய்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரசாணை (2டி) எண். 151 நாள் 14-8-2001-ல் கிராமப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகளுக்குப் பதிலாக குழல் விளக்குகளுடன் கூடிய தெரு விளக்குகள் மட்டுமே நிறுவப்படவேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளதால் மேலையூர் ஊராட்சியில் சோடியம் ஆவி விளக்கு அமைக்க இயலாது.

47—

### பால்வளப் பணிகள்

**வினா 24209—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் பால் வளத் துறை மூலம் நடைபெற்று வரும் பணிகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் பால் வளத் துறை மூலம் கிராம அளவிலான உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல், செயல் படாத சங்கங்களைப் புதுப்பித்தல், சங்கங்கள் கொள்முதல் செய்த பாலை எடுத்தல், சங்கங்களுக்கு தாமதமின்றி பால் பணம் பட்டுவாடா செய்தல் போன்ற பால் வளத் துறை பணிகள், துணைப் பதிவாளர் (பால் பதம்), திருச்சி அலுவலகம் மற்றும் மாவட்டத்தில் செயல்படும் மாவட்டக்



2003 மார்ச் 31]

கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஆகியவற்றின் மூலம் நடைபெறுகின்றன.

48—

### கடனுதவி

**வினா 28659—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் செமி பெர்மனென்ட் திரையரங்கம் கட்ட அரசு கடன் உதவி செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு (ஒழுங்குமுறை) விதிகளில் திரையரங்குகள் மற்றும் அரை நிரந்தர திரையரங்கம் கட்ட அரசு கடன் உதவி செய்வதற்கான வழிவகைகள் ஏதுமில்லை. திரையரங்கம் கட்ட விரும்புவோர் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் கடன் உதவி பெறுவது அவர்களது விருப்பமாகும். மேலும் அரசு 2001-2002ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டில் செமி பெர்மனென்ட் திரையரங்கம் கட்ட யாருக்கும் கடன் உதவி அளிக்கவில்லை. எனவே இக்கேள்விக்கு இடமில்லை.

49—

### நூற்பாலை தொடங்குதல்

**வினா 22132—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 31

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பகுதியில் கூட்டுறவு முறையில் நூற்பாலை துவக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித்தொழில் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பகுதியில் கூட்டுறவு முறையில் நூற்பாலை துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

50—

**இறால் மற்றும் மீன் குஞ்சுகள் வளர்த்தல்**

**வினா 27192—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இறால் மற்றும் மீன் குஞ்சுகள் வளர்க்க அரசின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மத்திய அரசின் நிதி உதவியுடன், "மீன் வளத் துறையில் "பயிற்சி மற்றும் விரிவாக்கம்" எனும் திட்டத்தின்கீழ் மீன்/இறால் வளர்ப்போர்களுக்கு 2001-2002-ஆம் ஆண்டு முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) கடந்த ஆண்டில் 120 மீன் வளர்ப்போர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.



2003 மார்ச் 31]

**(பதினொன்றாவது பட்டியல்.)**

1—

**கொட்டகை அமைத்தல்**

**வினா 4271—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பணகுடி பேரூராட்சி கொமத்தான் செல்லும் வழியிலுள்ள நகரை மடம், ரெயில்வே நிலையத்தின் கீழ்புறமுள்ள சுடுகாடு, மைதானம் ஆகிய இடங்களில் கொட்டகை அமைத்துக் கொடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பணகுடி பேரூராட்சி கொமத்தான் செல்லும் வழியிலுள்ள சுடுகாட்டில் சுற்றுச்சுவர் கட்டவும் கொட்டகை அமைக்கவும் மற்றும் மேம்பாடு செய்யவும் ரூபாய் 60,000 மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பிற திட்டங்களிலிருந்து நிதி ஒதுக்கீடு கேட்கப்பட்டுள்ளது. அனைத்து அத்தியாவசியமான பணிகளுக்கிடையே தற்போது பேரூராட்சி பொது நிதியில் தற்போது நிதி வசதியில்லை.

2—

**பொது குடிநீர்க் குழாய்**

**வினா 8802—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, அம்பாசமுத்திரம் மெயின்ரோடு, மாவு அரைக்கும் அரிசி ஆலை எதிர்புறமுள்ள சந்தில் பொது குடிநீர்க் குழாய் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி பேரூராட்சி, அம்பாசமுத்திரம் மெயின்ரோடு, மாவு அரைக்கும் அரிசி ஆலை எதிர்புறமுள்ள சந்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி ரூ.13,000/-ல் பொது குடிநீர்க் குழாய் அமைக்கும் வேலை எடுக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

3—

### சிறுவாணி குடிநீர்க் குழாய்

**வினா 10137—திரு. மா.ப. ரோகிணி (என்கிற) கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதிக்குட்பட்ட குறிச்சி பேரூராட்சியில் பகுதி எண் 10-ல் உள்ள ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனிக்கு 1½ கி.மீ. தூரத்திற்கு சிறுவாணி குடிநீர்க் குழாய் அமைக்கப்பட்டது குறித்து அரசு எப்பொழுது நடவடிக்கை எடுக்கும்?

(ஆ) விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குறிச்சி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 7-ல் ஆஸ்பெஸ்டாஸ் கம்பெனி ஊழியர்களுக்காக சிறுவாணி குடிநீர் வழங்க கேட்டதன் அடிப்படையில் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கடிதம் ந.க.129/98-சிஏ/ நாள் 1-9-1996-ன்படியும் மற்றும் கோவை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடிதம் ந.க. 7659/96/வே 5 நாள் 17-1-1997-ன்படியும் மற்றும் குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலர் கடிதம் ந.க. 6637/96/ஆ நாள் 24-1-1997-ன்படியும் ஆறு பொது குடிநீர்க் குழாய் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி கம்பெனி ஊழியர்களின் குடியிருப்புகளில் பொதுவான இடங்களில் ஆறு குடிநீர்க்



குழாய்கள் பேரூராட்சி வாயிலாக அமைக்கப்பட்டு, அதற்கான பகிர்மான குழாய்கள் 500 மீட்டர் (1/2 கிலோ மீட்டர்) தூரம் மேற்படி கம்பெனிக்கு சொந்தமான சாலையில் கம்பெனியின் சொந்தச் செலவிலேயே பதிக்கப்பட்டு சீராக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

4—

### குடிநீர் வசதி

**வினா 10859—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி 18-வது வார்டு பகுதிக்குட்பட்ட தமிழ்நாடு மின் வாரிய இளநிலை மின் பொறியாளர் அலுவலகத்தின் பின்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி, வார்டு எண் 18, தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திற்கு பின்பக்கம் வாழும் பொதுமக்களுக்கு 2002-ம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஒரு ஆழ்குழாய் அமைத்து கம்ப்ரசர் மின் மோட்டார் அமைத்து கூடுதலாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

5—

### ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா 10862—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி, 6-வது வார்டு, ஞானஒளி தெருவில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2003 மார்ச் 31

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி, 6-வது வார்டு, ஞானஒளி தெருவிற்கு குடிநீர் விநியோகம் செய்ய குழாய் பதிக்கும் பணி 15-7-2002-ல் முடிக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்து பொதுமக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

6—

**குடிநீர் குழாய்**

**வினா 10889—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி, 9-வது வார்டில் சுமார் 18 ஆண்டுகளாக திட்டமொழி பிரதான சாலையில் இருந்த பொது குழாய் இடம் மாற்றப்பட்டுள்ளதால், பொதுமக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பேரூராட்சி, 9-வது வார்டில் சுமார் 18 ஆண்டுகளாக திட்டமொழி பிரதான சாலையில் இருந்த பொது குழாய் இடம் மாற்றப்பட்டதால் பொதுமக்கள் அனைவரும் பாதிக்கப்படவில்லை. அனைவரும் பயன்படுத்தி வருகின்றனர்.

7—

**கட்டபொம்மன் சிலை**

**வினா 11236—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள வீரபாண்டி கட்டபொம்மன் அவர்களின்



2003 மார்ச் 31]

சிலைக்குச் செல்லும் படிக்கட்டின் அடிப்பகுதி மோசமான நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள கட்டபொம்மன் சிலைக்குச் செல்லும் பீடத்தின் படிக்கட்டுகள் மற்றும் இதர பகுதி ஆகியவை மராமத்து செய்யப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது.

8—

**திண்காரை சாலை அமைத்தல்**

**வினா 11803—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி பேரூராட்சி, ஸ்ரீபக்தபிரியன் தெருவிற்கு திண்காரை சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சி ஸ்ரீபக்தபிரியன் தெருவிற்கு திண்காரை சாலை அமைக்க இயலாது. தற்போது பேரூராட்சிப் பகுதியில் திண்காரை சாலை அமைக்க அனுமதியும் இல்லை. போதுமான நிதி வசதியும் இல்லை. எனவே இப்பணியைச் செய்ய இயலாது.

9—

**திண்காரை சாலை அமைத்தல்**

**வினா 11804—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 31

(அ) சோரன்மகாதேவி, பத்தமடை பேரூராட்சி, நடுவூர் வடக்கூரில் திண்காரை தளம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி, பத்தமடை பேரூராட்சி, நடுவூர் வடக்கூரில் திண்காரை அமைக்க அனுமதியும் இல்லை. போதுமான நிதி வசதியும் இல்லை. எனவே இப்பணியைச் செய்ய இயலாது.

**10—**

**திண்காரை சாலை அமைத்தல்**

**வினா 11806—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோரன்மகாதேவி, தேர்வுநிலைப் பேரூராட்சி, சென்னை ராஜபுரம் தெருவில் (பெருமாள் கோவில் வடக்கு பாகம் சேர்த்து) திண்காரை சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சோரன்மகாதேவி, தேர்வு நிலை பேரூராட்சி, சென்னை ராஜபுரம் தெரு 70 மீட்டர் நீளம் ஆகும். தற்போது பேரூராட்சிப் பகுதியில் திண்காரை சாலை அமைக்க அனுமதியும் இல்லை. போதுமான நிதி வசதியும் இல்லை. எனவே பணியைச் செய்ய இயலாது.

**11—**

**திண்காரை சாலை அமைத்தல்**

**வினா 11807—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மார்ச் 31]

சேரன்மகாதேவி, தேர்வுநிலைப் பேரூராட்சி, ஒப்பிலார்புரம் தெருவில் திண்காரை சாலை அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சி, ஒப்பிலார்புரம் தெருவில் நீளம் 114 மீட்டர் திண்காரை சாலை அமைக்க பேரூராட்சிப் பகுதியில் அனுமதியும் இல்லை. போதுமான நிதி வசதியும் இல்லை. எனவே இப்பணியைச் செய்ய இயலாது.

**12—**

**வடிகால் அமைத்தல்**

**வினா 11808-திரு பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி, பத்தமடை பேரூராட்சி, புதுக்குடி கலைவாணர் தெரு பிரதான சாலையில் வடிகால் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பத்தமடை பேரூராட்சி, புதுக்குடி கலைவாணர் தெரு பிரதான சாலையில் வடிகால் அமைக்க தற்போது பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே பணியை மேற்கொள்ள இயலாது.

**13—**

**வாறுகால் அமைத்தல்**

**வினா 11809—திரு. பி.எச் பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்தமடை பேரூராட்சி, திரு. வி.க. தெரு, கிரவுண்ட் சாலை, மருதுபாண்டி தெரு ஆகிய இடங்களில் வாறுகால் அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பத்தமடை பேரூராட்சி, திரு.வி.க. தெரு, கிரவுண்ட் சாலை, மருதுபாண்டி தெரு ஆகிய இடங்களில் வாறுகால் அமைக்க தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே பணியைச் செய்ய இயலாது.

**14—**

### ஆற்று நீரை வழங்குதல்

**வினா 11814—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி, பாப்பாக்குடி ஒன்றியம், குத்தப்பாஞ்சான் கிராமம், வழியாக புளியங்குடிக்குச் செல்லும் தாமிரபரணி ஆற்று நீரை குத்தப்பாஞ்சான் கிராமத்திற்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம், குத்தப்பாஞ்சான் ஊராட்சியில் மேலக் குத்தப்பாஞ்சான், கீழக் குத்தப்பாஞ்சான் என இரண்டு குடியிருப்புகள் உள்ளன. இவ்விரு குடியிருப்புகளுக்கும் பாப்பாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தாமிரபரணி ஆற்று நீர் வழங்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.



**15—**

### படித்துறை மராமத்து செய்தல்

**வினா 11922—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தேர்வுநிலைப் பேரூராட்சிக்குட்பட்ட அரசடி தென் பாகம் நான்காம் தெருவிலுள்ள படித்துறையை மராமத்து செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சிப் பகுதியில் உள்ள படித்துறையை மராமத்து செய்ய பேரூராட்சியில் நிதி வசதி இல்லை.

**16—**

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா 11948—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட வாணியக்குடி தெரு, தெற்கு ரத வீதிக்கு தார்ச் சாலை போடுவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் பேரூராட்சிக்குட்பட்ட வாணியக்குடி தெரு, தெற்கு ரத வீதிக்கு தார்ச் சாலை போடுவதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் செய்ய இயலாது.

[2003 மார்ச் 31

17—

## மராமத்துப் பணி

**வினா 11959—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தேர்வு நிலைப் பேரூராட்சிக்குட்பட்ட ஆவடி தெருவில் உள்ள படித்துறையை மராமத்துப் பணி செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** சேரன்மகாதேவி தேர்வு நிலைப் பேரூராட்சிக்குட்பட்ட ஆவடி தெருவில் உள்ள படித்துறையை மராமத்துப் பணி செய்ய பேரூராட்சியில் தற்போது நிதி வசதி இல்லாததால் செய்ய இயலாது.

18—

## சோடியம் மின் விளக்குகள் அமைத்தல்

**வினா 11962—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தேர்வு நிலைப் பேரூராட்சிக்குட்பட்ட மேலகண்டளவு கிராமத்தில் ஓர் சோடியம் விளக்கும், நேதாஜி காலனியில் இரண்டும், ஆர்.சி. ரயில்வே கேட் அருகில் ஒன்றும், சப்-கலெக்டர் பங்களா அருகே ஒன்றும், ஆதித்தனார் நகரில் நான்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலக பின்புறம் ஒன்றும் சோடியம் மின் விளக்குகள் அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் சோடியம் ஆவி விளக்கு அமைக்கும் பட்சத்தில் பேரூராட்சிக்கு கூடுதல் பராமரிப்புக் கட்டணம் மற்றும் மின் கட்டணம் செலவாகும். இச்செலவினத்தை ஏற்க பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே சோடியம் ஆவி விளக்கு அமைக்க அவசியம் எழவில்லை.



2003 மார்ச் 31]

19—

## பொது குடிநீர்க் குழாய்

**வினா 12019—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சி, ஆர்.எஸ்.ஏ. நகர் மற்றும் பொழிக்கரை மேல் பக்கம், தெற்கு ரதவீதி (முடுக்கு தெரு சமீபம்) பகுதிகளில் பொது குடிநீர்க் குழாய் அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி, ஆர்.எஸ்.ஏ. நகர் மற்றும் பொழிக்கரை மேல் பக்கம், தெற்கு ரத வீதி (முடுக்கு தெரு சமீபம்) பகுதிகளில் 2 ஆழ்குழாய்க் கிணறு மற்றும் பொது குடிநீர்க் குழாய்கள் உள்ளன. இதுவே போதுமானதாக இருப்பதால் மேலும் பொதுக்குடிநீர்க் குழாய் அமைக்க தேவையில்லை.

20—

## குடிநீர் வசதி

**வினா 12818—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர் குடிநீர் பம்பு அவுஸ் எப்போது சரிசெய்யப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், விடையூர் ஊராட்சியில் குடிநீர் மோட்டார் அறை முற்றிலும் பழுதடைந்து, ஆழ்துளைக் கிணறும் முற்றிலும் தூர்ந்துவிட்டதால், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் புதிய மோட்டார் அறை கட்டப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

21—

**தெரு விளக்குகள்**

**வினா 13378—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் தெரு விளக்குகள் அமைக்கப்படாத கிராம ஊர்களில் நடப்பாண்டில் தெரு விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 33 ஊராட்சிகளில் மொத்தம் 2565 தெரு விளக்குகள் நல்ல நிலையில் எரிகின்றன. பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தில் தெரு விளக்குகள் அமைக்கப்படாத ஊர்களில் தெரு விளக்குகள் அமைக்க சிறப்பு நிதி ஒதுக்கீடு இல்லாததால் புதிய தெரு விளக்குகள் அமைக்க சாத்தியமில்லை.

22—

**குடிநீர் வசதி**

**வினா 13390—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, புள்ளப்பட்டி மற்றும் நலப்பரம்பட்டி கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் வட்டாரம், புள்ளப்பட்டி கிராமத்தில் கைப் பம்புகள் இரண்டு நல்ல நிலையில் தற்சமயம் பயன்பாட்டில் உள்ளன. மேலும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் தற்போது குடிநீர் வசதி பொதுமக்களுக்கு போதுமானதாக உள்ளது. நலப்பரம்பட்டி கிராமத்தில் 3 கைப் பம்புகள் நல்ல நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளன. மேலும் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

23—

**நவீன கழிப்பிடமாக்குதல்**

**வினா 14497—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் உள்ள மகளிர் கழிப்பிடங்களை நவீன கழிப்பிடமாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி நகராட்சிப் பகுதியில் உள்ள மகளிர் கழிப்பிடங்கள் நவீன கழிப்பிடங்களாகவே உள்ளன.

24—

**சாலைகளைச் சீர்செய்தல்**

**வினா 14970—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சி, தெரு சாலைகளை சீர்செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சி, தெரு சாலைகளை சுமார் 600 கி.மீ. அளவிற்கு சீர்செய்ய வேண்டி உள்ளது. இதற்கு ரூ.36.00 இலட்சம் செலவாகும். இச்செலவினத்திற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் அப்பணியை செய்ய இயலாமல் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**25—**

**சோடியம் மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா 15469—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, மாணிக்கம்புதூர் கிராமத்தில் புதிதாக சோடியம் மின் விளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, மாணிக்கம்புதூர் கிராமத்தில் சோடியம் மின் விளக்குகள் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**26—**

**சோடியம் மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா 15476—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பள்ளவிளை கிராமத்தில் சோடியம் மின் விளக்குகள் இரண்டு அமைக்க அரசு முன்வருமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, பள்ளவிளை கிராமத்தில் சோடியம் மின் விளக்குகள் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**27—**

**சோடியம் மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா 15489—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, தனக்கர்குளம் கிராமத்தில் சோடியம் மின் விளக்குகள் இரண்டு அமைத்துக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, தனக்கர்குளம் கிராமத்தில் சோடியம் மின் விளக்குகள் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**28—**

**சோடியம் மின் விளக்குகள் அமைத்தல்**

**வினா 15493—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, ராமச்சந்திர நகரில் சோடியம் மின் விளக்குகள் அமைத்திட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தனக்கர்குளம் ஊராட்சி, ராமச்சந்திர நகரில் சோடியம் மின் விளக்குகள் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

29—

### குழாய்கள் அமைத்தல்

**வினா 15618— திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், சக்கரமல்லூரில் கூடுதலாக நிலத்தடி நீர்க் குழாய்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் சக்கரமல்லூர் கிராமத்தில் நிலத்தடி நீர்க் குழாய்கள் அமைக்க ஒன்றியத்தில் தீர்மானம் போடப்பட்டுள்ளது. மேலும் தற்போது 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஒரு கைப் பம்பு அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

30—

### மின் மோட்டார் அமைத்தல்

**வினா 15619—திரு. கோ.இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், வேணுகோபாலபுரம் ஊராட்சி, இராமலிங்காபுரம் கிராமத்தில் மின் மோட்டார் அமைத்துத் தர அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், மின் மோட்டார் எப்போது அமைத்து குடிநீர் வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில், வேணுகோபாலபுரம் ஊராட்சியில், இராமலிங்காபுரம் கிராமத்திற்கு மின்விசை பம்பு பொருத்தப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

31—

### குடிநீர் வசதி

**வினா 15641—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஒன்றியம், பூனிமாங்காடு கிராமம், திடீர் நகர் பகுதியில் குடிநீர் வசதியில்லையென்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தில் பூனிமாங்காடு ஊராட்சியினைச் சார்ந்த திடீர் நகர் பகுதியில் தற்போது குடிநீர் வசதி போதுமானதாக உள்ளது.

[2003 மார்ச் 31

32—

## குடிநீர்க் குழாய் அமைத்தல்

**வினா 16405—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் 25-வது வார்டு, இராஜேந்திர நகர் அருகிலுள்ள இலந்தகுளம் கரையில் வசித்து வரும் மக்களுக்கு பொது குடிநீர்க் குழாய் அமைத்துக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை மண்டலம் 25-வது வார்டு, இராஜேந்திர நகர் அருகிலுள்ள இலந்தகுளம் கரை பகுதி புறம்போக்கு நிலமாகும். எனவே மேற்படி பகுதியில் புதிதாக குடிநீர் பொது குழாய் அமைக்க வாய்ப்பில்லை.

33—

## குடிநீர் வசதி

**வினா 16468—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட பாளை பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாநகராட்சி, பாளை பேருந்து நிலையத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் வசதி தற்பொழுது செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

34—

## தொகுப்பு வீடுகள்

**வினா 17116—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மார்ச் 31]

(அ) எடப்பாடி தொகுதியிலுள்ள ஆதிதிராவிடர்கள் எவ்வளவு பேர் தொகுப்பு வீடுகள் கேட்டு விண்ணப்பித்திருந்தார்கள்?

(ஆ) இவர்களில் எவ்வளவு பேருடைய மனு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் 1697 ஆதிதிராவிடர்கள் தொகுப்பு வீடுகள் கேட்டு விண்ணப்பித்திருந்தார்கள்.

(ஆ) மேற்கண்ட 1697 பேர்களின் மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு அனைவருக்கும் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

35—

## தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம்

**வினா 17443—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சியில் வ.உ.சி. நகருக்கு தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், தாண்டவன்குளம், வ.உ.சி. நகரில் 20 தொகுப்பு வீடுகள் 1988-89 ஆம் ஆண்டில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் வ.உ.சி. நகரில் தொகுப்பு வீடுகள் கட்ட வாய்ப்பில்லை.

36—

## விளம்பர வரி வசூல்

**வினா 20261—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மார்ச் 31

(அ) சேலம் மாநகராட்சியில் தனியார் விளம்பரப் பலகைகளுக்கு விளம்பர வரி வசூல் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டு வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் தனியார் விளம்பரப் பலகைகளுக்கு வரி வசூல் செய்யப்படுகிறது. அதன்மூலம் மாநகராட்சி பெறும் ஆண்டு வருமானம் ரூ.9.00 இலட்சமாகும்.

**37—**

**உரிமம்**

**வினா 20262—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி எல்லைக்குள் தனியார் நடத்தும் நாளங்காடிகள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், மாநகராட்சிக்கு உரிமக் கட்டணம் செலுத்தப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி எல்லைக்குள் தனியார் நாளங்காடி ஒன்று உள்ளது. அதற்கான உரிமக் கட்டணம் மாநகராட்சிக்கு செலுத்தப்படுகிறது.

**38—**

**மிதிவண்டி நிலையம்**

**வினா 20266—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மார்ச் 31]

(அ) சேலம் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள சாந்தம் சூப்பர் மார்க்கெட் அருகே சாலையில் மிதிவண்டி நிலையம் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாநகராட்சி கட்டணம் வசூல் செய்கிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள சாந்தம் சூப்பர் மார்க்கெட் அருகே சாலையில் தனியார் மிதிவண்டி நிலையம் ஏதும் தற்போது இல்லை. ஆகையால் மாநகராட்சியால் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படவில்லை.

**39—**

**கொசு மருந்து தெளிப்பான்**

**வினா 20325—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்கு கொசு மருந்து தெளிப்பான் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் 77 கொசு மருந்து தெளிப்பான்கள் உள்ளன. மேலும் இது தவிர கொசு ஒழிப்பிற்கு இரவு நேர புகை தெளிக்கும் பணிக்காக மூன்று சூப்பர் பாஃக் இயந்திரங்களும் ஒரு லீலோபாஃக் இயந்திரமும் உள்ளன.

**40—**

**ரோடு ரோலர்கள்**

**வினா 20326—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான ரோடு ரோலர்கள் உள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதனால் வரும் வருமானம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகராட்சியில் 3 ரோடு ரோலர்கள் உள்ளன. அவற்றில் 2 மட்டும் உபயோகத்தில் உள்ளன.

(ஆ) மாநகராட்சியின் உபயோகத்திற்கு மட்டுமே வைத்துக் கொள்வதால், அவற்றால் வருமானம் ஏதுமில்லை.

41—

**கதவு எண் கொடுத்தல்**

**வினா 20336—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் புதிய குடியிருப்பு வீடுகளுக்கு 5 ஆண்டுகளாக கதவு எண் கொடுக்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கொடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் 1999-2000 ஆம் ஆண்டில் கதவு எண்கள் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய குடியிருப்புகளுக்கும், தற்போது சொத்துவரி விதிக்கும் வீடுகளுக்கும் புதிய கதவெண்கள் அருகிலுள்ள எண்களின்படி வழங்கப்பட்டு வருகிறது.

42—

**இலவச விடுகள்**

**வினா 21193—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001-2002 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் எவ்வளவு பேருக்கு அரசால் இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு 65 இலவச தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

43—

**இலவச விடுகள்**

**வினா 21194—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியிலுள்ள கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் எவ்வளவு பேருக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியிலுள்ள கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுக்கு 35 இலவச தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

44—

**தொகுப்பு விடுகள்**

**வினா 21218—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், குண்டமலைக்காட்டில் வசிக்கும் பழங்குடி மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்த தகவல்களை அரசு அளிக்குமா?

[2003 மார்ச் 31

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், குண்டமலைக் காட்டில் வசிக்கும் பழங்குடியினருக்கு 2002-2003 ஆம் நிதியாண்டில் தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அடுத்த நிதியாண்டில் தொகுப்பு வீடுகள் கட்ட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

45—

## சுண்ணாம்புத் தூள் வழங்குதல்

**வினா 22742—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் சுகாதாரப் பிரிவின் மூலம் 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுகளில் சுண்ணாம்புத் தூள் வாங்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டுகளில் சுண்ணாம்புத் தூள் ஏதும் வாங்கப்படவில்லை.

46—

## நிதி ஒதுக்கீடு

**வினா 24313—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியின் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?



2003 மார்ச் 31]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மாநில திட்டக்குழுவின்கீழ் ரூ.68.26 இலட்சம் மதிப்பீட்டில் 22 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

47—

## தார்ச் சாலைப்பணிகள்

**வினா 25723—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்கு 11-வது நிதிக் குழுமூலம் ஒதுக்கீடு செய்த மொத்தத் தொகை எவ்வளவு?

(ஆ) தார்ச் சாலைப் பணிகள் எவ்வளவு எடுக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 11-வது நிதிக்குழுவின் பரிந்துரைப்படி ரூ.209.42 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கண்ட நிதி திருமணிமுத்தாறு அபிவிருத்தித் திட்டப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளதால் தார்ச் சாலைப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

48—

## தெரு விளக்குகள் எரியச் செய்தல்

**வினா 25728—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் மொத்த தெரு விளக்குகள் எத்தனை? மேலும், தெரு விளக்குகள் அதிகபட்சமாக எரியாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தெரு விளக்குகள் எரிய ஆவன செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் 14,051 குழல் விளக்குகளும், 5,935 சோடியம் ஆவி விளக்குகளும் ஆக மொத்தம் 19,986 விளக்குகள் உள்ளன. இவற்றில் மாநகராட்சி வார்டு அலுவலகம் 1-ல் உள்ள

சூரமங்களம், வார்டு அலுவலகம் 2-ல் உள்ள அஸ்தம்பட்டி, வார்டு அலுவலகம் 3-ல் உள்ள அம்மாபேட்டை மற்றும் வார்டு அலுவலகம் 4-ல் உள்ள தெருவிளக்குகள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டு நல்லமுறையில் எரிய வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

49—

### குடியிருப்புகள் பழுதுபார்த்தல்

**வினா 25825—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி ஆதிதிராவிட குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளதை பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

50—

### தொகுப்பு விடுகள்

**வினா 27675—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில் 2001-2002 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தொகுதியில் 2001-2002 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 259 வீடுகளும், பாரதப் பிரதமரின் கிராம குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 113 வீடுகளும், கடன் மற்றும் மானியத்துடன் கூடிய குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 3 வீடுகளும் ஆகமொத்தம் 375 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### விசைத்தறித் துணிகள் மீது மத்திய அரசின் கலால் வரியை நீக்க, விலக்களிக்கக் கோருதல் குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் தங்கள் அனுமதியுடன் இம்மாமன்றத்திற்கு, மத்திய அரசால் விசைத்தறி நெசவுத் தொழில் மீது இந்நிதியாண்டில் விதிக்கப்பட்ட கலால் வரி குறித்து, அறிக்கை ஒன்றை அளிக்கிறேன்.

இந்தியாவிலுள்ள ஒட்டுமொத்த விசைத்தறிகளில் 25 சதவிகிதம் தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளன. தமிழ்நாடு முழுவதும் சுமார் 4 இலட்சம் விசைத்தறிகள் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் விசைத்தறி நெசவுத் தொழில் சிறு முதலீட்டிலான தொழிலாக நடைபெற்று வருகிறது. சிறு முதலீட்டில் நடைபெறும் இத்தகைய விசைத்தறி நெசவுத் தொழில்கள் எல்லாம், குடும்பத்தில் உள்ளவர்களே சுய வேலை செய்யும் குறுந்தொழிலாக நடந்து வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசு நிதிநிலை அறிக்கையிலே விசைத்தறித் துணிகள்மீது 10 சதவீதம் கலால் வரி விதிப்புச் செய்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே சிறு தொழிலாக இயங்கி வரும் விசைத்தறி நெசவுத் தொழில் மிகவும் நலிவடைந்து பாதிக்கப்பட்டுள்ளதாலும், மைய அரசின் இந்தப் புதிய வரி விதிப்பால் குடும்பத்தவர்களே மேற்கொள்ளும் குடிசைத் தொழிலாகவும், குறுந்தொழிலாகவும், சிறிய முதலீட்டிலுள்ள இத்தகைய விசைத்தறிகள் எல்லாம் மேலும் பலவித இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகும் சூழ்நிலை உருவானதாலும், தமிழ்நாட்டிலுள்ள விசைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், மைய அரசின் மேற்படி 10 சதவீத கலால் வரிவிதிப்பினை மைய அரசு ரத்து செய்ய வேண்டுமெனக் கோரியும், ஏற்கெனவே நடைமுறையிலிருந்து வரும் விருப்ப வரி முறையினைத் தொடர்ந்து விசைத்தறி நெசவுத் தொழிலுக்கு மைய அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என வற்புறுத்தியும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

[திரு. வி. சோமசுந்தரம்] [2003 *மார்ச்* 31

ஏற்கெனவே தொழில் மந்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் விசைத்தறித் தொழிலாளர்கள் நலன்மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பன்முகப்படுத்தப்பட்ட விசைத்தறி நெசவுத் தொழில்மீது விதிக்கப்பட்டுள்ள கலால் வரியினால், விசைத்தறி நெசவாளர்கள் கலால் வரிக்கும் அதன் நடைமுறைகளுக்கும் உட்பட்டு பாதிக்கப்படும் சூழ்நிலை எழுந்துள்ளது என்பதைக் கருத்தில்கொண்டு ஏற்கெனவே நடைமுறையில் இருந்த விருப்ப வரி முறையினையே தொடர்ந்து விசைத்தறி நெசவுத் தொழிலுக்கு நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், இயலாதபட்சத்தில் சிறு தொழில்களுக்கு வழங்கியதைப் போன்று ரூ.1 கோடிக்குக் குறைவாக வியாபாரம் மேற்கொள்ளும் விசைத்தறி நெசவுத் தொழிலுக்கு கலால் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமெனவும், மத்திய நிதியமைச்சர் மாண்புமிகு திரு. ஜஸ்வந்த்சிங் அவர்களை 28-3-2003 நாளிட்ட கடிதம் வாயிலாகக் கேட்டுக்கொண்டுள்ளார்கள் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விசைத்தறி நெசவாளர்களின் துயர் துடைக்கும் வகையிலே தாயுள்ளத்தோடு சென்ற நிதியாண்டில் விசைத்தறிகளுக்கு உயர்த்தி நிர்ணயித்த மின் கட்டண உயர்வைத் திரும்பப் பெற்றார்கள். மீண்டும் தற்போதைய மின் கட்டணத்திலே விசைத்தறி நெசவாளர்கள் நலன் பாதிக்கப்படாமல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. பி.எம். நரசிம்மன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Point of order. அதாவது ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கும்போது இப்படி 110-ன்கீழ் அறிக்கை போடுவது சரியல்ல, இதை நான் ஆட்சேபிக்கிறேன்.



2003 *மார்ச்* 31]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் அறிக்கை எப்போது வேண்டுமானாலும் போடலாம். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மதிப்புக் கூட்டு வரியை எதிர்த்து வியாபாரிகள் கடை அடைப்புப் போராட்டம் நடத்துவது குறித்து நான் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

## 4. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்— தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே சொல்லி விட்டேன். நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் முடிந்ததற்குப் பிறகு ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்வோம். திரு. பி. எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அரிய வாய்ப்பினை உருவாக்கித் தந்த, நான் நித்தம் நித்தம் வணங்குகிற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்திய துணைக் கண்டத்தில் தமிழகத்தை முதல் மாநிலமாக உருவாக்குவதற்காக பல்வேறு நலத் திட்டங்கள் நிதிநிலை அறிக்கையிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன. அனைத்துத் துறைகளையும் முதன்மை இடமாக்குவதற்காக பல்வேறு அரிய திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நியாயமான, நம்பிக்கையான, நலம் பயக்கத்தக்க அறிக்கை இந்த நிதிநிலை அறிக்கையாகும். இருட்டிலே இருந்த தமிழகத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிற தூண்டுகோலாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கிற 19 [illegible] சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, ரூபாய் [illegible] கோடி அளவிலே

18453
சென்னை-600 008

திட்ட வளர்ச்சிப் பணிகளையும், 2,95,715 பயனாளிகள் பயன் பெறுகிற வகையிலே நலத் திட்ட உதவிகளையும் அளித்து சாதனை படைத்தார்கள் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு புரட்சிகரமான திட்டங்களையும், புதிய, புதிய திட்டங்களையும் குறுகிய காலத்திலே நிறைவேற்றியிருக்கிறது. நிதி நெருக்கடி இருந்தாலும்கூட, தமிழக மக்களுக்காக, தமிழக வளர்ச்சிக்காகப் பல்வேறு நலத் திட்டங்களை உருவாக்கி, அற்புதமான திட்டங்களைக் குறுகிய காலத்திலே உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் உறுதியாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்

28 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து ரூபாய் 341.92 கோடி அளவிற்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் ஒரு திட்டத்தை அரசு அறிவித்திருப்பதைக் கண்டு அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அனைத்து மாவட்டங்களிலும் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக ரூபாய் 149.48 கோடி அளவிற்கு அரசு ஒதுக்கீடு செய்து அற்புதமான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

ஊரகக் குடிநீர் வழங்குவதற்காக, குறைந்தபட்சத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ரூபாய் 411 கோடி ஒதுக்கீடு செய்து அனைவரும் பாராட்டுகிற வகையிலே அம்மா அவர்களுடைய அரசு அற்புதமான திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

கடந்த ஓராண்டு காலமாக வறட்சிப் பணிகளைப் போர்க்கால அடிப்படையிலே மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

காவிரி டெல்டா விவசாயிகளுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்திலே அம்மா அவர்கள் ஆலோசனை நடத்தி ரூபாய் 164.18 கோடியை அறிவித்து, அதனைச் செயல்படுத்தி, விவசாயிகளின் கண்ணீரைத் துடைத்தார்கள்.



இயற்கை இடர்பாடு நிவாரணமாக ரூபாய் 55.90 கோடி வழங்கினார்கள். 30-7-2002 அன்று மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்திலே வறட்சிப் பணிகளுக்காக ரூபாய் 65 கோடியை ஒதுக்கீடு செய்தார்கள். குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 11-12-2002 அன்று ரூபாய் 30 கோடியை ஒதுக்கீடு செய்து சாதனை படைத்தார்கள். தென்னை விவசாயிகளுக்கு ரூபாய் 8.9 கோடி ஒதுக்கீடு செய்தார்கள். மழைநீரைச் சேகரிப்பதற்காக ரூபாய் 25 கோடியை ஒதுக்கீடு செய்தார்கள். காவிரி டெல்டா பகுதியிலே இருக்கின்ற 10 இலட்சம் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூபாய் 21 கோடி மதிப்புள்ள தீபாவளிப் பண்டிகைப் பரிசை வழங்கினார்கள் என்பதை இந்த நாடு மறக்க முடியாது.

முற்பகல் 11-10

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வறட்சி நிவாரணமாக 2002 ஜூலை மாதத்திலேயிருந்து வரும் ஜூன் மாதம் வரைக்கும் நில வரி முழுவதையும் ரத்து செய்திருக்கிறார்கள். பயிர்ப் பாதிப்பு ஏற்பட்டுள்ளவர்களுக்கு ரூபாய் 250 கோடி அளவிற்கு நிவாரணம் வழங்க ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். சிறு மற்றும் குறு விவசாயிகள் நடப்பாண்டில் பெற்றுள்ள குறுகிய காலக் கடன்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டியை முழுவதுமாகத் தள்ளுபடி செய்து சாதனை படைத்திருக்கிறார்கள். ஏறத்தாழ வறட்சி நிவாரணமாக மட்டும் ரூ.350 கோடியை ஒதுக்கீடு செய்து ஏழை எளிய விவசாயிகளினுடைய கண்ணீரைத் துடைத்து சாதனை படைத்திருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்பு இருந்த அரசுகள் ஆட்சிப் பீடத்திலே இருந்தபோதுகூட, எத்தனையோ முறை வறட்சி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இதுபோன்ற பணிகளை எந்த முதலமைச்சராவது செய்தார்களா என்பதைத் தயவு செய்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொஞ்சம் மனசாட்சியோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள்கூட ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்த பட்ஜெட் இடைத் தேர்தலுக்கு முன்பு வந்திருக்குமேயானால், முடிவு வேறு விதமாக இருந்திருக்கும் என்று சொன்னார்கள். உண்மைதான். இடைத் தேர்தலுக்கு முன்பு மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த பட்ஜெட்டைக் கொடுத்திருப்பார்களேயானால், தோற்றவர்களுக்கு deposit போய் இருக்கும் என்பதை நான் இந்த

நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றையெல்லாம் சாதித்து வெற்றி கண்டவர்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். முதல்வராகப் பொறுப்பேற்று நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்கள். ஏதாவது ஒரு தொகுதியிலே இராஜினாமா செய்துவிட்டு தேர்தலிலே நின்று பார்க்கட்டும் என்றுகூட இங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சில பேர் சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆண்டிப்பட்டி தொகுதியிலே தேர்தலிலே நின்று வென்றார்கள். சரித்திரம் படைத்தார்கள் என்பதை இந்த நாடு மறந்திருக்க முடியாது. காரணம் அன்றைக்கு அவர்கள் முதல்வராக இருந்துகொண்டேகூட ஆண்டிப்பட்டி தொகுதியிலே தேர்தலிலே போட்டியிட்டிருக்கலாம். ஆனால் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்ததற்குப் பின்னாலேதான் நான் முதல்வராகப் பொறுப்பேற்பேன் என்று சொல்லித் தேர்தலிலே நின்று வெற்றி பெற்றார்கள். ஆனால் தமிழகத்திலே இதற்கு முன்பு சில கட்சித் தலைவர்கள்— முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே — கர்மவீரர் காமராஜர் அவர்கள்கூட குடியாத்தம் தொகுதியிலே முதல்வராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான்—நின்று வென்றார்கள். ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எந்தக் கட்சியினுடைய ஆதரவும் இல்லாமல் தன்னந்தனியாக ஆண்டிப்பட்டி தொகுதியிலே வென்று முதல்வராகப் பொறுப்பேற்றார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இதுபோன்ற சாதனையை வேறு எந்தக் கட்சித் தலைவராவது செய்து காட்டியிருக்கிறார்களா என்பதை நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வரலாற்றுக்கு ஒரு வரலாறு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். இங்கே பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் குறிப்பிடுகிறபோது வெந்த புண்ணிலே வேல்பாய்ச்சியது போல என்று சொன்னார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்திலே நிதி நிலைமை, நிர்வாகம் வெந்த புண்ணாக்கப்பட்டது என்பதை அவரே ஒப்புக்கொள்கிறார். Confession statement அவரே கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11-15*

பல்வேறு துறைகளுக்கு நிதி ஒதுக்கம் குறைக்கப்பட்டிருக்கிறது என்றார். இது சிக்கன நடவடிக்கையைப் புலப்படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக்



கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களாலே வெந்த புண்ணாகச் சீரழிக்கப்பட்ட நிதி நிலைமையை, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் சரிசெய்து, சீர்தூக்கி வருகிறார்கள்.

மேலும், மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் குறிப்பிடுகிறபோது, எத்தனை வழக்குகளில் பத்திரிகைகள் சிக்கியிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். இதனை பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சொல்வதற்கு எவ்வித உரிமையும் இல்லை. காரணம், அவர்கள் கடந்து வந்த பாதையைக் கொஞ்சம் பின்னோக்கிப் பார்க்க வேண்டும்.

பிரதான எதிர்க்கட்சி ஆளுகிறபோது பத்திரிகைகள் எவையேனும் அரசுக்கு எதிரான கருத்துகளை வெளியிட்டால், அப்போது பத்திரிகைகளை அச்சுறுத்துவது, அலுவலகங்களைத் தாக்குவது என்பது பிரதான எதிர்க்கட்சிக்கு வாடிக்கை. இதற்குப் பல்வேறு உதாரணங்கள் இருக்கின்றன. குமுதம், கல்கி, ஆனந்த விகடன், நவசக்தி, நாத்திகம், பிளிட்ஸ், அலை ஓசை, இண்டியன் எக்ஸ்பிரஸ், இதுபோன்ற பத்திரிகைகளை அச்சுறுத்தியதையும், பத்திரிகைகளை எரித்ததையும் இந்த நாடு மறந்துவிடவில்லை. அப்போது இவர்கள் பத்திரிகைகள்மீது எவ்வளவு வழக்குகள் போட்டார்கள் என்பதையும் இந்த நாடு மறந்துவிடவில்லை. உங்களுடைய ஆட்சிக்கு எதிரான கருத்துகளைத் தெரிவித்ததால், பத்திரிகைகளுக்குத் தன்னிச்சையாக மின் வெட்டைக் கூடச் செய்தவர்கள் நீங்கள்தானே என்று தயவுசெய்து எண்ணிப் பாருங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2,35,000 குமுதம் பிரதிகளைப் பறிமுதல் செய்தது யார், நீஙகள்தானே; தி.மு.க. ஆட்சியில்தானே. உதாரணத்திற்கு, ஒரு நிகழ்ச்சியைப் பற்றி நீதிபதி சர்க்காரியா அவர்கள் தன்னுடைய தீர்ப்பிலே கூறியிருக்கிறார்கள். இந்த அவையிலேகூட அந்த ரிப்போர்ட்டைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பிலே, 'அலை ஓசை மீதும், வேலூர் நாராயணன் மீதும் நடத்திய தாக்குதல்கள், பிரதாப் சந்திரன் வீட்டிலே குழுமியிருந்த கூட்டத்தின் ஒரு பகுதியான தி.மு.க. விஷமிகளால் நடந்தவைதான்; நடப்புப் பிரச்சினைகள் குறித்து கருத்துத் தெரிவிக்கும் உரிமையை நசுக்குவதுதான், இந்த பயங்கரத் தாக்குதல்களை நடத்திய விஷமிகளின் முடிவான நோக்கம் ஆகும்' என்று அன்றைக்கு சர்க்காரியா, தன்னுடைய தீர்ப்பிலே கூறியிருக்கிறார்.

இதைச் சொல்வதற்குக் காரணம்; பத்திரிகைகளுடைய சுதந்திரத்தைப் பறித்தது தி.மு.க. அரசுதான் என்கின்ற குற்றச்சாட்டினை இந்த நேரத்திலே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, யாரோ ஒருவரின் சுயநலத்திற்காகத் தன் குடும்பப் பத்திரிகை செழிப்பாக இருக்க வேண்டும், வளர வேண்டும் என்பதற்காக அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட 'நம் நாடு' பத்திரிகையை மூடியது யார் என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்த்திடவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அது 'நம் நாடு' என்கிற ஒரு இயக்கப் பத்திரிகை. அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட பத்திரிகை. அந்தப் பத்திரிகையை மூடி, தன்னுடைய பத்திரிகை, தன்னுடைய குடும்பப் பத்திரிகை வரவேண்டும் என்று பத்திரிகைகள்மீது அடக்குமுறை மட்டுமல்ல; தன் கட்சிப் பத்திரிகைக்கு மூடு விழா செய்ததுகூட திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்கின்ற குற்றச்சாட்டினை நான் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல; உங்களுடைய ஆட்சிக் காலத்திலே பத்திரிகைகள் மீது அடக்குமுறை, (குறுக்கீடு) I am not yielding. (குறுக்கீடு) I am not yielding. நடந்ததைத்தான் நான் சொல்கிறேன்.

**திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. பி.எம். நரசிம்மன்**: Yes, Yes , சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாடு பத்திரிகை நிறுத்தப்பட்டதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பத்திரிகை. ஒரு பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவது, நடத்தாதது என்பது அதனுடைய circulation-ஐப் பொறுத்துத்தான் இருக்கிறது. எனவே, அதனுடைய நிலைமைக்கு ஏற்றபடி, circulation இல்லாததாலும், அது அதிகமாகப் போகாததனுடைய காரணத்தாலும், அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு முடிவு எடுத்து, பொதுக் குழு, செயற்குழுவிலே முடிவு எடுத்து, அது நிறுத்தப்பட்டதே தவிர, யாரோ ஒருவருடைய குடும்பப் பத்திரிகையை வளர்ப்பதற்காக, கட்சிப் பத்திரிகையை நிறுத்தி விட்டார்கள் என்று சொல்வது அவதூறான செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உங்களுக்கும், எனக்கும் நன்றாகத் தெரியும். ஏன் நின்று போனது என்கிற விவகாரம் தெரியும். பேசுங்கள். (சிரிப்பு)



***திரு. துரைமுருகன்:** நீங்களே சொல்லுங்கள் சார், சபாநாயகர் அவர்களே சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அதிகாரபூர்வமான பத்திரிகை, அது வாங்குவோருடைய எண்ணிக்கை குறைந்துவிட்ட காரணத்தால் நிறுத்தப்பட்டது என்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மற்ற பத்திரிகைகளும் நிறுத்தப்பட்டிருக்க வேண்டுமல்லவா?

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரியாதது அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்திலே கிட்டத்தட்ட 40 பத்திரிகைகளுக்கு மேலே இருந்தன. தனியார்கள் நடத்தினார்கள். பேரறிஞர் அண்ணாவே நடத்தினார்கள், அவர்களே சில நாட்களில் நிறுத்திவிட்டார்கள். என்.வி. நடராசன் திராவிடன் நடத்தினார்கள், நிறுத்திவிட்டார்கள். மாறன் நடத்தினார் அது அவரவர்களுடைய, ஒவ்வொருவருடைய..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை எல்லாம் வாரப் பத்திரிகைகள்.

**திரு. துரைமுருகன்:** ஒரு இயக்கம், தங்களுடைய பத்திரிகையைத் தொடர்ந்து நடத்துவதும் நடத்தாததும், அது கட்சியினுடைய பொதுக் குழுவைப் பொறுத்ததே தவிர, அது ஒரு குற்றச்சாட்டுக்கு உட்படுவதல்ல என்பதுதான் என் விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் இதைக் கொஞ்சம் நீங்கள் நெஞ்சில் கைவைத்துக் கொண்டு சொல்லிவிட்டால் பரவாயில்லை.

**திரு. துரைமுருகன்:** நெஞ்சில் என்ன, தலைக்குமேலே கையைத் தூக்கி இதை நிறுத்தியதில் எந்தவித உள்நோக்கமும் கிடையாது. இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழு செய்த முடிவு, முடிவு என்பதை இருகரம் தூக்கியே சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்போதும் தாங்கள் உண்மையைப் பேசக்கூடியவர்கள் என்பதை இப்போது ஒத்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்புவது, நம் நாடு என்கிற பத்திரிகை நிறுத்தப்பட்டதற்கு

circulation இல்லை என்று சொல்கிறார்கள். அப்படியானால் ஒரு தனிப்பட்ட குடும்பத்திற்குச் சொந்தமான வேறு பத்திரிகையை ஏன் அவர்கள் தொடர்ந்து நடத்தினார்கள் என்பதை அவர்கள் பதிலிலே சொல்லியாக வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டு, இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பத்திரிகைகள்மீது அடக்குமுறையும், தொழிற்சங்கத் தலைவர்களைத் தாக்குவதும் வழக்கம், மாணவர்களைத் தாக்கிக் கைது செய்வது வழக்கம்; விவசாயிகளை வஞ்சிப்பது வழக்கம்; அரசு ஊழியர்களை ஏமாற்றுவது வழக்கம், இது இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நடைபெற்றதா இல்லையா என்பதை இவர்கள் சொல்ல வேண்டும்.

இங்கே சில கட்சித் தலைவர்கள் உள்ளே வர வாய்ப்பு இல்லாதவர்கள் வெளியிலே பேசுகிறார்கள், வேறு வழியில்லை. ஆனால் உள்ளே வரக்கூடிய வாய்ப்பினைப் பெற்றிருக்கக்கூடிய உறுப்பினர்கள் வெளியிலே அறிக்கை விடுகிறார்களே அதன் மர்மம் என்ன? நான் கேட்பதெல்லாம் இங்கே அவையிலே வந்து உங்களுடைய கருத்துகளைச் சொன்னால் மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்பதற்கு உங்களால் பதில் சொல்ல முடியாது என்கிற பயமா? உங்களிடம் நான் இந்த நேரத்திலே கேட்பது, உள்ளே வர முடியாது என்று சொன்னால், உங்கள் பதவியை இராஜிநாமா செய்ய வேண்டியதுதானே. கேட்க முடியாதா? எதிர்க்கட்சிகள் என்று சொன்னால் மக்கள் பிரச்சினைகளான பொதுப் பிரச்சினைகளை எடுத்துப் பேச வேண்டும். பிரச்சினைகள் வராதா என்று ஏங்கிக் கொண்டிருக்கக் கூடாது. பிரச்சினைகளைத் தூண்டிவிடுவதும் எதிர்க்கட்சிகளின் வேலையாக இருக்கக்கூடாது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஆகியோரின் பிரச்சினைகள் அரசுக்கு அச்சுறுத்தலாக இருக்காதா என்று பிரதான எதிர்க்கட்சி கனவு கண்டுகொண்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அத்தனை சதி வலைகளையும் தூள் தூளாக்கி அறிவுபூர்வமாகப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மைக்கு மாறானவற்றைப் பேசி மக்களைத் திசை திருப்ப முயற்சிக்கலாம் என்றும், அதிலே எப்படியாவது வெற்றிபெற்றுவிடலாம் என்றும் பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் கனவு காண்கிறார்கள். ஆனால் அது பகல் கனவுதான், முடியாது என்று, நின்றால் deposit போகும் என்று அஞ்சி, சாத்தான்குளத்திலே பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஓடி ஒளிந்த கதையை யாரும் மறந்திருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஆட்சி என்பது உங்களுக்கு



எட்டாக் கனி; வெற்றி என்பது உங்களுக்குப் பகல் கனவுதான். ஆட்சியும் மாட்சியும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவருக்குத்தான் என்று மக்கள் முடிவு எடுத்துவிட்டார்கள். கட்சித் தலைவரே உரைக்குத் தாவிவிட்டார். உங்களுக்குக் கரை ஏன் என்று நாங்கள் கேட்க ஆசைப்படுகிறோம். தேர்தல் வருகிறபோது கொள்கைகளை மறந்து நேரத்திற்கு ஒரு பேச்சு என்று நீங்கள் தேர்தல் நேரத்திலே சொல்கிற பாங்கினை மக்கள் யாரும் மறந்திருக்க முடியாது.

முற்பகல் 11-25

1984 ஆம் ஆண்டிலே டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகம் முழுவதும் சூறாவளிச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அரியணையிலே அமர்த்தினார்கள். அப்பொழுது பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்கூட ஊர் ஊராக வந்தார். அப்போது, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஐஸ் பெட்டியிலே இருக்கிறார்; ஆட்சியை என்னிடத்திலே கொடுங்கள்; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் வந்ததற்குப் பின்னாலே அவரிடத்திலே ஒப்படைத்துவிடுகிறேன் என்று பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர் அவர்கள் இரட்டை இலைத் தோழர்களிடம் மண்டியிடவில்லையா என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களிடம் பிச்சை கேட்டார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களிடத்திலே மண்டியிட்டார். ஆனால் பலித்ததா என்று சொன்னால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மீண்டும் வருவார், ஆட்சியை அமைப்பார் என்று அவர்கள் எடுத்துச் சொல்லி மீண்டும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியைக் கொண்டு வந்தார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இயக்கம் ஆரம்பித்ததற்குப் பின்னாலே தமிழக சட்டமன்றத்திற்கு 7 முறை பொதுத் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. அந்த 7 முறைகளிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 5 முறை வெற்றி பெற்றிருக்கிறது. இரண்டே முறைதான் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. அதேபோல, இயக்கம்

தொடங்கியதற்குப் பின்னாலே பாராளுமன்றத்திற்கு 8 முறை பொதுத் தேர்தல் நடைபெற்றிருக்கிறது. ஆகவே அவற்றிலேகூட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 5 முறை அபார வெற்றி பெற்றிருக்கிறது. மூன்றே முறைதான் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆக, இப்படிப் பொதுத் தேர்தல்களிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அபார வெற்றி பெற்றிருக்கிறது. அதற்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் மூலகாரணம் என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர் அவர்கள் ஈராக் மீது குண்டு விழுந்ததுபோல் இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று சொன்னார்கள். கொஞ்சம், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே என்னென்ன நடந்தது என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். 1996-லே அம்மா அவர்கள் ஆட்சியைவிட்டு இறங்குகிறபோது, கஜானாவில் இருப்பு ரூ.619 கோடி. அதற்குப் பின்னாலே வந்த முதல்வர் திரு. கருணாநிதி அவர்களின் திறமையற்ற நிர்வாகத்தால், 2000-2001-ல் சுமார் ரூ3,922 கோடி வருவாய்ப் பற்றாக்குறை; மற்றும், ரூ5,781 கோடி fiscal deficit என்று கடனிலே, திவாலான நிலையிலே தமிழகத்தை விட்டுச் சென்றார். அதனாலேதான் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மக்கள் பிரதான கட்சியை திவாலாக்கிவிட்டுச் சென்றார்கள். மின்சார வாரியத்திலே 5,000 கோடி ரூபாய் நஷ்டம். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலே ரூ. 612 கோடி நஷ்டம். கூட்டுறவு நூற்பாலைகளில் ரூ.352 கோடி நஷ்டம். அரசுக்குச் சொந்தமான பொது நிறுவனங்களிலே ரூ.2,292 கோடி அளவுக்கு ஒட்டுமொத்த நஷ்டம்.

இவர்கள் ஆளுகிறபோது வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளவில்லை. வேலைவாய்ப்பைப் பெருக்கக்கூடிய விவசாயத் துறையை முற்றிலுமாக உங்கள் ஆட்சியிலே புறக்கணித்தீர்கள். அரசாணை 75-ஐப் போட்டு, அரசுக்கு வேண்டிய பொருட்களை பிற மாநிலங்களிலேயிருந்து வாங்கியதன் மூலம் தமிழகத்துச் சிறு தொழில், குடிசைத் தொழில் போன்றவற்றை நசுக்கி, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வயிற்றிலே அடித்த பெருமைகூட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாரும். இப்படித் தமிழகத்தின் பொருளாதாரத்தை முந்தைய ஆட்சியினர் சீரழித்தனர். ஆனால், பொதுமக்களைப் பாதிக்காத சிறப்பான பட்ஜெட்டை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது அளித்திருக்கிறார்கள்.



முற்பகல் 11-30

மாண்புமிகு அம்மா அவர்கள் அரசாணை 75-ஐ இரத்து செய்து சிறு மற்றும் குறுந்தொழில்களின் வளர்ச்சிக்கு வழி வகுத்தார்கள். இப்படி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வயிற்றிலே பாலை வார்த்த பெருமை மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும்.

ஒப்பந்தக்காரர்களுக்கு உங்களுடைய காலத்திலே ஆயிரம் கோடி ரூபாய்க்குப் பணம் தர வேண்டும். அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு என்று சொல்லி ரூபாய் 1800 கோடியை எங்கள் அரசு மீது சுமத்தினீர்கள். அரசுப் பேருந்துகள் டீசல் மற்றும் உரிய பாகங்களை வாங்கிய கடன் மட்டும் சுமார் 1100 கோடி ரூபாய். இதைத் திருப்பித் தராததால் ஏறத்தாழ 4000 பேருந்துகள் ஓடவில்லை. இந்தச் சுமையைக்கூட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் மீது சுமத்திய பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேரும். ஆக, இப்படி நிதி நிலைமை சீரழிக்கப்பட்டிருந்தாலும், இன்றைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக அவற்றையெல்லாம் சரி செய்து ஆக்கபூர்வமான திட்டங்களையும், புதிய புதிய சிறப்பான சீர்மிகு திட்டங்களையும் புரட்சிகரமான சட்டங்களையும், மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே வேளாண்மையினைத் தமிழகத்திலே முதன்மைத் துறையாக மாற்றிட 385 வளர்ச்சி வட்டாரங்களுக்குக் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து வேளாண் தொழில், உணவுப் பதப்படுத்தும் தொழில் மேம்பாடு அடைவதற்கு தனிக் கவனம் செலுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். தமிழக மின் வாரிய ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளபடி, தமிழக மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய மின் கட்டணம் செலுத்த உதவும் வகையிலே ரூபாய் 100 கோடி ஒதுக்கீடு செய்து, சிறு குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட நிதிநிலை அறிக்கை வழிவகை செய்வது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவிரி டெல்டாவின் கடைக்கோடியிலே இருக்கக்கூடிய விவசாயிகள் பாசன வசதி பெற்றிட ரூபாய் 748 கோடியாக நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகளின் துயர் துடைக்கும் அரசாக இன்றையதினம் அம்மா அவர்களினுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

கடல்சார் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்காக ரூ.25.13 கோடியும், மீனவர் வீட்டு வசதித் திட்டத்திற்காக, ரூ.10.21 கோடியும் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் இது பாராட்டுக்குரிய ஒன்றாகும். ஒட்டுமொத்தமாக இந்தியாவின் வளர்ச்சி, கிராமங்களின் வளர்ச்சியில்தான் அமைந்துள்ளது என்ற கூற்றுக்கு ஏற்ப ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்காக, 12 ஆயிரம் கிலோ மீட்டர் சாலைகளைப் பராமரிப்பதற்காக, ரூ.50 கோடியை இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். நெசவாளர் நலன் காக்கும் வகையிலே ரூ.83 கோடியை நெசவாளர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காக, ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலனுக்காக ரூபாய் 1,380.48 கோடியை ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

அதேபோன்று ஆதிதிராவிடர் நலனுக்காகவும், பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காகவும், பல்வேறு திட்டங்களுக்கு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே நிதிநிலை அறிக்கையிலே நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மொத்தத்தில், இந்த நிதிநிலை அறிக்கையானது, வான வில்லின் ஏழு நிறங்களைப் போல், அனைத்து நலத் திட்டங்களையும் தன்னுள் கொண்டு அமைந்துள்ளது. இந்த நிதிநிலை அறிக்கை எதிர்காலத் தமிழகத்தின், தமிழக மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக, நிகழ் காலத்தில் நிகழ்த்தப்பட்டுள்ள சாதனை புரிந்த அறிக்கையாகும். மேலும், இந்த பட்ஜெட் ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தாம் ஜெட் வேகத்திலே பயணித்திட வழி வகுக்கும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையானது, ஏழைகள் வாழ்வு ஏற்றம் பெற்றிடவும், தமிழகம் தன்னிறைவு பெற்ற மாநிலமாகத் திகழ்ந்திடவும் அனைவரின் பாராட்டினைப் பெற்றதாக அமைந்திருப்பது சரித்திரம் சொல்லப்போகும் சாதனையாகும். சீரிய திட்டங்களை அறிவித்துள்ளார்கள், நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்களின் பொற்கால ஆட்சிக்கு இவை சான்றுகளாகும் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொண்டு சிறப்பான திட்டங்களை, சீர்மிகு திட்டங்களை, புரட்சிகரமான சட்டங்களை உருவாக்கி வருகிற மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த நாட்டு மக்கள், "நீங்கள் நல்லா இருக்கணும் நாடு முன்னேற இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற" என வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். சரித்திரம் படைத்திடும், சாதனைகளைப் படைத்திடும் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள், பல்வேறு



நலத் திட்டங்களை, ஏழையெளியவர்களுக்காக, அடித்தளத்து மக்களுக்காக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று வாய்ப்புக்கு நன்றிகூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையின்மீது, எங்களது அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில், என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய உள்ளபூர்வமான நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த அளவிலே, இங்குக் குறிப்பிட வேண்டும் என்று சொன்னால், நமது சங்க இலக்கியங்களிலே சுட்டிக்காட்டியதுபோல,

"கல்வி கரையில கற்பவர் நாட்சில
மெல்ல நினைப்பின் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து."

என்று சொல்வார்கள். அன்னப் பறவையானது, பாலையும், தண்ணீரையும் கலந்து வைத்தால், அதற்குரிய பாலை மட்டும் எடுத்துக்கொண்டு, தண்ணீரை விட்டுவிடுமாம். அதுபோல, கல்வி என்பது கரையில்லாதது. அதைக் கற்கின்ற நாளோ நமக்கு மிகக் குறைவு. அதிலே தெளிவான நூல்களை மட்டும் கற்று அறிவதுதான் அறிவாளர்களுடைய சிறப்பு என்று சொல்வார்கள். அதுபோலத்தான், இப்போது இந்தத் தமிழகத்திலே, வளர்ச்சித் திட்டங்கள் செய்வதற்கு எண்ணற்ற திட்டங்கள் இருந்தாலும் நம்முடைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டு, எவ்வெவை இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் ஏழையெளிய மக்களை, நடுத்தர மக்களைப் பாதிக்காத அளவிலே இருக்கக்கூடிய நிலையிலே திட்டங்களைச் சீரோடு தீட்ட வேண்டும் என்கின்ற முறையில், அத்தனையையும் ஓரளவுக்குப் பூர்த்தி செய்கின்ற நிலையில் மக்களுடைய அன்றாடத் தேவைகளை அறிந்து செயலாற்றுகின்ற நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை வகுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் என்னைப் பொறுத்த அளவிலே நான் தெரிந்து கொண்டிருக்கின்ற நிலை.

இப்போது, தமிழகம், கடுமையான வறட்சியிலே பீடிக்கப்பட்டிருக்கிறது; இப்போது எங்கும் வறட்சி நிலவிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து

கொண்டிருக்கிற இந்த அரசு, 28 மாவட்டங்களையும், வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, அந்த மாவட்டங்களிலே ஏற்படுகின்ற குடிநீர்ப் பற்றாக்குறையை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு, ரூ.149 கோடியை ஒதுக்கியிருக்கிறது. அப்படியிருந்தாலும்கூட, இப்போது இருக்கின்ற சூழ்நிலையில், மீண்டும் வறட்சியினுடைய கொடுமை அதிகரித்துக்கொண்டிருக்கின்ற நிலையில், இந்த நிதிகூடப் போதாத அளவுக்குத்தான் இருக்கிறது என்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது.

அதுபோலச், சட்டம்-ஒழுங்கு தமிழகத்திலே நன்கு பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்காக, இந்த ஆண்டு, காவலர்களுக்காக ரூ.1,291 கோடியை ஒதுக்கி, இந்த நிதிநிலை அறிக்கையிலே, சட்டம்-ஒழுங்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

அதுபோலக் குடிநீர் ஆதாரத்திற்காக, ஸ்வஜல்தாரா திட்டம் என்பது, மத்திய அரசினுடைய திட்டம்; அந்தத் திட்டத்தின் மூலமாகக் கிராமங்களிலே இருக்கின்ற குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க வேண்டும் என்பதற்காக ரூ. 411 கோடி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதிலே ஒன்று, இப்போது அந்தத் திட்டத்தை நிறைவு செய்கின்றபோது, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க வேண்டுமென்று சொன்னால், அதிலே 10 விழுக்காடுகள் கிராமத்தினுடைய பங்கு வேண்டும் என்கின்ற நிலை சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இப்போது, கிராமங்களிலே இருக்கின்ற கடுமையான வறட்சியாலும், அங்கே இருக்கின்ற மக்கள் பல்வேறு விதத்திலே பாதிப்புக்குள்ளாக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலும் அந்த 10 விழுக்காடு நிதி என்பதைச் செலுத்த முடியாத நிலையிலே கிராமத்திலே இருக்கின்ற மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு, அந்த 10 சதவீத நிதியை மாநில அரசே செலுத்துகின்ற ஒரு நிலையை ஏற்படுத்துமானால், அந்தத் திட்டத்தைச் சீராகக் கிராமப்புறங்களிலே செயல்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை உங்களுடைய மேலான பார்வைக்கு நான் எடுத்து வைப்பதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

முற்பகல் 11-40

அதுபோலப் பொது சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழை எளிய மக்கள் தங்களுடைய வைத்திய வசதியைப் பெற வேண்டுமென்பதற்காக நீங்கள் அதற்குரிய



அளவிலே நிதியை ஒதுக்கி இருக்கிறீர்கள். அதுபோல் பல ஆண்டுகளாகச் சீர்செய்யப்படாமல், செப்பனிடப்படாமல் இருக்கின்ற சாலைகள் எல்லாம் செப்பனிடப்பட வேண்டும் என்பதற்காக, அதற்குரிய நிதி ஆதாரத்தையெல்லாம் ஒதுக்கி இருக்கிறீர்கள். எனவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே எதை எதை நீங்கள் முக்கியமாக முதன்மைப்படுத்தி எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதையெல்லாம் செய்து இருக்கிறீர்கள் என்பதை நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே குறிப்பிட்டதாக இங்கு பேசிய பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் சொன்னார்கள். வருவாய்ப் பற்றாக்குறை என்பது, நிதிப் பற்றாக்குறையில் 35 விழுக்காடுக்கு மேல் அதிகரித்தால் அது நடைமுறைக்கு உகந்த அறிவார்ந்த செயலாக இருக்க முடியாது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, ஆனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 56.64 சதவீதமாக இது வேறுபட்டு இருப்பதற்கு காரணம் என்ன என்பதனை இங்குக் கேட்டார்கள். நானும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்திலிருந்து இதற்குரிய விளக்கத்தைப் பெறவேண்டும்; இப்படி வேறுபாடு வந்ததற்கு ஏதாவது முக்கியமான காரணங்கள் இருக்கின்றனவா;...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் மாண்புமிகு பொன்முடி அவர்கள் பேசுகின்றபோது இந்த நிதிநிலை அறிக்கையிலேயே 88-வது பக்கத்தில் குறிப்பிட்டுள்ள சில வாசகங்களை இங்கே வாசித்துக் காண்பித்தார்கள். அதாவது 88-வது பக்கத்தில் கூறப்பட்டுள்ளது; "வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறையில் 35 சதவீதத்துக்கு மேல் அதிகரித்தால், அது நடைமுறைக்கு உகந்த அறிவார்ந்த செயலாக இருக்காது, 1999-2000 ஆம் ஆண்டில் இந்த விகிதாச்சாரம் 82 சதவீதமாக இருந்தது" இதை நான் சுட்டிக்காட்டுகிறேன். மாண்புமிகு பொன்முடி அவர்கள் மிகவும் சாதுரியமாக இந்த ஒரு வாசகத்தை மட்டும் வாசித்துவிட்டு, அதோடு நிறுத்திக் கொண்டார்கள். வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறையில் 35 சதவீதத்துக்கு மேல் அதிகரித்தால், அது நடைமுறைக்கு உகந்த அறிவார்ந்த செயலாக இருக்காது என்பதை மட்டும் அவர் இங்கே வாசித்துவிட்டு, அப்படியானால் இந்த ஆண்டு 56.64 சதவீதமாக இருக்கிறதே, இது அறிவார்ந்த செயல்தானா என்று கேட்டார். மாண்புமிகு உறுப்பினர் படித்த வாசகங்கள் 88-வது பக்கத்தில் இருக்கின்றன. அதே நிதிநிலை அறிக்கையில் அடுத்த பக்கத்திலேயே

89-வது பக்கத்திலேயே இதற்கான விளக்கம் தரப்பட்டு இருக்கிறது. அதாவது, தி.மு.க. ஆட்சியில் 1999-2000 ஆம் ஆண்டில் இந்த விகிதாச்சாரம் 81.75 சதவீதமாக இருந்தது. பின்னர் 2000-2001 ஆம் ஆண்டில் அது 67.69 சதவீதமானது. 2001-2002-ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அது 57.80 சதவீதமாகக் குறைந்தது. மீண்டும் 2002-2003 ஆம் ஆண்டில் அது 73 சதவீதமாக உயர்ந்தது. இப்போது மீண்டும் இந்த ஆண்டு 2003-2004-ல் 56.64 சதவீதமாகக் குறைந்துள்ளது. 2002-2003-ல் 73 சதவீதமாக இந்த விகிதாச்சாரம் உயர்ந்ததற்கு என்ன காரணம் என்று நிதிநிலை அறிக்கையிலேயே 89 ஆம் பக்கத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

முற்பகல் 11-45

தமிழ்நாடு மின் வாரியம் பணிகளை நல்கும் மத்திய அமைப்புகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான ரூ.1,962 கோடியை தமிழ்நாடு மின் வாரியத்திற்கு உதவித் தொகையாக மாற்றியதால் 2002-2003 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் வருவாய்ப் பற்றாக்குறை அதிகரித்துள்ளது. இதற்கிணையாக இக்கடன் பொறுப்புகளுக்கு அரசு தொகை கொடுத்துத் தீர்க்க வேண்டியுள்ளதால் அரசின் கடன்கள் அதிகரித்தன. இது நீங்கலாக, 2002-2003 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில், வருவாய்ப் பற்றாக்குறை அளவு 19.12 சதவீதமாகும். அதாவது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அவர்கள், மின்சார வாரியம், மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டணங்களை எல்லாம் செலுத்தாமல் போய்விட்டார்கள். Unpaid bills-ஆக வைத்துவிட்டுப் போனார்கள். அந்தச் சுமையை எல்லாம் எங்களுடைய அரசு ஏற்க வேண்டியதாயிற்று. அதனுடைய மொத்த மதிப்பு 1,962 கோடி ரூபாயாகும். மின்சார வாரியம், மத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய இந்தக் கடன் பாக்கியைத் தமிழக அரசே ஏற்றுக் கொண்டது. அதனால்தான் வருவாய்க் கணக்கில் நிதிப் பற்றாக்குறை 2002-2003-ல் 73 சதவிகிதம் ஆகிவிட்டது. இந்த மின்சார வாரியம் கட்டவேண்டிய தொகையை நீக்கிவிட்டால் ஒட்டுமொத்த வருவாய்ப் பற்றாக்குறை அளவு 19.12 சதவிகிதம் மட்டுமேயாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய சந்தேகத்திற்கு விடை இங்கேயே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரு, explanation. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்



புள்ளிவிவரங்களைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். நான் அன்று பேசுகிறபோது சுட்டிக்காட்டியதுகூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயே 81.75 சதவிகிதத்திலிருந்து அடுத்த ஆண்டிலேயே குறைந்திருக்கிறது. A reducing trend 67.69 சதவிகிதம் ஆகியிருக்கிறது. நீங்கள் சொன்ன கடன் எல்லாம் அதிகமாகக் கட்டி இருந்தால், அடுத்த வருடம் எப்படிக் குறைந்தது? நீங்கள் போட்ட பட்ஜெட்டில் முதல் வருடம் எப்படி 57.80 சதவிகிதம் ஆயிற்று? நீங்கள் போட்ட— (குறுக்கீடு) 2001-2002-லே நீங்களே 57.80 சதவிகிதமாக மாற்றி விட்டீர்கள். இரண்டாவது உங்கள் ஆட்சி; நீங்கள் போடுகிற பட்ஜெட்டில் 16 சதவிகிதம் ஏறுகிறது. ஒரு வருடம் உங்கள் ஆட்சிதானே நடந்தது? அதிலே எப்படி 16 சதவிகிதம் ஏறுகிறது? முதலில் அது எப்படிக் குறைந்தது? குறையாமலேயே இதே reducing trend வந்தது என்றால் ஓ.கே.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள், அவரது தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் நிதி அமைச்சராக இருந்தபோது எத்தகைய குளறுபடிகளைச் செய்தார்கள் என்பதை மறந்துவிட்டார்கள் என்று எண்ணுகின்றேன். 1,800 கோடி ரூபாய் அரசு ஊழியர்களுக்குத் தர வேண்டிய பணத்தைத் தராமல் தள்ளிப்போட்டீர்கள்; ஒன்று. அதுமட்டுமல்ல, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் தரவேண்டிய பணத்தை முன்பணமாக வாங்கிக் கொண்டீர்கள்; அது இரண்டாவது. அதுமட்டுமல்ல. ஒப்பந்தக்காரர்களுக்குத் தரவேண்டிய பணத்தை எல்லாம் தராமல் கடனாகத் தள்ளிவைத்து விட்டீர்கள், 1000 கோடி ரூபாய்க்கு மேல். இதன் காரணமாகத்தான் இந்த நிலை உருவானது.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவ்வளவு கடனும் எங்கள் ஆட்சியில் இருந்தது. ஆனால் நீங்கள் வந்து போட்ட முதல் பட்ஜெட்டில் 57.80 சதவிகிதமாக ஏன் குறைந்தது? அந்த ஒரு வருடம் கொடுக்கவேயில்லையா? ஒன்றுமே பண்ணவில்லையா? அந்த ஒரு வருடம் குறைந்து...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி தவணைச் சலுகையென வியாபாரிகளுக்கும், தொழில் அதிபர்களுக்கும் நீங்கள் காட்டிய நிலையினை மாற்றி அதிக வரிகளை வசூலித்த காரணத்தால் கிடைத்த கூடுதல் வருமானத்தைக் கொண்டு நாங்கள் இதை ஈடு கட்டினோம்.

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம். (குறுக்கீடு) திரு. பொன்முடி, போதும். (குறுக்கீடு) திரு. பொன்முடி, போதும். இதை விவாதமாக்க வேண்டாம். திரு. சந்தானம், பேசுங்கள். (குறுக்கீடு) மற்றவர்கள் எல்லாம் பேச வேண்டும். நீங்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்கள். முடிந்தது. (குறுக்கீடு) திரு. சந்தானம், பேசுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் கடுமையான வறட்சியிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய நிவாரணத்தைக் கொடுக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு, மத்திய அரசிடம் நாம் எவ்வளவோ எதிர்பார்த்து, மத்திய அரசிடத்திலே நம்முடைய நிலைமைகளை எடுத்துச் சொல்லியிருந்தாலும்கூட, மத்திய அரசு நமக்கு 258 கோடி ரூபாய்தான் வறட்சி நிவாரணமாகக் கொடுத்திருந்தும்கூட, இப்போது தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28-3-2003 அன்று கூட ஏறக்குறைய 350 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கு, பாதிப்புக்கு உள்ளாகியவர்களுக்கு ஒரு நிவாரணத்தை வழங்கியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது அவருடைய தாய்மை உள்ளத்தைக் காட்டுகிறது. இதற்காகத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் என்று வருகின்றபோது, வறட்சி என்பது எல்லோருக்கும் ஒன்றுதான். எனவே, இதிலே சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பார்க்கின்ற நிலையை நாம் ஓரளவுக்குத் தவிர்த்தால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. ஏனென்றால், பெரிய விவசாயிகள்கூட ஒட்டுமொத்தமாக இந்த வறட்சியின் காரணமாக முழுமையாக விவசாயம் செய்ய முடியாத நிலையிலே இருந்திருக்கிறார்கள் என்கின்ற நிலையில் இந்த வட்டிச் சலுகையை அவர்களுக்கும்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீட்டிக் கொடுப்பார்களேயானால் அந்த விவசாயிகளும் இந்த அரசைப் பாராட்டுகின்ற ஒரு நல்ல நிலைமை ஏற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

இலவச மின்சாரம் என்பது விவசாயிகளுக்குப் பல ஆண்டுகளாக வழங்கப்பட்டு வந்திருக்கிற ஒரு சலுகை. விவசாயம் என்பதை இன்றைக்கு



இருக்கிற தொழில்களிலே மிகவும் பாதிப்புக்கு உள்ளாகிற ஒரு தொழிலாகக் கருதுகின்ற நிலைதான் இருந்துகொண்டு இருக்கிறது. இன்றைக்கு நீர்ப்பாசனப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளுக்கு எப்படித் தண்ணீரை இலவசமாக இந்த அரசு கொடுக்கிறதோ அதுபோன்று நீர்ப்பாசனமற்ற பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்கு இந்த இலவச மின்சாரம் என்பது ஒரு பயனுள்ள திட்டமாக இருந்துகொண்டு இருந்தது. ஆனால் நேற்றைக்கு இங்கே விவாதத்தில் கலந்து கொள்ளும்போதுகூட இங்கே பிரதான எதிர்க்கட்சியினுடைய உறுப்பினர், அன்றைக்கு மின் துறை அமைச்சராக இருந்தவர், சொல்கிறபோது, எங்களிடத்திலும்கூட மத்திய அரசும் நிதி நிறுவனங்களும், இந்த மின்சாரத்தை, நீங்கள் விவசாயிகளுக்கு இலவசமாகக்கூட வழங்குங்கள், ஆனால் நீங்கள் மின்சார வாரியத்திற்குக் கடன் பெற வேண்டுமென்று சொன்னால் அந்த இலவச மின்சாரம் எவ்வளவு விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது என்கின்ற ஒரு அறுதியான கணக்கு எங்களுக்குத் தேவை என்று கேட்டுக்கொண்டதற்காக நாங்கள் மீட்டரை பொருத்துகிற ஒரு நிலை. அதாவது 31-12-2003-க்குள்ளாக மீட்டர் பொருத்துகின்ற ஒரு நிலையை நாங்கள் செயல் அளவிலே ஒத்துக்கொண்டிருந்தோம். ஆனால் அதற்கு எந்தவிதமாக ஒப்பந்தமும் போடவில்லை என்று...

## 5. உரிமை மீறல் பிரச்சினை

### திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் 28-03-2003 அன்று அவையில் தெரிவித்த கருத்து

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில், முன்னாள் தி.மு.க. மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இந்த அவையில் இருந்து இருந்தால் நலமாக இருந்து இருக்கும். ஆனால் அவர் சென்று விட்டார். 28 ஆம் தேதி அன்று நடைபெற்ற விவாதத்தின்போது மீட்டர்கள் பொருத்தப்படும் என்று அன்றைய தி.மு.க. அரசு மத்திய அரசிடம் ஒப்புதல் அளித்ததாக, முன்னாள் அமைச்சர் ஒப்புக்கொள்ளவில்லை. மாறாக அவர் என்ன சொன்னார் என்றால்; இப்படி இலவச மின்சாரத்தை நிறுத்தலாமே, மீட்டர்கள் பொருத்தலாமே என்று மத்திய அரசு ஒரு ஆலோசனையைக் கூறியது, ஒரு suggestion சொன்னார்கள்—அவர்களுடைய வார்த்தைகளிலேயே சொல்கிறேன் ஒரு Suggestion சொன்னார்கள் - - அவ்வளவுதான். ஒரு ஒப்பந்தம் போட்டுக்கொள்ளலாமே என்று ஒரு suggestion சொன்னார்கள். ஆனால் நாங்கள் அதனை

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 மார்ச் 31

ஏற்றுக்கொள்ளவில்லை என்று, முன்னாள் தி.மு.க. மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.

அவர் தெரிந்தே, வேண்டுமென்றே, இந்த அவைக்கு உண்மைக்கு மாறான தவறான தகவல்களைத் தெரிவித்திருக்கிறார். அதற்கான ஆதாரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. அன்றைய தி.மு.க. அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே இதுசம்பந்தமாக, இலவச மின்சாரத்தை ரத்து செய்வதற்காக, நடைபெற்ற கடிதப் போக்குவரத்தின் நகல்கள் என்னிடத்தில் இருக்கின்றன. இந்தக் கடிதத்தில்—27-3-2001 தேதியிட்ட கடிதத்தில்—மத்திய அரசின் மின்சாரத் துறையின் Additional Secretary எழுதி இருக்கிறார்; இங்கே தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவராக இருந்த திரு. பூர்ணலிங்கம் அவர்களுக்கு எழுதியிருக்கிறார். அதில் என்ன கூறுகிறார் என்றால்; "This is to inform you that unless the State Government of Tamil Nadu signs M.O.U. before 29th of the month, we will have to perforce divert the amount sanctioned to your State under Accelerated Power Development Programme to some other State. There is no alternative to signing M.O.U. and there is no option left before us. This can be executed by T.N.E.B." என்று எழுதி இருக்கிறார். நான் திரும்பத் திரும்ப இந்த அவையில் என்ன சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன் என்று சொன்னால் இந்த Accelerated Power Development Programme என்ற திட்டத்தின்கீழ், முந்தைய தி.மு.க. அரசு, மத்திய அரசிடமிருந்து முன்பணமாக நிதியைப் பெற்றுவிட்டது. ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுகிறோம் என்று ஒப்புக்கொண்டார்கள். மீட்டர்களைப் பொருத்துகிறோம் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆனால் அதற்குள் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அதனால் அவர்கள் ஒபபுக்கொண்டதை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் தள்ளப்பட்டோம் என்பதைச் சொல்லுகின்றபோது, 28 ஆம் தேதி இந்த அவையில் இருந்த மாண்புமிகு ஆற்காடு விராசாமி அவர்கள் அதை மறுத்தார்கள். அப்படி எந்த ஒப்பந்தமும் இல்லை; மத்திய அரசு நிர்பந்திக்கவும் இல்லை; நாங்கள் ஒப்புக்கொள்ளவும் இல்லை; மத்திய அரசு வெறுமனே ஒரு suggestion-ஐக் கூறினார்கள் என்றார். ஆனால் இந்தக் கடிதத்தில் என்ன கூறியிருக்கிறது? மத்திய அரசு, தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவருக்கு எழுதியிருக்கிற கடிதத்தில், தமிழ்நாடு அரசு இந்த மாதம், அதாவது மார்ச் மாதம் 29 ஆம் தேதிக்குள் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடாவிட்டால் இந்த Accelerated Power Development Programme-ன் கீழ் உங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை வேறு மாநிலத்திற்கு நாங்கள் ஒதுக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்படும். ஆகவே, இந்த M.O.U.—இந்த ஒப்பந்தத்திலே—கையெழுத்துப் போடுவதைத் தவிர



2003 மார்ச் 31] [செல்வி ஜெ ஜெயலலிதா]

உங்களுக்கு வேறு வழியில்லை. There is no alternative to signing M.O.U. and there is no option left before us. வேறு வழியில்லை, வேறு alternative இல்லை, நீங்கள் கையெழுத்துப் போட்டுத்தான் ஆகவேண்டும் என்று மத்திய அரசு தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. இதற்குப் பெயர் suggestion-என்பதா? இது ஒரு friendly suggestion-என்பதா? இதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லையா?

முற்பகல் 11-55

அடுத்தபடியாக, தமிழ்நாடு மின்சார வாரியத்ினுடைய அன்றைய தலைவர் திரு. பூர்ணலிங்கம் அவர்கள் 28-3-2001 அன்று மத்திய அரசுக்கு— Government of India, Ministry of Power-ல் Joint Secretary ஆக இருந்த திரு. அஜய் சங்கர் என்பவருக்கு—ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதில் குறிப்பிடுகிறார்,

"I am enclosing herewith an M.O.U. approved by the Board of the Tamil Nadu Electricity Board which the T.N.E.B. would be willing to execute with the Government of India. If you insist on an M.O.U. from the State Government and the Government of India, it would take a considerable time since the State election is round the corner and everyone is busy with the elections. I shall, therefore, be grateful if you could accept the M.O.U. between the T.N.E.B. and the Government of India and release the funds under A.P.D.P. Scheme".

ஆக, அன்றைய மின்சார வாரியத்தின் தலைவர் அந்தக் கடிதத்தில் என்ன எழுதுகிறார் என்றால், 'இந்தக் கடிதத்துடன் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஓர் ஒப்பந்தத்தை இதோடு நான் இணைத்து அனுப்பியிருக்கிறேன். இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் கையெழுத்துப் போடத் தயாராக இருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ளுமாறு உங்களை வேண்டுகிறேன். மின்சார வாரியத்திற்குப் பதிலாக தமிழக அரசே இதில் கையெழுத்திட வேண்டுமானால் அதற்கு நீண்டகாலம் ஆகும். ஏனென்றால் இப்போது தேர்தல்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. எல்லோரும் தேர்தல் பணியில் busy ஆக இருக்கிறார்கள். ஆகவே தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடத் தயாராக இருக்கிறது. இதை ஏற்றுக்கொண்டு, இந்த நிதியைத் தாங்கள் ரிலீஸ் செய்யவேண்டும்' என்று அன்றைய மின்சார வாரியத் தலைவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

அதன் பின்னர் அன்றைய மின்சாரத் துறையின் செயலாளர் திரு. லால் ராணா சைலோ அதே 28-3-2001 அன்று அதே Ministry of Power, Joint Secretary திரு. அஜய் சங்கருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் என்ன எழுதுகிறார்?

"I am to invite your kind attention to the above D.O. Letter and am to state that since it will take considerable time for the State Government to enter into M.O.U. with Government of India, I am directed to request that the funds under A.P.D.P. Scheme may be released to Tamil Nadu Electricity Board as requested in the above letter."

"மேற்குறிப்பிட்ட கடிதத்திற்கு உங்கள் கவனத்தை ஈர்க்கிறேன். மாநில அரசு, மத்திய அரசோடு ஒப்பந்தத்தில் கையெழுத்து போட வேண்டுமானால் நீண்டகாலம் ஆகிவிடும். ஆகவே இந்த A.P.D.P. Scheme-ன்கீழ் தாங்கள் தமிழக அரசுக்குத் தரவேண்டிய நிதியை உடனடியாக விடுவித்து, தமிழ்நாடு Electricity Board கையெழுத்துப் போடுகின்ற ஒப்பந்தத்தை ஏற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்கிறார்.

அதன் பிறகு, திரு. சசி சேகர் என்பவர் Ministry of Power-ல் Director. அவர் மத்திய அரசில் Ministry of Finance-ல் உள்ள Director, Department of Expenditure என்பவருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதே 28 மார்ச் 2001 அன்று மத்திய அரசில் அந்தக் கடிதம் மின்சாரத் துறையிலிருந்து நிதித் துறைக்குச் செல்கிறது. அதில் என்ன சொல்கிறார். அதில் முக்கியமான பகுதிகளை மட்டும் வாசிக்கிறேன்.

"This is to further inform you that the Minister for Power and Chairman of A.P.D.P. Monitoring Committee, has agreed that funds should also be released to Tamil Nadu and West Bengal States against the sanctioned projects under A.P.D.P. during the current year with the condition that the State Governments will sign M.O.U. after elections are over and the new Government is put in position in both the States. We are separately informing this position to the State Governments of Tamil Nadu and West Bengal."

அதாவது இந்த மைய அரசின் இலாகா இந்த A.P.D.P. திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டுக்கும், மேற்கு வங்கத்திற்கும் நிதியை ஒதுக்க வேண்டுமென்று ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால் ஒரு நிபந்தனையின்பேரில்; என்ன அந்த நிபந்தனை?—தேர்தல்கள் முடிந்தவுடன் அந்த மாநில அரசுகளே இந்த ஒப்பந்தத்தில் Memorandum of Understanding-ல் கையெழுத்துப்



போடவேண்டுமென்ற ஷரத்துடன், நிபந்தனையுடன் இந்த நிதி ஒதுக்கப்படுகிறது. 'இதனைத் தமிழக அரசுக்கும், மேற்குவங்க அரசுக்கும் தனிக் கடிதங்கள் மூலமாகத் தெரிவித்து இருக்கிறோம்' என்று இந்தக் கடிதத்தில் உள்ளது. 'Therefore I request you to kindly release funds immediately to States of Tamil Nadu, West Bengal and Orissa' என்று அந்தக் கடிதம் கூறுகிறது. ஆக, அன்றையதினம் தமிழ்நாடு மின்சார வாரியம் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டு அதை மத்திய அரசுக்கு அனுப்பியது. அதைப் பெற்றுக்கொண்ட மத்திய அரசு இந்த A.P.D.P. திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு முன்பணமாக நிதியை ஒதுக்கியது. ஆனால் அதேநேரத்தில் ஒரு கடிதத்தை எழுதி, 'தேர்தல் முடிந்தவுடன் தமிழ்நாடு அரசே இந்த M.O.U.-ல் கையெழுத்திட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில்தான் இந்த நிதியைத் தமிழ்நாட்டுக்கு ஒதுக்குகிறோம்' என்பது தெளிவாக இந்தக் கடிதத்தில் உள்ளது. ஆகவேதான் நான் குறிப்பிட்டேன்; முந்தைய தி.மு.க. அரசு ஒப்புக்கொண்டு விட்டதால், இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுகிறோம் என்று ஒப்புக்கொண்டு முன்பணமாக நிதியைப் பெற்றுவிட்டதால், நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை என்று குறிப்பிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது உண்மை என்பதை நிரூபிக்க இன்னொரு ஆதாரமும் என்னிடம் இருக்கிறது.

நண்பகல் *12-00*

முந்தைய தி.மு.க. அரசு இருந்தபோது ஏப்ரல் 25, 2001-ல் இந்த நிதியைப் பெற்றுக்கொண்டு, அந்த நிதியை disburse செய்வதற்காக,-issue செய்வதற்காக--ஓர் அரசாணையை--முந்தைய தி.மு.க. அரசு--வெளியிட்டிருக்கிறது. G.O. issue செய்திருக்கிறார்கள். அந்த G.O. Energy Department வெளியிட்ட G.O., மின்சாரத் துறை வெளியிட்ட G.O. தேதி 25-4-2001. அந்த G.O.-ல் என்ன கூறப்பட்டிருக்கிறது?

"The Government of India have sanctioned certain projects under Accelerated Power Development Programme. For availing financial assistance under the Scheme, the State Government has to enter into Memorandum of Understanding with Government of India. As it would take considerable time for the State Government to enter into Momorandum of Understanding the Government of India was requested to release funds under Accelerated Power Development Programme"

என்று சொல்லி அதற்குப் பிறகு இந்த நிதி விவரங்களெல்லாம் இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நிதியை உடனே release செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த அரசாணை என்ன கூறுகிறது? மத்திய அரசு Accelerated Power Development Programme-ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது. ஆனால் இந்தத் திட்டத்தின்கீழ் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறுவதற்காக மாநில அரசு, மத்திய அரசோடு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமென்று முந்தைய தி.மு.க. அரசு 2001 ஏப்ரல் 25 ஆம் தேதியன்று வெளியிட்ட அரசாணையிலேயே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே நான் சொன்னதெல்லாம் உண்மை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு இதற்கு ஒப்புக்கொள்ளவேயில்லை என்று 28 ஆம் தேதி முன்னாள் தி.மு.க. மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் தெரிந்தே இந்த அவைக்கு உண்மைக்கு மாறான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்மீது, ஓர் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப வேண்டுமென்று அவைத் தலைவரை நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குச் சம்பந்தம் இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரிந்தே தவறான தகவல்களைக் கொடுத்திருக்கிற திரு. ஆற்காடு வீராசாமி மீது அவை முன்னவர் இதில் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் க. பொன்முடி :** பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் சொன்ன விளக்கத்தின்பேரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். விளக்கம் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறான தகவலை அவைக்கு முன்னாள் அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள் தந்திருக்கிறார்கள் என்ற ஆதாரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுக்குத் தற்போது தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இதை அவையினுடைய உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்குரிய தக்க ஆதாரங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற காரணத்தால், இதைப் பேரவை விதி 226-ன் கீழ் விசாரித்து, ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு நான் அனுப்பி வைக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, யார் மீது ஒழுங்குப் பிரச்சினை என்பது முக்கியமல்ல. அவை உறுப்பினர் மீது ஓர் ஒழுங்குப் பிரச்சினை வருகிறது. பேரவை விதிகள் தெளிவாகச் சொல்கின்றன. அவை உறுப்பினரின் மீது உரிமை மீறல் பிரச்சினை கொண்டுவரப்படுகிறது என்று சொன்னால், அவை உறுப்பினருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். நோட்டீஸ் கொடுத்து, அவரிடத்திலே பதில் வாங்கிய பிறகுதான் முறைப்படி அதனை கொண்டுவர வேண்டும்.

பிற்பகல் 12-05

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஷயத்தை இங்கே தெளிவுபடுத்திவிட்டேன். உண்மைகளைத் தெளிவுபடுத்திவிட்டேன். சட்ட விதிகளின்படியே நடவடிக்கை எடுக்கப்படும்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் படித்ததிலேகூட Electricity Board எழுதியிருக்கிறது; அங்கிருந்து Central Government இவர்களை compel பண்ணியிருக்கிறார்கள். ஆனால் Government-லேயிருந்து Sign வாங்கவேண்டுமென்றால் எலெக்ஷனிலே இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Secretary to Government, Energy Department, has written. அரசுச் செயலாளர், அரசு மின் துறைச் செயலாளர் அவர்களே எழுதியிருக்கிறார்கள். There is a G.O. read over by our Honourable Chief Minister; it is written by the Government.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் படித்ததை மறுக்கவில்லை. ஆனால் மாநில அரசு அந்த M.O.U.-விலே sign பண்ணியதா என்றால் இல்லை என்பதைத்தான் அவர் சொன்னார். அவ்வளவுதான்.

[2003 மார்ச் 31

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, No G.O. can be issued by the Secretary unless it is approved by the Concerned Minister. எனவே, இது அரசினுடைய ஒப்புதல், அமைச்சர் அவர்களுடைய ஆர்டர் இதில் வரவில்லை; வராமல் இல்லை.

**திரு. துரைமுருகன்:** அப்படியென்றால், Concerned Minister அதற்கு ஒப்புதல் அளித்தார் என்பதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை ஆதாரம் காட்டச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, It is a G.O. of the Government. (குறுக்கீடு) It is a G.O. of the Government. (குறுக்கீடு) இல்லை. It is a G.O. of the Government. (குறுக்கீடு) G.O. No. 34 issued on 25th April 2001 by the Secretary for Energy to Government of Tamil Nadu.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே எந்த இடத்திலேயும்...(குறுக்கீடு) அதிலே எந்த இடத்திலேயும் M.O.U.-ஐ ஏற்றுக்கொண்டோம் என்று இல்லை. முதலிலே Memorandum of Understanding-லே Restructuring of E.B. Department அதிலே வந்து வேலை குறைப்பிலேயிருந்து எல்லாம் சொல்லியிருக்கிறதே தவிர, இலவச மின்சாரத்தை particular-ஆக எடுக்க வேண்டும் என்று கிடையாது. முதலிலே M.O.U. என்று சொன்னீர்களே தவிர, what is the M.O.U.? M.O.U.-லே என்ன இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—விவசாயத்திற்கு மீட்டர் பொருத்துவதற்குக்கூட—உங்கள் அரசு ஒத்துக்கொண்டது. அதைத்தான் அது எடுத்துக்காட்டுகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இப்போது ஒப்பந்தம் மீது பிரச்சினை இல்லை. (குறுக்கீடு) திரு. துரைமுருகன், உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மீண்டும், மீண்டும் அரசு ஒத்துக்கொள்ளவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, போர்டு எழுதியிருக்கிறார்களே தவிர,



2003 மார்ச் 31] [திரு. துரைமுருகன்]

போர்டு வந்து எப்படி ... (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள் Regulatory Board இப்போது வந்து —கமிஷன்-- அறிக்கை கொடுத்தவுடனே அது வரி போடுவதும் வரி போடாததும், Electricity Board, அது எங்களுக்குக் கவலையில்லை என்றார்கள். அப்போதுகூட நாங்கள் கேட்டோம். அது எப்படி வரும்--அமைச்சர் அவர்கள்-- என்றார்கள். போர்டு (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம், போர்டு மட்டும் கடிதம் எழுதவில்லை. அன்றைக்கு மின்சாரத் துறைச் செயலாளராக இருந்த திரு. சைலோ அவர்களும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தையும் நான் வாசித்துக் காண்பித்தேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது வந்து அன்றைக்கு முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்கள் தெரிவித்த கருத்துகள் உண்மைக்கு மாறுபட்டவை என்கின்ற வகையில்தான் முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய ஆதாரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆதாரங்கள் என்பது அரசுக் கோப்புகளிலே இருந்து சொல்லப்படக்கூடிய ஆதாரங்கள். ஆகவே அந்த ஆதாரங்களை ஏற்றுக் கொண்டு நான் உரிமை குழுவிற்கு அனுப்புகிறேன். உரிமை மீறல் குழுவிலே அவர் அதற்கு விளக்கம் சொல்வதற்குப் போதுமான வாய்ப்பு இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமை மீறல் பிரச்சினையை முறைப்படி, விதிகளின்படி எடுத்துக்கொள்ளலாம் என்று முதல்வர் அவர்களே கூறிவிட்டார்கள்; அவை முன்னவர் அவர்களும் கூறிவிட்டார்கள். அப்படி இருக்கும்போது நீங்கள் உரிமை மீறல் குழுவிற்கு அனுப்புகிறேன் என்று.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, விதிப்படிதான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். பேரவைத் தலைவருக்கு அந்த உரிமை உண்டு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விதிப்படி அப்படி எடுக்கமுடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனினும்.. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** உறுப்பினருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனினும் பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் எழுகிற உரிமைப் பிரச்சினைகளை பொறுத்தமட்டில் பேரவைத் தலைவர் அத்தகைய முன்னறிவிப்பு ஏதும் இல்லாமலே அவர் பொருத்தமெனக் கருதும் வகையில் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) எடுத்திருக்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடக்கும்போது, இங்கே நடந்துகொண்டிருக்கும்போது ஒரு உரிமை மீறல் நடந்தது என்று சொன்னால், தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். இது நடக்கும்போது நடந்தது அல்ல. நேற்றைய முன்தினமோ அதற்கு முன்தினமோ அவர் பேசியிருக்கிறார். அவர் பேசியது அவை உரிமை மீறல் என்று சொல்கிறீர்கள். உரிமை மீறல் என்று சொன்னால் தாராளமாக எடுத்துக்கொள்ளலாம். நான் தடையாக நிற்கவில்லை. ஆனால் அன்றைக்கு இல்லை. அவை விதிகளின்படி அதற்கு நோட்டீஸ் கொடுத்து அவரிடமிருந்து பதில் பெற்றதற்குப் பிறகுதான் அதை எடுத்துக்கொள்ள முடியுமே தவிர, நடக்கும்போது நடந்தது அல்ல. நடக்கும்போது என்றால் இப்போது நடக்க வேண்டும்; அதுதான் நடக்கும்போது. முந்தாநாள் நடந்தது, நடக்கும்போது அல்ல. அன்றைக்கே எடுத்திருக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. சந்தானம், பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடு) இதை உரிமை மீறல் குழுவிற்கு அனுப்பி இருக்கிறேன். (குறுக்கீடு) விளக்கம் உரிமை மீறல் குழுவிலே சொல்லலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது இப்போது இந்த அவையில் நடக்கின்ற ஒரு பிரச்சினைதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் பேசிக்கொண்டிருக்கிறார். அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார். 28 ஆம் தேதி அன்றைய முன்னாள் அமைச்சர் பேசினாரே அதைப்பற்றி என்ன விளக்கம் என்று கேட்டார். அதற்கான விளக்கத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.



பிற்பகல் 12-10

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒன்றே ஒன்று, விளக்கம் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் விதி 226-ல் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

"Notwithstanding anything contained in these rules, the Speaker may, *suo moto* refer any question of privilege to the Committee of Privileges for examination, investigation and report." என்று தெளிவாக சபாநாயகருக்கு இருக்கிற அதிகாரம் இதில் கூறப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருக்கு இருக்கிற அதிகாரத்தைப் பற்றியோ, நடைமுறைகளைப் பற்றியோ நான் குறை சொல்லவில்லை, குறுக்கிடவில்லை. நான் கேட்பதெல்லாம் இந்தப் பிரச்சினை இப்போது எழுந்து அவர் பெயர் சொல்லி அது தவறான தகவல் என்று, இப்போது நடந்திருந்தால் நீங்கள் அனுப்பலாம் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இப்போதுதான். திரு. சந்தானம்.

**திரு. துரைமுருகன்:** இரண்டாவது இன்னொன்று; ஒரு கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஒரு கருத்தைத் தெரிவித்து விட்டு மறுநாள் Statement படிக்கிறார்கள். நேற்று சொன்னதிலே இந்தத் திருத்தம் என்று படிக்கிறார்கள். ஆகையினாலேதான் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் சொன்னதுபோல அந்த உறுப்பினருக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்து அதைக் கேட்டதற்குப் பிறகு நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்பதுதான் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு எங்களுடைய கோரிக்கையே தவிர நீங்கள் உரிமைக் குழுவுக்கு அனுப்புவதாலேயே தூக்குத் தண்டனை....

[2003 மார்ச் 31

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், அவ்வளவுதான், அதேதான்.

**திரு. துரைமுருகன்:** அதனால் என்ன என்று சொன்னால் எங்களுக்கு ஒரு வாய்ப்பை, உரிமையை, இந்த மன்றத்தினுடைய, உறுப்பினருடைய உரிமையைப் பாதுகாப்பது தாங்கள்தானே, நீங்களே இப்படிப் பண்ணினால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இதை 'உரிமை மீறல் குழுவிலே' வந்து நீங்கள் சொல்லலாம். திரு. சந்தானம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில் மிகவும் தெளிவாக இருக்கிறது. "Provided further that in respect of a matter of privilege arising during the sitting of the House, the Speaker may waive such notice and deal with the matter as he deems fit." During the sitting of the House suppose he has done something, then you could have taken it immediately.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி நம்பர் 226-ல் "Notwithstanding anything contained in these rules" என்று சொல்கின்றபோதே இவை எல்லாம் அடிபட்டுப் போய்விடுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த உறுப்பினர் மீது உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வரப்படுகிறதோ அவர் அவையில் இருந்தாக வேண்டும். அவர் இல்லாத நேரத்தில் கொண்டு வருவது என்பது முறையற்றது. ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி ஒன்றும் விதிமுறை கிடையாது.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, அவர் இருந்து விளக்கம்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி என்று விதிமுறையில் கிடையாது. திரு. சந்தானம், பேசுங்கள்.



2003 மார்ச் 31]

## 4. வரவு-செலவுத் திட்டம், 2003-2004, பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைக் குறிப்பிட்டதற்குக் காரணம் அன்றைக்குக்கூட மத்திய அரசும் நிதி நிறுவனங்களும் இலவச மின்சாரத்தை இரத்து செய்ய வேண்டும் என்கிற நோக்கத்திற்காக அந்த மீட்டர்கள் பொருத்தப்பட வேண்டும் என்று கூறவில்லை. ஆனால் விவசாயிகள் பயன்படுத்துகிற மின்சாரத்தின் அளவைக் கணக்கிட வேண்டுமென்பதற்காகத்தான் மீட்டர்கள் பொருத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது என்கிற காரணத்தினால் நான் இந்த இலவச மின்சாரம் மீண்டும் தொடர வேண்டும் என்பதற்காகத்தான் அவர் இங்கே சொன்ன வாசகங்களைக் குறிப்பிட்டு நான் எடுத்துச் சொன்னேன்.

இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் 3 குதிரை சக்தி வேகம் கொண்ட மோட்டார்களுக்கும், 5 குதிரை சக்தி வேகம் கொண்ட மோட்டார்களுக்கும் உரிய நிவாரணத்தை அரசே வழங்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்று சொன்னால் 3 குதிரை சக்தி கொண்ட மோட்டாரும், 5 குதிரை சக்தி கொண்ட மோட்டாரும் வைத்து இருக்கிற அத்தனைபேருக்கும் இது பொருந்துமா அல்லது அந்த 3 குதிரை, 5 குதிரை என்று சக்தி உள்ளதிலே பெரிய விவசாயி, சிறிய விவசாயி, குறு விவசாயி என்கிற பாகுபாடுகள் வருமா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 H.P. வைத்திருக்கிற 5 ஏக்கர் புன்செய் நிலத்திற்கும், 5 H.P. வைத்திருந்தால் 5 ஏக்கர் புன்செய் நிலத்திற்கும், 2½ ஏக்கர் நன்செய் நிலத்திற்கும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பெரிய விவசாயிகள் என்று குறிப்பிடப்படுகிறவர்கள் நமது இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள்; ஏன், அமைச்சர் இருக்கிற நெல்லை மாவட்டங்கள் போன்ற இடங்களிலே கூட 50 ஏக்கர், 100 ஏக்கர் என்று வைத்திருக்கிறார்கள். அங்கு இருக்கிறவர்கள் எல்லாம் சீமைக் கருவேலம் தவிர வேறு எதுவும் விவசாயம் செய்ய முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. அவர்களைக்கூட நாம் கணக்குப் பிரகாரம் 50 ஏக்கர் வைத்திருக்கிறார்களே என்று கணக்கில் கொண்டோமேயானால் நிச்சயமாக அவர்களுக்கு எல்லாம் ஒட்டுமொத்த வருமானமே ஓர் ஆண்டிற்கு 10 ஆயிரம்கூட

இல்லை என்கிற நிலைமைதான் இருக்கிறது. எனவே, இந்த இலவச மின்சாரத் திட்டம் என்பதில் அவர்கள் இப்படிப்பட்ட புஞ்சை நிலங்களை வைத்திருந்தாலும்கூட அவர்களுக்குச் சலுகை காட்டலாமா என்பதையும் அரசு சிந்திக்க வேண்டுமென்று சொல்லி அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் நான்கு பேர் பேச வேண்டும்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, இங்கு அரசினுடைய நிதி நிலையைச் சீர் செய்ய வேண்டும் என்பதற்காகச் சில வரிகளை இந்த அரசு விதித்திருக்கிறது. அந்த வரிகளிலே சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அந்த வரிகளின் மூலமாகப் பலர் பாதிக்கப்படுகிறார்கள் என்கிற கோரிக்கை இந்த மன்றத்திலே வைக்கப்பட்டது.

இன்றைக்குக்கூட வியாபாரிகளெல்லாம் அந்த வரிக்காகக் கடையடைப்புச் செய்து தங்களுடைய போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அவையில்கூடக் குறிப்பிட்டார்கள். ஆனால், இங்கு முதலமைச்சர் அவர்கள் 25 ஆம் தேதி குறிப்பிடுகின்ற நேரத்தில் இந்த வரி என்பது அரசாங்கத்தை நடத்துவதற்குத் தவிர்க்க முடியாத ஒன்றாகிறது. எனவேதான், இதற்கு முந்தைய அரசுகள்கூட இப்படிப்பட்ட வரிகளையெல்லாம் விதித்திருக்கின்றன, அதுபோல நாங்களும் விதித்திருக்கிறோம் என்று குறிப்பிட்டுச் சொல்லி, 1989-90 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கும்போது அவர்கள் விதித்த வரியினுடைய Total Revenue Receipts என்பது 6.77 சதவீதம் என்று இங்கே குறிப்பிட்டார்கள். அதுபோல, 1990-91 ஆம் ஆண்டில் 5.50 சதவீதம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் அவர்களும் நாங்கள் அப்படியெல்லாம் ஏழை எளிய மக்கள் பாதிக்கின்ற அளவிலே வரிகளைச் சுமத்தவில்லை, அவர்கள் சொல்வது உண்மைக்குப் புறம்பானது, உண்மையிலேயே நாங்கள் 1989-ல் 1.30 சதவீதம் அளவிற்கும், 1990-ல் 1.41 சதவீதம் அளவிற்கும்தான் வரிகளை விதித்து வந்தோம் என்று கூறியிருக்கிறார்கள். எனவே, இந்த அரசும் அதுபோல, ஏழை எளிய மக்களிடத்திலே நம்பிக்கை வைத்திருக்கின்ற அரசாக இருக்கின்ற காரணத்தினால் உங்களால் முடிந்த அளவிற்கு அவர்களுக்கு உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நீங்கள் விதித்திருக்கின்ற வரிகளுடைய அளவு, அன்றைக்குக்கூட முதலமைச்சர் அவர்கள் ஏதோ ஒரு சதவீதத்தை இங்கே சொன்னார்கள். அப்படியிருக்குமேயானால், அதையும் நீங்கள் மறுபரிசீலனை செய்வதற்கு—



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்த அவையில் 25-3-2003 அன்று, கடந்த தி.மு.க. ஆட்சியில் செய்துள்ள Additional Resources Mobilisation என்ற தலைப்பில் சில விவரங்களை வழங்கினேன். நான் Additional Resources Mobilisation என்றுதான் ஆங்கிலத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

Additional Resources Mobilisation என்பதற்குத் தமிழில் வரி விதிப்பு மற்றும் இதர முறைகளின் வாயிலாக நிதியாதாரங்களைத் திரட்டுவது என்பதுதான் பொருள். எனவே, இது வரி விதிப்பை மட்டும் குறிப்பிடாது. அத்துடன் எடுக்கப்படும் புதிய வருவாய் திரட்டும் முயற்சிகளையும் சேர்த்துத்தான் பொருள் கொள்ள வேண்டும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் செய்துள்ள Additional Resources Mobilisation விவரங்கள் எல்லாம் நிதித் துறையில் இருக்கின்றன. அதன்படிதான் நான் புள்ளிவிவரங்களை இந்த மாமன்றத்தின் முன்வைத்தேன். அதன்படி 1989-90ஆம் ஆண்டில் Additional Resources Mobilisation என்ற தலைப்பில் புதிய வரிகள் மற்றும் இதர நிதி திரட்டும் நடவடிக்கைகளினால் ரூபாய் 260.30 கோடி திரட்டப்பட்டுள்ளது என்று கூறியிருந்தேன். அந்த ஆண்டு வருவாய்க் கணக்கில் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த வருவாயான ரூபாய் 3845.74 கோடியில் ரூபாய் 260.30 கோடி 6.77 சதவீதமாக இருந்தது என்று கூறினேன். 1989-90 ஆம் ஆண்டுக்கான மொத்த பற்றாக்குறை ரூ.325.07 கோடியாக இருக்குமென்றும் அது ரூ.64.77 கோடியாகக் குறைக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனால்தான் இந்த இரண்டு தொகைகளிலும் உள்ள வித்தியாசமான ரூ.260.30 கோடி Additional Resources Mobilisation என்ற முறையில் சேகரிக்கப்பட உள்ளது என்று பொருள்கொள்ள வேண்டும். மேலும், 1990-91 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 1989-90 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகளில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள வரி விதிப்பு மற்றும் இதர நிதி திரட்டும் முயற்சிகளினால் மொத்தப் பற்றாக்குறை ரூ.325.07 கோடியிலிருந்து ரூ.160.74 கோடியாகக் குறைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனைப் பார்த்தோம் என்றால் Additional Resources Mobilisation என்ற தலைப்பின்கீழ் 1989-90 ஆம் ஆண்டு ரூ.164.33 கோடி திரட்டப்பட்டுள்ளது என்று பொருள் கொள்ள வேண்டும். எனவே, ஒரு

வகையில் பார்த்தால், அவ்வாண்டு திட்டமிடப்பட்ட Additional Resources Mobilisation என்ற தலைப்பின்கீழ் ரூ.260.3 கோடி திரட்டப்படும் என்பது திருத்திய மதிப்பீடுகளில் இது ரூ.164.33 கோடியாக இருக்கின்றது. ரூ.260.3 கோடி என்ற கணக்கீட்டின் அடிப்படையில் இது 6.77 சதவிகிதமாக இருக்கின்றது. அதேநேரத்தில் ரூ.164.33 கோடி என்று எடுத்துக் கொண்டோமென்றால் இது 4.27 சதவிகிதமாக இருக்கின்றது. வேண்டுமென்றால் இந்தக் குறைந்த சதவிகிதமான 4.27 சதவிகிதத்தை எடுத்துக் கொண்டால்கூட நான் ஏற்கெனவே எடுத்துக் கூறியுள்ள வாதத்திற்கு எந்தவித மாற்றமும் தேவையில்லை என்பதை நான் இங்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

*பிற்பகல் 12-20*

1990-91 ஆம் ஆண்டைப் பொறுத்தவரை அவ்வாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் குறிப்பாக Additional Resources Mobilisation ரூ. 242 கோடி அளவில் திரட்டப்பட உள்ளது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த ரூ.242 கோடி புள்ளி விவரத்திற்கு மாற்றம் ஏதும் தேவையில்லை. ரூ.242 கோடியில் வெறும் ரூ.62 கோடி மட்டும்தான் புதிய வரி விதிப்பு என்று முன்னாள் முதல்வர் அவர்கள் வாதாடி மீதமுள்ள இதர வருவாய் முயற்சியான ரூ.180 கோடியை நீக்க வேண்டுமென்று கூறியுள்ளார்கள். ஆனால், 1990-91ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பத்தி 100-ல் மொத்தப் பற்றாக்குறை ரூ.510.10 கோடி அளவிற்கு இருக்குமென்றும் இது புதிய வரி விதிப்பு மற்றும் இதர நிதி திரட்டும் முயற்சிகளினால் ரூ.268.10 கோடியாகக் குறைக்கப்படும் என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, 1990-91ஆம் ஆண்டிற்கான Additional Resouces Mobilisation இதர புதிய நிதி திரட்டும் முயற்சிகள் ரூ.242 கோடியாகக் கருதப்பட வேண்டும். நிதித் துறையின் கணக்கின்படி இவ்வாறுதான் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையான ரூ.242 கோடியைக் கணக்கில் எடுத்துக் கொண்டோம் என்றால் 1990-91 ஆம் ஆண்டு உள்ள மொத்த வருவாயான ரூ.4397.46 கோடியில் இது 5.5 சதவிகிதம் ஆகும். முன்னாள் முதல்வர் அவர்கள் இதனை எந்தவிதத்தில் தட்டிக் கழித்தாலும் இதுதான் உண்மையான நிலை. ஆகவே, 1990-91ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியின்போது மொத்தம் வருவாய் மதிப்பீட்டில் 5.5 சதவிகித அளவிற்கு வரி விதிப்பு மற்றும் இதர நிதி திரட்டும் முயற்சிகளின் வாயிலாக வருவாயை ஈட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தெள்ளத் தெளிவாகின்றது.



1996-97ஆம் ஆண்டில் இருந்து நிருவாகம் செய்த தி.மு.க. அரசு வரிச் சலுகைகளை அளித்துள்ளது என்றும் அதற்குப் பின்பு கூடுதலாக வரி விதிக்கப்படவில்லை என்றும் கூறியிருக்கின்றார்கள். அப்போது ஆட்சியில் இருந்த தி.மு.க அரசு தேவையற்ற வரிச் சலுகைகளை அளித்து ஊதியங்களை உயர்த்தி மாநில அரசின் நிதிநிலையைச் சீர்கேடாக்கியது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. எனவேதான், நாங்கள் பொறுப்பேற்றவுடன் மாபெரும் நிதிநெருக்கடியைச் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அதேபோல் 1998-99ஆம் ஆண்டைக் கணக்கிட்டுப் பார்த்தோம் என்றால் அவ்வாண்டு ரூ.340 கோடி கூடுதல் வரிகளாகவே விதிக்கப்பட்டுள்ளன. இதனை வருவாய்க் கணக்கில் உள்ள மொத்த வருவாயுடன் கணக்கிட்டுப் பார்த்தோம் என்றால் இது 2.26 சதவிகிதமாக இருக்கின்றது. ஆகையால் 1996-97ஆம் ஆண்டுக்குப் பிறகும்கூட தி.மு.க. ஆட்சியில் வரி விதிப்பே இல்லையென்ற வாதம் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது. எனவே, 1989-90ஆம் ஆண்டில் குறைவான மதிப்பீட்டைக் கணக்கிட்டுப் பார்த்தோம் என்றால்கூட மொத்த வருவாயில் வரிவிதிப்பு மற்றும் இதர வாயிலாக எழுப்பப்பட்டுள்ள நிதியாதாரங்களின் விகிதாசாரம் 4.27 சதவிகிதமாக இருந்தது. 1990-91ஆம் ஆண்டில் இது 5.5 சதவிகிதமாகவும் 1998-99ஆம் ஆண்டில் இது 2.26 சதவிகிதமாகவும் இருந்தது.

எங்கள் அரசு வெளியிட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் மொத்த வரிவிதிப்பு ரூபாய் 430 கோடி ஆகும். மொத்த வருவாயுடன் கணக்கிட்டுப் பார்த்தோம் என்றால் இது வெறும் 1.9 சதவீதமாக இருக்கிறது. வரிவிதிப்பு மற்றும் கூடுதல் வருவாய் ஆதாரங்களைத் திரட்டுவது, இவையெல்லாம் ஒரு திறமையான அரசின் பொறுப்பாகும். மாநில அரசின் நிதி நிலையை நல்லமுறையில் எடுத்துச் செல்ல வேண்டும் என்றால் தக்க தருணத்தில் பொதுமக்களை, குறிப்பாக ஏழை எளிய மக்களைப் பாதிக்காத வண்ணம் வரி விதிப்புச் செய்ய வேண்டும். இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இதனை அரசியல் ஆக்குவது தேவையற்றது என்று நான் கருதுகிறேன். அரசின் நிதி நிலையைச் சரியாக எடுத்துச் செல்ல வேண்டும் என்றால், தேவைப்படும் நடவடிக்கைகளை எடுப்பது அரசின் இன்றியமையாத கடமையாகும். இதன் அடிப்படையில்தான் இந்த அரசு பொதுமக்களை, குறிப்பாக ஏழை எளிய மக்களைப் பாதிக்காத வண்ணம் புதிய வரி விதிப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே விளக்கிக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பொன்முடி விளக்கம் வேண்டியதில்லை. நாளைக்கு உங்களுடைய கட்சிக்காரர்கள் பேசும்போது சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னதற்குப் பதில் சொல்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு விவாதம் பண்ணக்கூடிய நேரம் இல்லை. திரு. சந்தானம் பேசுங்கள் (குறுக்கீடு) நாளைக்கு இதில் ஏதாவது பேசும்போது விளக்கம் சொல்லுங்கள். திரு. சந்தானம், பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது** "

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எல்லாம் நீண்ட விவாதத்திற்கு உரியது. நீங்கள் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. முறைகேடாகப் பேசக் கூடாது.(குறுக்கீடுகள்) திரு. பொன்முடி, நீங்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. சந்தானம், பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக நேற்றுக் கூறியதும், Additional Resources Mobilisation தான். முன்னர் கூறியதும் Additional Resources Mobilisation தான். தற்போது கூறியிருப்பதும் Additional Resources Mobilisation தான். இதில் மாறுபாடு இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு உங்களுடைய கட்சியின் சார்பாகப் பேசும்போது இதற்கு விளக்கம் சொல்லுங்கள். இதை இப்போது விவாதப் பொருளாக ஆக்க வேண்டாம்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அந்த ஆண்டு போடுகிற புதிய வரியினுடைய விகிதாச்சாரத்தைத்தான் கணக்கில் எடுத்துக் கொள்வார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1989-90, 1990-91-ல் புதியதாகப் போட்ட வரிகள் எவ்வளவு? எத்தனை Percentage? இப்போது இந்த ஆண்டு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் போட்டிருக்கிற வரி, புதிய வரிகள் எவ்வளவு? இதனுடைய Percentage எவ்வளவு? அதைத்தான் கணக்கு எடுத்துக்கொள்வார்கள். (குறுக்கீடு) அதுதான் எடுப்பார்கள். Additional Resources Mobilisation என்று சொன்னால், அதற்கு அப்புறம் அது தேவையே இல்லை. ஆனால், புதிய வரிகள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 1989-90, 1990-91-ல் எவ்வளவு போடப்பட்டது? எத்தனை percentage? இப்போது பார்த்தால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினைவிட, Percentage வகையில் நீங்கள் போட்டது அதிகம். அதனாலே அது பெரிய குற்றம்கூட அல்ல. நீங்கள் சொன்னதைப்போல், வரி போடுவது என்பது மக்களுக்குச் சேவை செய்ய...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் தெளிவுபடுத்துகிறேன். இப்போது புதிதாகச் செய்திருக்கிற Additional Resources Mobilisation 430 கோடி ரூபாய் அளவிற்குத்தான். அது மொத்த வரி விதிப்பில் 1.9 சதவீதம்தான்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. சந்தானம், பேசி முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை, நான் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், திரு. ஹேமச்சந்திரன் பேசும்போது பேசச் சொல்லுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்கு வேண்டிய முக்கியமான சில கோரிக்கைகளை வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே என்னுடைய தொகுதியிலே 58 கிராமக் கால்வாய் திட்டம் என்பது நடந்துகொண்டிருக்கிறது. அது இப்போது சற்றுத் தொய்வாக நடந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், உங்களுடைய கோரிக்கைகளை என்னிடத்திலே எழுதிக் கொடுங்கள். நானும் சேர்ந்து பரிந்துரையைச் செய்து முதலமைச்சரிடத்திலே கொடுத்து, எல்லாவற்றையும் நடவடிக்கைக்குக் கொண்டு வருவோம். இன்னும் ஒரு மணித்துளியிலே பேச்சை முடித்துவிடுங்கள். இன்னும் ஒரு மணி நேரம் தான் இருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** எனவே, அந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும்.

அதோடு இன்றைக்கு இருக்கின்ற ஒரு மிக முக்கியமான பிரச்சினையை இந்த அவையில் குறிப்பிடுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். 'பொடா' சட்டம் என்பதை நாங்கள் எல்லாம் எதிர்க்கின்றவர்கள். இடதுசாரி அணியைச் சேர்ந்தவர்கள், 'பொடா' சட்டத்தை ஆரம்ப காலத்திலேயிருந்தே எதிர்த்து வந்திருக்கிறோம். அது நாடாளுமன்றத்திலே வருகின்றபோதுகூட எதிர்த்து வாக்கு அளித்து இருக்கிறோம். அந்தச் சட்டத்தின்கீழ் இன்றைக்குத் தமிழகத்திலே வை.கோ., நெடுமாறன் போன்றவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். நீண்ட நாட்களாக அவர்கள் வெளியிலே வாமுடியவில்லை என்கின்ற நிலை இருந்துகொண்டு இருக்கிறது. அதற்காகக் கடந்த இரண்டொரு நாட்களுக்கு முன்னால்கூட எல்லாக் கட்சியினரும் கூட்டாகச் சேர்ந்து ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி இருக்கிறார்கள். அவர்களை நீண்ட நாள் வெளியிலே விடாமல் வைத்திருப்பதற்குரிய காரணம் என்ன என்று எங்களுக்கும்.-(குறுக்கீடு)

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையின் தன்மையைப் புரிந்துகொள்ளாமல் எதிர்க் கட்சிகள் எல்லாம் போராட்டம் நடத்தி இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதே பாணியில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.



இப்போது இந்தப் பிரச்சினை, இந்த வழக்கு, நீதிமன்றத்தின் முன்பு இருக்கிறது. நீதிமன்றம்தான் இனிமேல் முடிவு எடுக்க வேண்டும். மாநில அரசு அவர்களை விடுதலை செய்ய முடியாது. பயங்கரவாத நடவடிக்கைகளைத் தக்க நடவடிக்கைகள் மூலம் தடுத்திட வழிவகுக்கும் வகையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், 2002, அதாவது, POTA 2002 என்ற மத்திய சட்டம், இந்திய நாடாளுமன்றத்தால் இயற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின் இணைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் —LTTE, இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் SIMI, மக்கள் யுத்தக் குழு PWG, தமிழ்நாடு விடுதலைப்படை TNLLA மற்றும் தமிழ்நாடு மீட்புப்படை TNRT ஆகியவை உள்ளிட்ட 32 பயங்கரவாத அமைப்புகளின் பட்டியல் இடம் பெற்றுள்ளது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், 2002 இன் கீழான குற்ற வழக்குகளை விசாரிக்க, சென்னை பூந்தமல்லியில் ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், 2002இன் சட்டப் பிரிவு 60 இன்படி சீராய்வுக் குழு Review Committee ஒன்று ஓய்வு பெற்ற நீதிபதி திரு. கே.எஸ். பக்தவச்சலம் அவர்களைத் தலைவராகவும், ஓய்வுபெற்ற I.A.S. அதிகாரி திரு. ஆர். சண்முகம் அவர்களை உறுப்பினராகவும் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரையில் தமிழ்நாட்டில் இச்சட்டத்தின்கீழ் 8 வழக்குகள் பதியப்பட்டு, 42 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 41 குற்றம் சாட்டப்பட்டவர்கள் சிறப்பு நீதிமன்ற உத்தரவின்படி நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் கடந்த 18-3-2003ஆம் தேதி சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த 8 வழக்குகளில், 4 வழக்குகளுக்கு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணையில் உள்ளது. தமிழீழத்தை ஆதரித்தும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் அதன் தலைவர் பிரபாகரனை ஆதரித்தும், திரு. வை.கோ. மற்றும் 8 நபர்கள், திரு. பழ. நெடுமாறன் மற்றும் 4 நபர்கள், திரு. பாவாணன் மற்றும் திரு. பரந்தாமன் ஆகியோர் பேசிய பேச்சுகள் பயங்கரவாத தடுப்புச் சட்டப் பிரிவு 21(1), 21(2) மற்றும் 21(3)-ன்கீழ் வருவனவாகும். மீதமுள்ள 4 வழக்குகள், மக்கள் யுத்தக் குழுவினைச் சேர்ந்த 44 நக்ஸலைட்டுகள் சம்பந்தப்பட்டவையாகும். அவர்கள், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் அடங்கியுள்ள சட்டப்பிரிவுகள் 3(3), 3(4), 3(5), 4(பி) மற்றும் 20(1) இன்கீழ் வரும், குற்றமான, நாட்டுத் துப்பாக்கிகள், ஜெலடின் குச்சிகள், மின் Detonators முதலியவற்றை வைத்திருந்தது கண்டறியப்பட்டது. இந்த நான்கு வழக்குகளில் புலனாய்வு நடைபெற்று வருகிறது. திரு. வை.கோ., பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்,

2002 இன் சட்டப்பிரிவு 21 அரசியல் சாசனத்திற்கு எதிரானதென்று, அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில், 1. மத்திய அரசு பிரதிநிதியாக அரசுச் செயலர், சட்டம் மற்றும் நீதி அமைச்சகம், புதுதில்லி, 2. மத்திய அரசுச் செயலர், உள் விவகாரங்கள் அமைச்சகம், புதுதில்லி, 3. தமிழக அரசின் பிரதிநிதியாக அரசு உள்துறைச் செயலர் ஆகியோரை எதிர் மனுதாரர்களாகக் கொண்டு, நீதிப்பேராணை (குற்றம்) மனு எண் 129/ 2002-ன்கீழ் வழக்குத் தொடர்ந்துள்ளார். இவ்வழக்கு, அரசியல் சாசன விவகாரங்களையும், மத்திய அரசின் சட்டம் முதலானவற்றையும் உள்ளடக்கியிருப்பதால், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலை தனது சார்பில் வாதாடும் பொருட்டு தமிழக அரசு நியமித்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம், திரு. பழ. நெடுமாறன் மற்றும் சிலர் தொடுத்த குற்றவியல் மேல்முறையீட்டு மனுக்களின் மீதான ஆணையில், குற்றம் சாட்டப்பட்டவர், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதனால், தக்க நீதிமன்றத்தில், பிணை விடுவிப்பதற்காக மனுச் செய்யலாம் என உத்தரவிட்டுள்ளது. இந்த முடிவினை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு தாக்கல் செய்யப்பட உள்ளது.

பிற்பகல் 12-35

இந்த 8 வழக்குகளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், 2002-ன் சட்டத்தின்கீழான குற்றங்களுக்காக, விதிமுறைகளின்படி அமைக்கப்பெற்ற சிறப்பு நீதிமன்றத்தின் நடவடிக்கைக்கு உட்பட்டவை. எனவே இது குறித்து அனைத்து நடவடிக்கைகளும், சட்ட விதிகளின்படி நீதிமன்ற ஆளுமையின்கீழ் அமைந்துள்ளவையே என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, மாநில அரசைப் பொறுத்தவரையில், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. இனிமேல் மாநில அரசின் பங்கு எதுவும் இதில் இல்லை. நீதிமன்றம்தான் இனிமேல் முடிவு எடுக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி, இதுவரை இந்த நிதிநிலை அறிக்கையிலே எனது கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பளித்த நமது பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏழையெளிய நடுத்தர மக்கள் பயன்படுகின்ற நல்ல அம்சங்கள் நிறைந்து இருக்கின்றன. இன்றைக்கு முதலமைச்சர் அறிவித்திருக்கிற வறட்சி



நிவாரண திட்டப் பணிகளும் எந்தவித ஊழலுக்கும் அப்பாற்பட்டு, அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்குச் சென்றடைய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா,

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய 2003-2004ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே பாராட்டத்தக்க அம்சங்களும் இருக்கும், அதிலே மக்களைப் பாதிக்கின்ற அம்சங்களும் இருக்கும். ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் பாராட்டத்தக்க அம்சங்களை எடுத்துவைப்பதும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் மக்களைப் பாதிக்கின்ற அம்சங்களை எடுத்துச் சொல்லி அதற்கு நிவாரணம் காண்பதற்காக சுட்டிக்காட்டுவதும் Parliamentary Democracy-ல் இருக்கிற பழக்கம்தான். இந்த நிதிநிலை அறிக்கையிலே பற்றாக்குறையாக 865.15 கோடி ரூபாயானது விட்டுவைக்கப்பட்டுள்ளது. Uncovered deficit; இது சென்ற ஆண்டு பற்றாக்குறையான ரூ.640 கோடியை விட அதிகமாகும். அரசு செலவினங்களைக் குறைத்து இந்தப் பற்றாக்குறையைச் சரி செய்யாவிட்டால் அது திட்டச் செலவுகளையும் மக்கள் நலப் பணிகளுக்கான ஒதுக்கீட்டையும் பாதிக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், சென்ற ஆண்டு, பொதுவான பணிகளுக்கான அரசின் செலவைவிட இந்த ஆண்டு அது 1,384 கோடி ரூபாய் அதிகமாக இருக்கிறது. இதுவே 2001-2002 ஆம் ஆண்டின் செலவோடு ஒப்பிட்டுப் பார்த்தால் 2,824 கோடி ரூபாய் அதிகமாகும். அதாவது இரண்டு ஆண்டுகளிலே 33 சதவீதம் அரசின் பொதுப்பணிகளுக்கான செலவு அதிகரித்திருக்கிறது. ஏனென்றால் நடப்பு ஆண்டிலே திட்ட மதிப்பீட்டிலே கல்விக்காக ஒதுக்கிய நிதி ரூ. 4,843 கோடி. ஆனால் அதுவே திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 4,332 கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல மருத்துவத்திற்கு ரூ.1,086 கோடியிலிருந்து ரூ. 1059 கோடியாகக் குறைந்திருக்கிறது. எனவே, அரசின் செலவினங்கள் குறைக்கப்படாவிட்டால் இம்மாதிரி uncovered deficitஆக விடப்பட்டிருக்கின்ற பணத்தைச் சரிக்கட்டுவதற்காக நாம் மக்கள் நலத் திட்டங்களுக்கான செலவுகளைக் குறைக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படும் என்பதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோலத் திட்டச் செலவுகளைப் பொறுத்தவரையில், இந்த 2003-2004-ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடாக 7 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சம்தான். ஆனால் இதிலே உலக வங்கியிடமிருந்து நாம் எதிர்பார்க்கின்ற 1,000 கோடி ருபாயையும் சேர்த்து இது கணக்கிடப்பட்டிருக்கிறது. அது வராமல் போகுமானால் இது கிட்டத்தட்ட சென்ற ஆண்டு அளவிலேயே இருந்துவிடும். நடப்பு ஆண்டிலே கூட 6,040 கோடி ரூபாய் திட்டச் செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. திருத்த மதிப்பீட்டிலே அது ரூ. 5,750 கோடியாகக் குறைந்திருக்கிறது. ஆகவே இந்த அம்சங்களைக் கருத்தில் எடுத்துக் கொண்டு ஏற்கெனவே 2001 டிசம்பரில் நியமிக்கப்பட்ட ஒரு நபர் கமிஷன்—அரசினுடைய செலவுகளைக் குறைப்பதற்காக நியமிக்கப்பட்ட கமிஷனுடைய—பரிந்துரைகள் கடுமையாகச் செயல்படுத்தப்படாவிட்டால் மீண்டும் இதே சூழ்நிலை அடுத்த ஆண்டிலேகூட நமக்கு ஏற்பட வாய்பபிருக்கிறது.

பிற்பகல் 12-40

கடந்த ஆண்டிலே பல்வேறு பொருட்களுக்கு, அதாவது சில உற்பத்திப் பொருட்களுக்கு நுழைவு வரி உட்பட பல்வேறு வரிகள் என 600 கோடி ரூபாய் அதிகமாக விதிக்கப்பட்டது. அதோடுகூட இப்பொழுது 430 கோடி ரூபாய்க்கு அதிக வரிகள் விதிக்கப்பட்டிருப்பது சாதாரண மக்களைப் பாதிக்கக்கூடியதாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

குடிநீர்த் திட்டங்களுக்காக 128 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதிலும், ஊராட்சிகளுக்குக் குடிநீர்த் திட்டத்திற்காக ரூ. 91 கோடியும், பேரூராட்சிகளுக்கு ரூ. 21 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ. 15 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளிலே இருக்கின்ற குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை கொண்டுவர உத்தேசித்திருப்பதாக அரசு அறிவித்திருந்தது. அதிலும், குறிப்பாக, என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் கல்லல் பகுதிகளிலே நிலத்தடி நீர் உவர் நீராக இருக்கின்ற காரணத்தினால், அங்கு உள்ளூர்க் குடிநீர் ஆதாரங்களை நாம் தேடுவதற்கு முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றி அரசாங்கம் உடனடியாகக் கருத்திலே கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் நிதி அமைச்சரிடம் கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல, Infrastructure Development Fund பொருளாதார முன்னேற்றத்திற்கான உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 200 கோடி ரூபாய்க்கான நிதியினை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும். சாலைகளை மேம்படுத்துவதற்காக, உலக வங்கி உதவியுடன் 2,118 கோடி ரூபாயில் திட்டம் கொண்டு வருவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது. ஆனால், அது உலக வங்கி கடன் தருவதைப் பொறுத்திருக்கும் என்கின்ற காரணத்தினால், திட்டம் வரவேற்கத்தக்கதுதான்.

வறட்சி நிவாரணத்தைப் பற்றி, இங்குப் பலரும் பேசினார்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து நாம் எதிர்பார்த்த அளவிற்கு வறட்சி நிவாரணம் இன்னமும் வரவில்லை என்பதைப்பற்றி நானும்கூட ஏற்றுக்கொள்கிறேன், தமிழகத்திற்காக இன்னமும் மத்திய அரசாங்கம் அதிகமாக வறட்சி நிவாரணமாகத் தரவேண்டுமென்று. ஆனால், மத்திய அரசு, நாடு முழுவதும் இருக்கின்ற 10 மாநிலங்கள் இதேபோன்ற வறட்சி சூழ்நிலையைச் சந்தித்திருப்பதைக் கணக்கிலே கொண்டு, அவர்களுக்கும் சேர்த்துச் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலையிலேயும் நமக்கு இதைக் கொடுத்திருக்கிறார்கள். இதை முதல் தவணையாக வைத்து மீண்டும் அதிகமாகத் தமிழகத்திற்குக் கொடுக்கவேண்டும் என்பதை நிச்சயமாக தமிழக பாரதிய ஜனதா கட்சி வலியுறுத்தும்.

அதேபோல, பஞ்சத்தால், வறட்சியால் பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு மாதத்திற்கு 30 கிலோ அரிசி வழங்குகின்ற திட்டமானது, இது உணவுக்கான திட்டமாக அறிவித்த சமயத்திலே தமிழக பாரதிய ஜனதா கட்சி, இது அரிசி கொடுப்பதாக அமைய வேண்டும். ஏனென்றால், தினந்தோறும் உணவு சமைத்துப் போடுவதிலே நடைமுறைப் பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினாலே அதை அரிசியாக வழங்க வேண்டுமென்று முதன்முதலாக பாரதிய ஜனதா கட்சி இதற்குக் குரல் கொடுத்தது. ஆனால், இதிலே என்ன பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால் உணவுக்காக யார் யார் பதிவு செய்தார்களோ, அவர்களுக்கு மாத்திரம் இப்பொழுது அரிசி கொடுக்கப்படுகிறது. இது ஏற்கெனவே அறிவித்த முறைப்படி சரியாக இருக்கலாம். ஆனால் இன்னும்கூடச் சில தகுதியுள்ளவர்கள் இந்தத் திட்டத்திலே அரிசி பெறமுடியாமல் இருக்கின்ற காரணத்தினால், eligibility இருக்குமானால் இன்னும் ஒரு வாய்ப்புத் தர வேண்டுமென்பதை நான் கோரிக்கையாக வைக்கின்றேன். ஏழை மக்களுக்கு இந்த 30 கிலோ அரிசி பெறுவதற்கான வாய்ப்பு இன்னொருமுறை கொடுக்கவேண்டுமென நான் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே ஆங்காங்கே சில புகார்களும் வந்திருக்கின்றன. சிலர் வெளிநாடுகளிலே வேலை பார்க்கின்ற, வசதி

படைத்தவர்களுக்குக்கூட குறிப்பாக கல்லல் ஒன்றியத்திலே, குருந்தம்பட்டு பகுதியிலே அம்மாதிரியாக அவர்களுக்கு 30 கிலோ இலவச அரிசியானது கொடுக்கப்படுகிறது என்கின்ற புகாரும் வந்திருக்கின்றது. எனவே, அரசாங்கம் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புதிதாகப் பல வரிகள் இங்கே போடப்பட்டிருக்கின்றன. குறிப்பாகப் புதிய மின்கட்டண உயர்வோடுகூட மின்சார வரியையும் போட்டிருப்பது சிறு தொழில்களை வெகுவாகப் பாதிக்கும். மேலும் உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் உபயோகிக்கின்ற மின்சாரத்திற்கு Captive Power-க்காக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அரசு இதைத் தவிர்த்திருக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்து. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, Phone மற்றும் Cell-க்கு 12½ சதவிகிதம் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய நிதியமைச்சர், தங்கத்திற்கான சுங்க வரியைத் தளர்த்தியிருக்கிற சமயத்திலே, இங்குத் தங்க நகைகளுக்கு ஆடம்பர வரி, ஒரு சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருப்பதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பதை நான் ஒரு கோரிக்கையாக வைக்கின்றேன்.

கேபிள் டி.வி-க்களைப் பொறுத்தவரை Compounding Tax-ஆக ஊராட்சிகளுக்கு 12 ஆயிரம் ரூபாயும், பேரூராட்சிப் பகுதியிலே 18 ஆயிரம் ரூபாயும், நகராட்சிப் பகுதியிலே 36 ஆயிரம் ரூபாயும், மாநகராட்சிப் பகுதியிலே 72 ஆயிரம் ரூபாயும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இது ஏற்கெனவே அவர்கள் இருக்கின்ற இணைப்புகளின் எண்ணிக்கையைக் குறைத்துச் சொல்கின்ற காரணத்தினாலே இது Compounding Tax-ஆக விதித்திருப்பதாக நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இதிலே அரசாங்கம் இந்த வரியினை வசூல் செய்யும், 2002-2003 ஆம் ஆண்டினுடைய அடிப்படைப்படி உள்ளாட்சி மன்றங்களுக்கு அதற்கான Compensation-ஆக அரசாங்கம் கொடுக்கும் என்று அறிவித்திருக்கிறது. இதில் என்ன நிலைமை என்று சொன்னால் இன்று உள்ளாட்சி மன்றங்களிலே மின்சாரத்திற்குக்கூடப் பணம் கட்டுவதற்கான வசதியில்லாத ஒரு சூழ்நிலைதான் இருந்து வருகிறது. இதுவரை, இந்த கேபிள் டி.வி.யிலேயிருந்து வருகின்ற வரியை உள்ளாட்சி மன்றங்களே பெற்று வந்த காரணத்தினாலே இதன் முழுத் தொகையையுமே உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுப்பதற்கு அரசு ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய கருத்து.



பிற்பகல் 12-45

விவசாயிகளைப் பொறுத்தவரை அரசு மற்றும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில், விவசாயிகளுக்கு வழங்கப்படாமலுள்ள கரும்புப் பணம் பட்டுவாடா செய்யப்படாமலேயே இருந்து வருகிறது. இது கரும்பு விவசாயிகளை வெகுவாகப் பாதித்திருக்கிறது. இதுபற்றி நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே எந்தவித கருத்தும் தெரிவிக்கவில்லை. இதற்காக அரசாங்கம் உடனடியாக, அரசு மற்றும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்குக் கரும்புக்கான பணம் பட்டுவாடா செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோலக் கரும்புக்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் என்பது கொடுக்கப்பட வேண்டிய ஒரு நியாயமான கோரிக்கையாக விவசாயிகளிடம் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சென்ற ஆண்டே நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே அவினாசி அத்திக்கடவுத் திட்டம் பற்றித் தன்னுடைய நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசும்போது பேசினார்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையை வாசிக்கும்போது இத்திட்டம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. இந்தத் திட்டத்திற்கும் அரசாங்கம் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலே இருக்கின்ற இரண்டு Industrial Estates-க்கு, for upgrading infrastructure facilities-க்கு ஒவ்வொரு Industrial Estate-க்கும் 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆனால் mofussil பகுதிகளில் பல இடங்களிலே, உதாரணமாக காரைக்குடியிலே தேவகோட்டை ரஸ்தாவிலே இருக்கின்ற தொழிற்கூடங்கள், மானாமதுரையிலிருக்கிற SIPCOT Industial Estate ஆகிய பகுதிகளில் பல ஆண்டுகளாகக் கட்டப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகள் மற்ற வசதிகள் இல்லாத காரணத்தினாலே மாட்டுக் கொட்டகைகளாகக்கூடப் பல இடங்களிலே இருந்துகொண்டிருக்கின்றன. எனவே, அம்மாதிரியாக சிவகங்கை மாவட்டத்தில், அதுவும் தொழிலிலே பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கின்ற மாவட்டத்தில் இருக்கின்ற Industrial Estate-க்கும் அதனுடைய உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற விதத்திலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய பட்ஜெட் உரையிலே, அதனுடைய பின் சேர்க்கையிலேகூட, வட்டிச் செலவினத்தைக்

குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், வரவிருக்கின்ற 2003-2004-லே Debt service வட்டி மற்றும் கடன் தொகைப் பணிக்காக 4546 கோடி ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது 2001-2002 ஆம் ஆண்டினுடைய அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மூன்றில் ஒரு பங்கு இப்போதும் அதிகரித்திருக்கிறது.

மேலும், நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே கூறும்போது பல்வேறு திட்டங்களுக்காக, உதாரணமாக சாலைத் துறைத் திட்டங்கள், நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டங்கள், வறுமை ஒழிப்பு, மருத்துவ அமைப்புகள் மேம்பாட்டுத் திட்டங்கள், ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்குவது மற்றும் துப்புரவு, நகர்ப்புற மேம்பாடு போன்ற திட்டங்களுக்காக உலக வங்கியிலே நாம் எதிர்பார்க்கின்ற நிதியாக 9874 கோடி ரூபாய் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கடந்த இரண்டு ஆண்டுகளில் 1033 கோடி ரூபாயாக அதிகரித்திருக்கின்ற வட்டிச் சுமையும் அதிகரிக்கும் என்பதையும் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, இதற்கு அரசாங்கமானது எதிர்கொண்டிருக்கின்ற நிதிப் பிரச்சினைகளுக்கு முழுத் தீர்வாக அரசுச் செலவினங்களைக் குறைப்பதிலே நாம் முனைப்புக் காட்ட வேண்டுமென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இங்கே பேசும்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள் பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார்கள். மத்திய அரசைப் பொறுத்தவரையில் பல்வேறு விதங்களிலே மாநில அரசாங்கங்கள் தங்களுடைய நிதிப் பிரச்சினைகளைச் சரி செய்து முன்னேறுவதற்கான, மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை அவர்கள் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) இந்த ஆண்டிலேகூடப் பார்ப்போமேயானால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, இன்னும் இரண்டு மணித் துளிகள்.

**திரு. எச். ராஜா:** முயற்சி பண்ணுகிறேன். இந்த ஆண்டு மாநிலங்களுக்கு மத்திய அரசு ஒதுக்கியிருக்கின்ற நிதியின் அளவை, சென்ற ஆண்டைவிட 13.56 சதவிகிதம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறது. அதோடுகூட, சென்ற ஆண்டு சிறுசேமிப்புத் திட்டங்களின் மூலம் வரும் தொகையில் 80 ச்தவிகிதம் மாநிலத்தின் பங்காக இருந்தது. அதை 100 சதவிகிதமும் மாநிலத்தின் பங்காக மத்திய அரசாங்கம் அறிவித்திருக்கிறது.



பிற்பகல் 12-50

அதேபோல, இந்த ஆண்டுகூட, மாநில அரசுகளின் வட்டிச் சுமையைக் குறைக்கும்பொருட்டு, 13 சதவிகிதத்திற்கும் அதிகமாக வட்டியுள்ள கடன்களை இப்போது இருக்கின்ற வட்டி விகிதத்தை விட அது மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அதை வட்டி குறைவான கடன்களாக மாற்றிக்கொள்வதற்காக debt slab என்ற திட்டத்தை மத்திய அரசு அறிவித்திருக்கிறது. இதன் மூலமாக அனைத்து மாநிலங்களுக்குமாகச் சேர்த்து வருகின்ற இரண்டு ஆண்டுகளிலே 81 ஆயிரம் கோடி ரூபாய் வட்டிப் பணத்திலே மிச்சமாகும் என்று மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

இம்மாதிரியாக மாநிலத்தினுடைய நிதிப் பிரச்சினைகளை மேற்கொள்வதற்காக மத்திய அரசு அறிவித்திருக்கின்ற திட்டங்களோடு பல்வேறு மக்கள் முன்னேற்றத் திட்டங்களிலே மத்திய அரசும் ஒரு பங்குதாரராக மாநிலத்தினுடைய மேம்பாட்டிற்கு உதவி செய்து வந்து கொண்டிருக்கிறது. அதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், வறுமை ஒழிப்புத் திட்டமாக அந்த்யோதயா மற்றும் அண்ணபூர்ணா திட்டங்கள் இப்போது வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களிலே 25 சதவிகிதம் மக்களுக்குக் கிடைப்பதற்காக நீட்டிக்கப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிரதமரின் கிராமச் சாலை யோஜனாவிலே மாநில அரசிற்கோ அல்லது அரசாங்க நிர்வாகத்திற்கோ தெரியாமல் நேரடியாக பஞ்சாயத்திற்குக் கொடுப்பது என்கின்ற திட்டமல்ல. ஏன் என்றால், இந்த நிதிநிலை அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் பக்கம் 25-லே தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

2003-2004 ஆம் ஆண்டில் ரூ.367.22 கோடி மதிப்பீட்டில் ஊரகப் பகுதிகளிலுள்ள 2,937 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளின் நிலையை உயர்த்துவதற்கு, பிரதமரின் கிராமப்புற சாலைத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிதி பயன்படுத்தப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, ஏதோ நேரடியாக பஞ்சாயத்துத் தலைவருக்குக் கொடுத்து, அது எம்.எல்.ஏ.விற்குத் தெரியாது, யாருக்கும் தெரியாது, ரோடு இருக்கின்றது தெரியாது என்பது எல்லாம் நடைமுறை என்ன என்பது முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் சொல்லப்பட்ட குற்றச்சாட்டாகக் கருதுகிறேன். ஏன் என்றால், இதுபோன்ற பல்வேறு திட்டங்கள் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் பற்றிப் பக்கம் 24-லே சொல்லப்பட்டிருக்கிறது.

அதேபோல, இந்திராகாந்தி வீட்டுவசதித் திட்டம், வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா ஆகிய பல்வேறு திட்டங்களை அறிவித்து மத்திய அரசும் மாநில அரசோடு இணைந்து பல்வேறு திட்டங்களுக்காகச் செயலாற்றி வருகிறது.

மேலும், சாலை மற்றும் மின்சார உற்பத்தியிலே மத்திய அரசு மாநிலத்திலே இருக்கின்ற infrastructure facilities-ஐ அதிகப்படுத்துவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

இங்கு நிதியமைச்சர் அவர்கள் கூடங்குளம் அனல் மின் நிலையத்தை, இன்னமும்கூட 2,000 மெகாவாட் மின்சார உற்பத்தியைக் கூட்டுவதற்காக மத்திய அரசை வலியுறுத்தும் என்று சொல்லியிருக்கின்றார்கள். நிச்சயமாக மத்தியிலே ஆட்சியிலே இருக்கின்ற கட்சி என்ற முறையிலே தமிழக அரசிற்கு இந்தத் திட்டங்களை விரைவாகக் கொடுப்பதற்கு பாரதிய ஜனதா கட்சியும் கூட நிச்சயமாக வலியுறுத்தும், வற்புறுத்தும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பட்ஜெட்டிலே சொல்லியிருக்கின்ற விஷயங்களோடு நிறுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தேன். ஆனால், இங்கு பாரதிய ஜனதா கட்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, நேரம் இல்லை.

**திரு. எச். ராஜா:** நான் ஒரே நிமிடத்திலே முடித்துவிடுகிறேன் சுருங்கச் சொல்லி விளங்கச் செய்துவிட வேண்டும். ஏன் என்று சொன்னால், இங்கே பேசும்போது பலரும் ஏதோ ஒரு அம்சத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு, திருச்சியிலே விஷ்வ இந்து பரிஷத்திலே மத மாற்றத் தடைச் சட்டத்தை ஆதரித்துப் பேசினார்கள் என்கின்ற காரணத்தினாலேயே ஏதோ சூடம், சாம்பிராணியைப் பற்றி மாத்திரம் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். இன்று இந்த நாட்டிலே 5,000-த்திற்கும் மேற்பட்ட கல்விக்கூடங்களையும், 2,500 ஆஸ்பத்திரிகளையும் விஷ்வ இந்து பரிஷத் நடத்திக் கொண்டிருக்கிறது. அந்த மாதிரி எந்த கம்யூனிஸ்ட் கட்சியிலும் சேவை ஸ்தாபனங்களை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர்களால் சொல்ல முடியாது. ஆனால், நாம் என்ன சொன்னோம். மத மாற்றத் தடைச் சட்டம் என்பது தேவை. அதை சாத்தான்குளத்திலே மக்கள் தீர்ப்பிலே சொல்லி இருக்கிறார்கள். ஏன் என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) சாத்தான்குளம் தேர்தலைப் பொறுத்தவரை அங்கு மக்கள் முன்பாக வைக்கப்பட்ட



விஷயம், மத மாற்றத் தடைச் சட்ட மசோதா மீதான referendum-ஆகத்தான் எதிர்க் கட்சியினர் அங்கே வைத்தார்கள்.

சர்ச்சுக்குப் போனார்கள், அங்கே போய் இருக்கின்ற பாதிரியார்களைத் தூண்டி விட்டார்கள். பிஷப்புகளிடம் போனார்கள். வீதிக்கு வந்து போராடினார்கள். இதை ஒரு மையமாக வைத்துச் சொன்ன காரணத்தினால் மறுநாள் நான்கூட பாரதிய ஜனதா கட்சியின் சார்பாகச் சொல்லும்போது சொல்லியிருந்தேன். சாத்தான்குளம் தேர்தலுடைய மக்கள் தீர்ப்பிற்குப் பிறகு கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை தமிழக மக்கள் ஏற்றிருக்கிறார்கள் எனப் பெருந்தன்மையாக ஏற்றுக்கொண்டு, அதை விவாதத்திற்குள்ள பொருளாக யாரும் (குறுக்கீடுகள்) வைக்கக் கூடாது எனக் கேட்டுக் கொண்டு வாய்ப்பிற்கு நன்றி கூறி அமைகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே point of order ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி. (குறுக்கீடுகள்) இல்லை. ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமி பேசவிருக்கிறார். அவர் பேசுவார்.

*பிற்பகல் 12-55*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசினுடைய நிதிநிலை அறிக்கை மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துகளைக் கூற நான் விழைகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே எடுத்த எடுப்பிலேயே தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற வரலாறு காணாத வறட்சியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளதை நான் வரவேற்கக் கடமைப்பட்டுள்ளேன். வரலாறு காணாத ஒரு வறட்சி தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் போர்க்கால அடிப்படையில் அரசாங்கத்தினுடைய பணியை, மக்களைப் பாதுகாப்பதிலே இந்த அரசு முழு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று சொன்னதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற வறட்சி என்பது, ஒரு பகுதியாக இருக்கக்கூடிய காவிரி டெல்டா பகுதியிலே இருக்கக்கூடிய வறட்சி என்பது கடந்த 1961-க்குப் பிறகு வராத, வரலாறு காணாத வறட்சி. அது இன்றையதினத்திலே காவிரி டெல்டா பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற வறட்சி என்பதைவிட, காவிரி டெல்டா பகுதியினுடைய வறட்சி என்பது ஒரு புதிதான

வறட்சியாக இருப்பதால் இன்றையதினம் மக்கள், விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அனைத்து மாவட்டங்களிலும் இன்றையதினத்திலே குடிநீர்ப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. விளை நிலங்கள் எல்லாம் நவம்பர் மாதமே வெடித்துக் காணப்படுகின்ற நிலைகள் ஏற்பட்டுள்ளன. விளை நிலங்கள் காய்ந்து, இன்றைய தினத்திலே, குளம், குட்டை, ஆறுகளைப் பார்த்தோம் என்று சொன்னால் கடுமையாக வற்றிப் போய், கால்நடைகளுக்குக்கூடக் குடி தண்ணீர் இல்லாத ஒரு போக்கு தமிழகத்திலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

நட்ட மரங்களும் பட்டுப் போயின; வெட்டிய கிணறுகளும் வற்றிப்போன ஒரு நிலைமையை தமிழகத்திலே நாம் காண முடிகிறது. ஆகையால், விவசாயிகளுடைய, நேரடியாக உழவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகள் தன்னுடைய வாழ்க்கையிலே நம்பிக்கை இழக்க வேண்டிய அவசியம் என்றுமில்லாத அளவுக்குத் தமிழகத்திலே இன்றையதினத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் எதிர்கால வாழ்க்கை என்னவாகுமோ, பெற்ற கடன் என்னவாகுமோ, நட்ட பயிரும் கருகிப் போயிற்றே என்கின்ற அளவுக்குத்தான் தங்களுடைய வாழ்க்கையை நிறைவு செய்யக்கூடிய அளவுக்கு இன்றையதினத்திலே இருந்து கொண்டிருக்கிறார்கள். **அதேபோன்று, ஏரி குளங்கள் ஆகியவற்றில் தண்ணீர் இல்லாததனால் இன்றைக்கு கோவை போன்ற இடங்களிலே... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். ** என்று சொன்னதை நீக்குகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** எதை நீக்குகிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்று சொன்னதை நீக்குகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் பேசியதிலே எதை நீக்குகிறேன் என்று சொல்லுங்கள். எதை நீக்குகிறேன் என்று சொல்லுங்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதை நீக்குகிறேன் என்று சொல்லுங்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கச் சொல்லியிருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** சரி, அது உங்கள் மூலமாகப் பதிவாகியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதேபோன்று.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தவறு அதில் இருப்பதால்தான் அதனை நீக்கச் சொன்னேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** அதேபோன்று, இன்றைக்கு கோவை போன்ற இடங்களிலே, தருமபுரி போன்ற இடங்களிலே, ஈரோடு போன்ற இடங்களிலே 500 அடி ஆழம் கொண்ட கிணறுகள் வற்றிப் போயிருக்கின்றன. அவ்வளவு ஒரு மோசமான நிலைமை இருப்பதால் இன்றையதினத்திலே விவசாயிகள் மிகச் சோதனையான காலக்கட்டத்திலே இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதேபோன்று, காவிரிப் படுகைகளை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால், 12 இலட்சம் ஏக்கர், 6 சதவீதம்கூட விளையாத அளவுக்கு நிலங்கள் நீரின்றி இன்றைக்கு வற்றிப் போயிருக்கின்றன. விவசாயிகளுடைய வாழ்க்கை என்பது, 12 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் வேலையிழந்து, கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தீபாவளிப் பரிசாக, 10 கிலோ அரிசி மற்றும் பொருட்களை அவர்களுக்குக் கொடுத்ததை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அது அவர்களுடைய வாழ்க்கையிலே ஒரு நிம்மதியை ஏற்படுத்தியது.

இன்றையதினம் 1 கோடி விவசாயத் தொழிலாளர்கள் தமிழகத்திலே-தஞ்சை மாவட்டத்திலே மட்டும் 15 இலட்சம் பேர்களுக்கு மேல்--பல கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள், கிராமங்களைவிட்டு, வேறு இடங்களுக்கு வேறு வேலைக்கு வெளியேறிச் செல்லக்கூடிய பரிதாபமான நிலை இருக்கிறது. இது அரசாங்கத்தின் மீது ஏதோ குற்றஞ்சாட்டுவதற்காகச் சொல்லவில்லை.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அது ஒரு பார வண்டி. எதிர்க்கட்சிகளாக இருக்கிற நாங்கள் எல்லாம் அந்த பார

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

வண்டியினுடைய கடையாணிகள். ஆகையினால் இந்தப் பார வண்டி போகிற இடத்திற்குப் போய்ச் சேர வேண்டுமென்றால், அந்தக் கடையாணிகள் என்பது நன்றாக இருக்க வேண்டும். எதிர்க்கட்சிகள் சொல்லக்கூடிய கருத்துகளை நீங்கள் கேட்டுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் எதையும் தாங்கும் இதயம்; எதையும் தாங்கும் இதயத்தைக் கொண்ட பேரறிஞர் அண்ணாவைக் கொண்டிருக்கிற ஆட்சி. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சகிப்புத் தன்மையைக் கொண்டிருக்கிற ஆட்சி. ஆகையினால் எதிர்க்கட்சிகள் சொல்கிற கருத்துகளை நீங்கள் பொறுமையோடு கேட்டு, அடிப்படையாக அதற்குத் தீர்வு காண வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

அதேபோல, எதிர்க்கட்சிகள் சொல்வதையெல்லாம் முதலமைச்சர் புறக்கணித்துவிட்டார் என்றும் நான் சொல்ல வரவில்லை. நாங்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 5,000 ரூபாய் வேண்டுமென்று சொன்னோம். விளைந்த நிலங்களாக இருந்தும் விளையாமல் இருப்பனவற்று 3,000 ரூபாய் வேண்டுமென்று சொன்னோம். மானாவாரி நிலங்களுக்கு ஏக்கருக்கு 1,000 ரூபாய் வேண்டுமென்று சொன்னோம். முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார்கள். மத்திய அரசை வலியுறுத்தினார்கள். மத்திய அரசிலிருந்து பார்வையிட வந்த குழுவினிடத்திலே சிபாரிசு ஒன்றையும் கொடுத்தார்கள். அதனை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி. அந்த வகையிலேதான் நான் மீண்டும் சொல்கிறேன். தமிழகத்திலே என்றும் இல்லாத அளவிற்கு இன்றைய தினத்திலே விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்காக இன்றைக்கு 350 கோடி ரூபாய்க்கு அரசு நிவாரணம் அறிவித்திருப்பதை அன்றைக்கும் பாராட்டினோம், வரவேற்றோம்; இன்றைக்கும் அதை வரவேற்கிறோம். அதேநேரத்திலே மத்திய அரசைக் கேட்ட அந்த அளவை மாண்புமிகு முதலமைச்சர் பரிசீலிக்க வேண்டும், அந்த வகையிலே கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-00

அதேபோன்று, மைய அரசைப் பொறுத்தவரையிலே, காவிரி நதி நீர் பிரச்சினையிலே அநேகமாக மாநில அரசை வஞ்சிக்கிற முறையிலே மைய அரசு கடந்த காலத்திலேயும் சரி, இன்றையதினத்திலேயும் சரி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா



அவர்கள்கூட இங்கே பேசும்போது வந்த வேலையை விட்டுவிட்டு, பந்தக் காலைப் பிடித்து நின்றதுபோல் என்ற பொருள்படும்படி சொன்னார்கள். தமிழகம் அந்த அளவிற்கு வறட்சியானதற்கு என்ன காரணம்? காவிரி டெல்டா பகுதி வறட்சியானதற்கு என்ன காரணம்? மைய அரசு காலத்தோடு காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் தலையிட்டு தீர்வு கண்டிருந்தால் இவ்வளவு பெரிய நஷ்டத்திற்கு ஆளாக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. 350 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய அவசியம் இல்லை. வேறு பல திட்டங்களுக்கு அந்தப் பணத்தைச் செலவிட்டிருக்கலாம். அதைப்பற்றி, மத்திய அரசின் நிலை பற்றி என்ன சொல்கிறார் திரு. ராஜா என்பதைப் பற்றிப் பின்னால், முடிந்தால் அவர்கள் சொல்லட்டும். ஆகவே அந்த அளவுக்கு காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் மைய அரசு நாட்டம் காட்டாமல் காலம் கடத்தியதுதான் பிரதானமான காரணமாக இருக்கிறது. அநேகமாக நம்முடைய மாநில அரசு, மைய அரசு கொண்டுவருகிற அனைத்துத் திட்டங்களையும் முழு மனதோடு வரவேற்பதாக அடிக்கடி வாக்குறுதிகளைத் தந்து கொண்டிருப்பதும் அதில் இருக்கிற இரகசியங்களும் எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்த வகையிலேதான் ...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய எந்தத் திட்டங்களை நாங்கள் வரவேற்கிறோம்? எங்களுடைய ஆட்சியைப் பொறுத்தவரைக்கும், எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரைக்கும் எங்களுக்கெனத் தனிக் கொள்கைகள் இருக்கின்றன. நாங்கள் யாரையும் சார்ந்தவர்கள் அல்ல. தனித்த முறையிலே இருக்கிறோம். புரட்சித் தலைவி அவர்களுக்கு என்று ஒரு தனித் தன்மை அகில இந்திய அளவிலே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று இன்றையதினத்திலே மாநில அரசுக்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 258 கோடி ரூபாய் மைய அரசு ஒதுக்கி நம்முடைய மாநில அரசை இன்றைக்கு ஏமாற்றி இருக்கிறது என்பதையும் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் அதிகமாக அவர்கள் நிதி கொடுப்பதற்கு தனித் தீர்மானங்களை நம்முடைய மாநில அரசு நிறைவேற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று, 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டம் என்று அறிவித்தால் மட்டும் போதாது. மாவட்டத்திற்கு மாவட்டம் வாழ்க்கை நிலையும், தொழில் நிலையும் மாறி இருக்கின்றன. மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கிற வறட்சி நிலையும் வேறுபட்டு மாறியிருக்கிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டிருக்கிற அந்தச் சூழ்நிலையில் நம்முடைய மாநில அரசின் நிதி நிலையைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எந்தவிதமான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன, எந்த விதமான தொழில்கள் முன்னேறுவதற்கு என்ன விகிதாச்சாரங்களை அங்கே வகுக்க வேண்டும், அதற்காக மாவட்ட வாரியாக நிதியை ஒதுக்கினால்தான் அந்த மாவட்டத்தினுடைய வறட்சி நிலையிலிருந்து அந்த மக்களைப் பாதுகாக்கக்கூடிய அளவிற்கு அந்த நிதி . . . .

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் வறட்சி ஏற்பட்டுவிட்ட பிறகு, அரசின் சார்பாக நிவாரணங்கள் மேற்கொள்ளப்படுகின்றபோது அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து, எந்த மாதிரியான பாதிப்பு ஒவ்வொரு மாவட்டத்திலும் வரப்பெற்றது என்பதையும் பரிசீலனை செய்து அதற்குத் தகுந்தாற்போல்தான் நிதி ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 28 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லுகிற போது, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதும், நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதும், 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்கள் என்று நம்முடைய மாநில சட்டமன்றத்திலே தனித் தீர்மானங்களை நிறைவேற்றி அதன்மூலமாக அரசினுடைய இதழிலே வெளியிட்டால்தான் அதிலே நீங்கள் சொல்லக்கூடிய . . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நீங்கலாக தமிழகத்தின் இதர 28 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து அரசாணை ஏற்கெனவே வெளியிடப்பட்டுவிட்டது. அதன் பிறகு எப்படி இந்த அவையிலே இதற்காகத் தீர்மானத்தைக் கொண்டுவர முடியும்? அதுமட்டுமல்லாமல், Commissioner of Revenue Administration என்னும் உயர்மட்ட அதிகாரி இந்த வறட்சி நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடுகிறார். அவர் அவ்வப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் தொடர்புகொண்டு, அந்த மாவட்டத்தில் நிலவுகின்ற பாதிப்புகளைப்பற்றி ஆய்வு செய்து அந்த மாவட்டத்திற்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டும் என்று அரசுக்குப் பரிந்துரை செய்கிறார். அதன்படிதான் அரசு உதவிகளை வழங்கி வருகிறது.



*பிற்பகல் 1-05*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி மாவட்டங்களிலே இருக்கக்கூடிய அந்த வறட்சி நிவாரணப் பணிகளை முறைப்படுத்திச் செய்தால்தான் அந்தப் பணிகளைச் செய்யமுடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) இல்லை. தஞ்சாவூருக்கே கொடுங்கள் என்று நான் சொல்லமாட்டேன். நான் எப்பொழுதுமே அந்த மாதிரியெல்லாம் பேசமாட்டேன்.

தென்னகப் பண்பாட்டு மையத்தினுடைய தொடக்க விழாவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தஞ்சைக்கு வந்தபோது, நாங்கள் எல்லாம் சந்தித்தோம்; மற்றக் கட்சிகள் எல்லாம் கேட்டார்கள். கடுமையான வறட்சி நிலவியபோது, 124 கோடி ரூபாய் நிவாரணங்களுக்காக ஒதுக்கப்பட்டது. அப்படி ஒதுக்கப்பட்ட நிவாரணங்களில் பெரும்பகுதி கால்வாய்களைத் தூர் எடுத்தல், குளங்களைத் தூர் எடுத்தல், பண்ணைக் குட்டைகளை அமைக்கின்ற திட்டங்கள் எல்லாம் அதிலே அறிவிக்கப்பட்டிருந்தன. அந்தத் திட்டங்களை நான் குறை சொல்லவே மாட்டேன். அந்தத் திட்டங்கள் எல்லாம் அற்புதமான திட்டங்கள். அவை காவிரிப் படுகையிலே பெரும் பகுதிகளுக்குத் தேவையான திட்டங்கள். காவிரிப் படுகையிலே மட்டுமல்ல; பெய்கின்ற மழை நீரைக்கூட, நீர் நிலைகளைக்கூட பாதுகாப்பதற்கான முறையிலே, கடலுக்குப் போய்ச் சேராமல், இடையிலே பாதுகாப்பதற்கான ஒரு நல்ல திட்டம். அந்தத் திட்டம் எப்படி நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது அவசியம் என்று நான் கருதுகிறேன். ஒன்று, அந்தத் திட்டம் எப்படியிருக்கிறது என்று சொன்னால், ஒருவன் கையிலே பையை எடுத்துக்கொண்டு போகிறபோது, எதிரே வருகிற வாகனம் மோதி விடுகிறது. அந்த வழியாக வரக்கூடியவன், அந்த உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறானே அவனை விட்டுவிட்டு, ** . அந்த நிலையிலே, அது நடைபெறாமல் இருக்கிறது. அதனை நீங்கள் பாதுகாக்க வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சி அமைப்புகள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகளாக இருக்கின்றன. அந்த அமைப்புகள் மூலமாகச் செய்யப்பட்ட பணிகள் சரியாகவும், நிறைவாகவும் சில இடங்களில் நடைபெற்றிருக்கின்றன. குளங்களைத் தூர் வாரினாலும் சரி அல்லது பண்ணைக் குட்டைகளை அமைத்தாலும் சரி, அந்தப் பணிகள் சரியாக நடந்தன. அதற்கு மாறாக, இங்கே குற்றச்சாட்டாகச் சொல்லக்கூடியது. ** என்று போனால், அந்தத் திட்டம் எப்படி நிறைவேறும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். (குறுக்கீடுகள்) ஆதாரமாகச் சொல்கிறேன்; நான் பொறுப்பேற்றுக் கொண்டு பேசுகிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஆதாரமில்லாத குற்றச்சாட்டை இங்கே அவையிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒரு பணியை எடுக்கின்றபோது, அந்தப் பணியை இதற்கு முன்னர் அவர் செய்திருப்பதனுடைய முன்தகுதியை நிர்ணயித்து, அவருக்கு அந்தப் பணி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அந்த 3 மாவட்டங்களுக்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 164 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, வாரந்தோறும் பணியினுடைய முன்னேற்றத்தினை ஆய்வு செய்யவேண்டும் என்றும், அந்த ஆய்வின் அடிப்படையில் தொடர்ந்து அந்தப் பணியை 100 சதவிகிதம் நிறைவேற்றும் வண்ணம் செயலாற்ற வேண்டும் என்றும் ஆணையிட்டார்கள்.

அதன்படி, அந்தப் பணிகள் குறித்து ஒவ்வொரு வாரமும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து அறிக்கைகளாகப் பெற்று, தலைமைச் செயலகத்தில் துறை சார்ந்த அத்தனை அரசு அதிகாரிகளுடன் நீண்ட, விவாமான ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்யப்பட்டதற்குப் பின்னால், 2 மாதங்கள் கழித்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையினை ஏற்று, நானே அந்தப் பகுதிகளுக்கு அதிகாரிகளுடன் சென்று நேரடியாக அந்தப் பணிகளை பார்த்தேன். அத்தனை பணிகளும நிறைவாக இருந்தன. ஓர் இடத்தில் நான் சென்று ஆய்வு செய்தபோது, அந்தப் பணியை அந்தப் பகுதியிலே இருக்கின்ற கம்யூனிஸ்ட் தோழர் செய்து கொண்டிருக்கின்றார் என்ற தகவலும்கூட எனக்குக் கிடைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, எவ்வித பாரபட்சமும் இல்லாமல் அங்குப் பணிகள் நடைபெற்று நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுத்தார்கள். ஆனால், அந்த வேலைத் திட்டம் என்பது வறட்சி நிவாரணப் பணிக்காக, உணவுக்கு அளிக்கக்கூடிய வேலைத் திட்டம். இந்தத் திட்டத்தை, அது கான்டிராக்டராக இருந்தாலும் சரி, . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. மணி, தாங்கள் பேசுகிறபோது வாய்ப்பிருக்கிறது. திரு. பழனிசாமியினுடைய நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். அவருக்கு இன்னும் 5 நிமிடங்கள்தான் இருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** இந்தத் திட்டத்தை ஒரு தனி நபருக்கு, கான்டிராக்டருக்குக் கொடுப்பதனாலே, அங்கே அவர்கள் இயந்திரங்களை வைத்துப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிச் செய்வதால், திட்டநோக்கமே நிறைவேறாமல் போய்விடக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயந்திரங்கள் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்கெல்லாம், மனித சக்தி அங்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, எந்தவிதத் தவறும் அங்கு நடைபெறவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-10

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டது எல்லாம் உண்மைதான். நான் இல்லையென்று சொல்லவில்லை. நான் எதையும் மறுக்கவில்லை. பார்வையிட்டார்கள். அது மக்களுக்கு, விவசாயிகளுக்குச் சென்றடையவேண்டும் என்கிற நோக்கத்தில்தான் நான் சொல்கிறேன். அந்த நோக்கத்தில் அது நிறைவேறுமானால், நீங்கள் கொண்டுவந்திருக்கிற அரசினுடைய நலத்திட்டங்கள் மக்களிடத்தில் இடம்பெறும், நல்ல வரவேற்பு இருக்கும். தவறுகள் எல்லாம் நான் மட்டும் சொல்வதல்ல. எல்லோரும் சொல்லப் போகிறார்கள். இன்றைக்கு நான் ஒருவன் சொல்கிறேன், நாளைக்கு எல்லோரும் சொல்லப் போகிறார்கள். அந்த நோக்கத்திற்காக நான் சொல்கிறேன். ஆகையினால் அத்திட்டங்கள் சரியாக நடைபெற வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக நிறைவேற்றப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்கள் மிகச் சிறப்பாக நடந்தேறியிருக்கின்றன என்பதை ஆரம்பத்திலே எடுத்த எடுப்பிலே சொன்னேன். அதேமாதிரி நடைபெறவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்திலே ஏழை எளிய மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாப்பாடு வழங்கவேண்டுமென்ற திட்டத்தை அறிவித்தார்கள். வேறு யாரும் நிறைவேற்றுவதற்கு முயற்சித்தார்களோ என்னவோ, எங்களைப்

பொறுத்தவரையில் மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்களே நேரடியாகப் போய் இருந்து உள்ளாட்சி அமைப்புகளுடைய பிரதிநிதிகளை வைத்துக்கொண்டு அவர்களுக்கு உணவளிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்ய வேண்டுமோ, அந்த ஏற்பாட்டைச் செய்தவர்கள். இன்னும் போதாது என்பதற்காக, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குச் சென்று அதை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்று வாதிட்டுச் செய்து கொடுத்தவர்கள். அதற்குப் பின்னால், பலபேர் சாதம் வாங்கிக் கொண்டு போனவர்கள் சொன்னார்கள், நாங்கள் பட்டினி கிடந்து செத்தாலும் சாவோம், எங்களைக் கையேந்த, தட்டேந்த விடுவது சரிதானா, அம்மாவிடம் சொல்லுங்கள், அரிசி கொடுக்கச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். உங்களிடத்தில் சொன்னோம். அரிசி கொடுத்தீர்கள். நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது அரிசி வழங்கப்பட்டு வருகிறது. அதிலே ஒரு பாரபட்சமும் இருக்கக்கூடாது. அரசிடத்திலே, இதில் என்ன பாரபட்சம் இருக்கிறது? நாகப்பட்டினத்திற்கு அடுத்துள்ள தஞ்சை மாவட்டத்திற்கு இன்னும் அரிசி போய்க் கொண்டிருக்கிறது. 28 ஆம் தேதி வரைக்கும் எங்கள் மாவட்டத்திற்கு அரிசி கொடுக்கப்படவில்லை. என்ன காரணத்தினால் கொடுக்கப்படவில்லை என்று தெரியவில்லை. இப்போதுதான் பட்டியல் தேர்வு செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இதனை ஒரு குற்றச்சாட்டாக எடுத்துக் கொள்ளக்கூடாது. என்ன காரணம் அப்படி மாவட்டத்திற்கு மாவட்டம் delay ஆவதற்கு? மந்திரி இருந்தால்தான் கொடுக்க முடியுமா? மந்திரி இல்லாத மாவட்டங்களுக்கு அரசினுடைய நலத்திட்டங்கள் போய்ச் சேராதா? என்ன காரணம்? நீங்கள் அறிவித்திருக்கிற நலத்திட்டங்கள் குறித்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் வேறு யாரையாவது சிறு ஆலோசனையாகக்கூட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே அழைத்து கூட்டம் நடத்தியதாக வரலாறு கிடையாது. எப்படித் திட்டம் நிறைவேறும்? எப்படிக் கருத்துகளைச் சொல்ல முடியும்? வறட்சியால் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிற நேரத்தில் இதுவரையில் என்னுடைய மாவட்டத்திலே உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து கருத்துக் கேட்டு அறியக் கூடாதா?

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சிவபுண்ணியம் அவர்கள் இருக்கிறார்கள். அங்கே வறட்சிப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடத்தியபோது அவர்கள் கலந்து கொண்டார்கள். இவர்கள் அதிலே கலந்துகொள்ளவில்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது, கூட்டம் நடத்தியதில் பங்கெடுத்தது என்பது உண்மைதான். ஆனால் அது வறட்சிப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் அல்ல. அரசாங்கத்தினுடைய வளர்ச்சிப் பணிகளைக் குறித்த ஆய்வுக் கூட்டத்திலே அமைச்சர் அவர்கள் பங்கேற்றார்கள். அதிலே நானும் பங்கேற்றேன். அதிலே கருத்துத் தெரிவித்தேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்தில் இந்த இலவச அரிசி குடும்பத்திற்கு 30 கிலோ வழங்கப்படவில்லை என்பது உண்மையல்ல. நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல ஒட்டுமொத்தமாக 14 இலட்சத்து 3000 பேருக்கு இந்த இலவச அரிசி வழங்கப்பட்டு வருகிறது. குடும்பங்களின் எண்ணிக்கை என்று எடுத்துக்கொண்டால், 9.77 இலட்சம் குடும்பங்களுக்கு, அதாவது 9,77,000 குடும்பங்களுக்கு, இந்த இலவச அரிசி வழங்கப்பட்டு வருகிறது. இதில் திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 48,000 குடும்பங்களுக்கும் மேலாக வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த விழாவிலே வந்து கலந்துகொண்டு நலத்திட்டங்களைத் துவக்குகிற வரை கொடுக்கப்படவில்லை. 28 ஆம் தேதிதான் கொடுப்பதற்கே ஆரம்பித்தார்கள் என்பதைத்தான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். நான் ஆரம்பத்திலே சொல்கிறபோது அதைத்தான் சொன்னேன். காலம் கடத்துவதற்கு என்ன காரணம் என்பதைத்தான் கேட்டேன். எல்லோரும் இரண்டாவது தடவை அரிசி வாங்கிவிட்டார்கள். இங்கு இப்போதுதான் பட்டியல் தயார் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காரணத்திற்காகத்தான் நான் சொல்ல வந்தேன்.

அதேபோன்று இந்த நிதிநிலை அறிக்கையில் வரிக்கு வரி கடுமையான பல வரிகளை நம்முடைய மாநில அரசு போட்டிருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசு பெட்ரோலுக்கு ஒரு ரூபாயும், டீசலுக்கு ரூ.1.50-ம் வரி உயர்த்தியிருக்கிறார்கள். மத்திய அரசு போட்டிருக்கிற வரி போதாது என்பதற்காக மாநில அரசு 20 சதவீத வரியை மக்கள்மீது சுமத்தியிருக்கிறது. அது சரியல்ல. அதை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இப்போது மண்ணெண்ணெய்க்கும் வரி போட்டிருக்கிறார்கள். பள்ளி மாணவ, மாணவிகள் பயணம் செய்கிற பஸ்களுக்குக் கூடுதலாக வரிகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. இப்படி வரிகளைப் போடுவதன் மூலமாக பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. இந்த வரிகள் எல்லாம் யாருக்குப் போகும் என்று சொன்னால், நீங்கள் அரசு பஸ்களுக்கு போட்டாலும் சரி, வாகனங்களுக்குப் போட்டாலும் சரி, இதையெல்லாம் நேரடியாக அதைப் பயன்படுத்துகின்ற மக்கள்மீது சுமத்துகிறோமே தவிர, ஏதோ தனிப்பட்ட அதிகாரிக்கு அல்ல, தனிப்பட்ட நிறுவனத்திற்கு அல்ல; அவ்வளவு வரிகளுமே உயர்த்தியவுடனே, மக்கள்மீதுதான் சென்று அடைகின்றன. வறட்சியால் ஒரு மாநிலம் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில் புதிய திட்டங்களைத் தொடங்காவிட்டாலும் பாவாயில்லை. அந்த மக்களைப் பாதுகாப்பதிலே நம்முடைய அரசு முழுமையாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-15

வேளாண்மைத் தொழிலிலே கிராமப்புறங்களிலே மிகப்பெரிய சீரழிவு ஏற்பட்டிருக்கிறது. ஆனால். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், கிராமப்புற விவசாயத் தொழிலினை, அந்தப் பாதிப்பிலேயிருந்து பாதுகாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்திலேதான் கொண்டுவரப்பட்டு கடந்த 13 ஆண்டுகாலமாக இந்த இலவச மின்சாரம் கொடுக்கும் திட்டம் நடைமுறையிலே இருந்துகொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல தடவை விளக்கம் அளிக்கப்பட்டபோதும் பதிலளிக்கப்பட்டபோதும்-இன்றைக்கும் சபையிலே விளக்கம் அளித்தார்கள்—நான்கூடத்தான் இருந்தேன்; இல்லாமல் இல்லை. 13 ஆண்டு காலமாகத் தமிழகத்திலே வழங்கிவந்த அந்த இலவச மின்சாரம் இன்றைக்கு சிறு, குறு விவசாயிகளுக்கு மட்டும் உதவி அளிக்கிறோம் என்று கூறி, அந்த மின்சாரக் கட்டணத்தை உயர்த்தியிருப்பது என்பது, ஏதோ நெருப்பை மூட்டிவிட்டு நீரைவிட்டு அணைப்பதுபோல் ஆகிவிட்டது. ஆகவே, இந்த நிலையிலே இருந்து அரசு ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி, 20 மணித் துளிகள் பேசியிருக்கிறீர்கள். இன்னும் இரண்டு தலைவர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) இன்னும் இரண்டு தலைவர்கள் பேச வேண்டும். திரு. ஹேமச்சந்திரன் பேச வேண்டும். திரு. மணியும் பேச வேண்டும்.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகையால் இந்த மின்சாரக் கட்டணத்தை நீங்கள் குறைக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோன்று, மின்சாரக் கட்டண உயர்வை நாம் எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், சென்ற தடவை 1,000 கோடி ரூபாய்; இந்தத் தடவை 1,400 கோடி ரூபாய். அநேகமாக ரூ.2,400 கோடிக்கு வரியைப் போட்டு, 100 கோடி ரூபாய் நாம் சலுகை செய்யப் போகிறோம். இந்த 2,400 கோடி ரூபாயிலே 100 கோடி ரூபாய்க்கு மட்டுமே, சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் என்ற அடிப்படையிலே இன்றைக்குச் சலுகை செய்ய போகிறோம். இதைவிட மோசமான நிலை என்னவென்றால் எதற்கு எடுத்தாலும், உலக வங்கிதான் இன்றைக்கு நம்முடைய நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறது. மத்திய அரசாக இருந்தாலும் சரி, மாநில அரசாக இருந்தாலும் சரி, உலக வங்கிதான் நம்முடைய நாட்டை இன்றையதினத்திலே ஆண்டுகொண்டிருக்கிறது. மனிதர்கள் செத்து மடிந்தாலும் அவர்களுக்கு மானியம் கொடுக்காதே என்று சொல்கிறது; மண்ணெண்ணெய் விலையில் மானியம் கொடுத்தாலும், அதைக் கொடுக்காதே என்று சொல்கிறது. அதேபோன்று, இலவசமாக மின்சாரம் கொடுத்தாலும் இரத்து செய் என்று சொல்கிறது. நியாயவிலைக் கடைகளில் அரிசி கொடுத்தாலும் அதைக் கொடுக்காதே என்று சொல்கிறது. கட்டண உயர்வு, அரசு ஊழியர்களுக்கான பஞ்சப்படி, ஊதியம் கொடுத்தாலும்கூட, போனஸ் கொடுத்தாலும்கூட, கொடுக்காதே என்று சொல்கிறது. சாலைப் பணியாளர்கள் 10,000 பேரை நீக்க வேண்டுமென்று இன்றைக்கு உலக வங்கிதான் சொல்லிக் கொண்டிருக்கிறது. அப்படியென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்பது, தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசா அல்லது உலக வங்கியால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசா என்று மக்களுக்கு ஒரு சந்தேகம் வருகிறது. ஆக, உலக வங்கி அடிப்படையிலேயே, இன்றைய தினத்திலே நம்முடைய ஆட்சியை நடத்த ஆரம்பித்தோம் என்று சொன்னால், தமிழ்நாட்டு மக்கள் வறுமையில் வாட வேண்டிய அவசியம்தான் வரும் என்பதைத் தவிர, அந்த மக்களை வாழ்க்கையிலே முன்னேற்றுவதற்கான எந்தவொரு திட்டத்தையும், பணியையும் செய்ய முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இறுதியாக, இப்போது தமிழகத்திலே அரசு ஊழியர்களுடைய போராட்டம் என்பது; அவர்களுக்கு இதுவரை கிடைத்து வருகின்ற உரிமைகள், தங்களுக்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்று

சொல்கிறார்கள். அரசு ஊழியர்களுக்காக வழங்கப்பட்டிருந்த அந்த போனஸ் என்றும் இல்லாத அளவிற்குத் தற்போது குறைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தொடர்ந்து தங்களுடைய கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள்; நம்முடைய நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை இந்தச் சபையிலே சமர்ப்பிக்கப்பட்டபோது ஒன்றை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; 94 சதவிகிதம் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். நேற்றையதினம், இதற்கு முன்பாக பதில் அளிக்கிறபோது 96 சதவிகிதம் இன்றையதினத்திலே செலவழிக்கப்படுகிறது என்று சொன்னார்கள்; 2 சதவிகிதம் அதிகரிக்கப்படுகிறதென இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பதிலளித்தார்கள். இந்த இரண்டு ஆண்டு காலத்திலே, தமிழக அரசு பொறுப்பிலே இருக்கிற அரசு ஊழியர்கள் 55,000 பேர் ஓய்வு பெற்று வீட்டுக்குப் போயிருக்கிறார்கள். ஒருவரைக்கூட இன்றையதினம் நாம் பணியில் அமர்த்தவில்லை. எப்படி இந்த 2 சதவிகிதம் கூடுகிறது என்பது இன்றைக்குக் கேள்வியாக இருக்கிறது. ஆகையால், இதற்கு முன்பு இருந்த அரசுகளைப்போல இல்லாமல் இந்த அரசு, காலிப் பணியிடங்களைப் பூர்த்தி செய்யாமல் அரசுக்கு நிதிநிலை நெருக்கடி வந்திருக்கிறது என்று சொல்லி அரசு ஊழியர்களை தேசத்துரோகிகளைப் போன்று, அவர்கள் மீது ஒரு குற்றம் சுமத்தப்பட்டிருக்கிற ஒரு நிலையில் தொடர்ந்து அரசு அறிவித்திருப்பது, அரசு ஊழியர்களை மிகப்பெரிய வேதனைக்கு ஆளாக்கியிருக்கிறது. அநேகமாக அவர்களெல்லாம், 30 ஆண்டுகாலம் வேலை பார்த்தவர்கள்; அப்படிப் பணிபுரிந்தவர்கள் தாங்கள் ஓய்வுபெற்ற பின்னால் கிடைக்கின்ற அந்த ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடத்தலாம், மகளுக்குத் திருமணம் நடத்தலாம் என்ற எண்ணத்தில் இருப்பவர்கள்; அவர்களுக்கு வெறும் பேப்பரை மட்டும் கொடுப்பது என்பது சரியல்ல. அரசு அதை மறுபரிசீலனை செய்து அவர்களுக்குக் கடந்த காலத்தில் வழங்கி வந்த அந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டு வார்த்தையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது, சிறு குறு விவசாயிகளுக்குச் சலுகை அளிப்பதற்காக இந்த அரசு வெறும் 100 கோடி ரூபாய் மட்டும்தான் சலுகை அளித்திருக்கிறது என்று தெரிவித்தார்கள். ஏற்கெனவே பலமுறை இதனை நான் தெளிவாக விளக்கியிருக்கிறேன். ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு மின்சார வாரியத்திற்கு ஆகின்ற செலவு மூன்று ரூபாய் ஏழு பைசா ஆகும். ஆனால்,



இப்போது விவசாயிகளுக்கு என்று விதிக்கப்பட்டிருக்கின்ற கட்டணம் ஒரு யூனிட்டுக்கு 20 பைசாதான். ஆகவே, விவசாயிகளுக்கு, இந்தக் கட்டணம் செலுத்துவதற்காக, தமிழ்நாடு மின்சார வாரியம் இப்போதும்கூட ரூ.2,632 கோடி அளவிற்கு மானியச் சுமையை ஏற்றுக்கொண்டுதான் விவசாயிகளுக்கு இந்தக் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை வழங்குகிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அந்தச் செலவையும், அந்தக் கட்டணத்தையும் அரசே விவசாயிகளுக்கு வழங்கிவிடுகிறது. ஆகவே, இப்போதும் சிறு குறு விவசாயிகளுக்கு மின்சாரம் இலவசமாகத்தான் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-20*

மேலும், ஏதோ ஏழையெளிய மக்களைப் பாதிப்பது போல் பொது விநியோக முறையின்கீழ் வழங்கப்படும் மண்ணெண்ணெய்க்கு வரிவிதிப்பு அதிகப்படுத்தியிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் இங்கே ஒரு தவறான தகவலைத் தெரிவித்தார். அதாவது, பொது விநியோகத் துறையின்கீழ், வழங்கப்படும் மண்ணெண்ணெய்க்கு வரிவிதிப்பு அதிகப்படுத்தப் படவில்லை. இப்போது வரி அதிகப்படுத்தப்பட்டுள்ளது ஒயிட் கெரசின் என்பதற்கு மட்டும்தான். அந்த ஒயிட் கெரசினை, வண்டி வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் டீசலை, கலப்படம் செய்வதற்கு adulterate செய்வதற்குப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, அதற்குத்தான் வரியைக் கூட்டி விதித்திருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கின்ற நேரத்தில், தமிழ்நாட்டினுடைய நிலை என்னவென்று சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று இதுபற்றி நான் சொல்கிற நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்னாலே, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது தேர்தலிலே நீங்கள், எங்களோடு நின்று கொண்டு, இப்போது திருப்பிக் கொண்டு தொல்லை கொடுக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அந்த approach-லே இந்த விஷயங்களைப் பார்க்கக்கூடாது என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தளவிலே, இந்திய ராஜ்யத்திலே, இரண்டு மாநிலங்களிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற

ஒரு கட்சி என்ற பொறுப்புணர்வோடு தமிழகத்திலே இருக்கிற மக்களுடைய வேதனைகளை எடுத்துச் சொல்வதற்கு நாங்கள் முயற்சிக்கிறோமே தவிர, உங்களுக்குத் தொல்லை கொடுக்கின்ற அந்த முறையிலே பார்ப்பது மிகவும் துரதிருஷ்டம்.

இன்று தமிழகத்திலே வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. அதை யாரும் மறுக்க முடியாது. இந்த வறட்சியாலே விவசாயத் தொழிலாளிகள் இன்றைக்குக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, எப்படி வாழ்வு நடத்துவது என்ற அந்த வேதனையோடு ஆயிரக் கணக்கானவர்கள் வேறு வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது தகவல். இன்று உணவுப் பஞ்சம் வந்தால் அதனாலே, பாதிக்கப்படுகிறவர்களும் இந்த விவசாயத் தொழிலாளிகள்தான். ஏனென்றால், விவசாயத்தை நம்பி அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்கள். அந்த விவசாயத்திலே அவர்களுக்கு வேலையில்லையென்றால், என்ன செய்ய முடியும்? அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்ற நேரத்திலே, நான் இன்று நடக்கிற ஒரு விஷயத்தை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழக அரசு ஒன்றும் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை. சில நிவாரணங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே பல, காலம் கடந்ததாகக்கூட இருக்கக்கூடும். ஆனால், இன்று அந்த நிவாரணங்கள் தகுந்தவர்களுக்கு அல்லது உரிமை பாதிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச் சேருகின்றனவா என்பதைத்தான் நாங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம்.

பணிகள் இன்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. Food for work என்ற திட்டம் அமல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இங்கே சொன்னார்கள், விவசாயிகளுக்கு அந்த மாதிரி வேலை செய்வது பழக்கம் இல்லை. ஆகவே, இன்று அந்தப் பணிகள் ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன என்று.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற பணிகளையும் அந்தந்த ஊராட்சிகள், உள்ளாட்சிகள் அதில் அடங்கியிருக்கின்ற அனைத்துப் பணிகளையும்—குறிப்பாகத் தூர் வாருதல், கால்வாய்களைச் சீரமைத்தல், இந்த மாதிரியான பணிகளை எல்லாம் எடுத்துக்கொள்கின்றபோது, அந்தப் பகுதியிலே, பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை உறுதி அளிக்கின்ற திட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கின்றனவேயொழிய அவற்றுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



*பிற்பகல் 1-25*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குற்றம் சாட்டவேண்டி இதைச் சொல்லவில்லை. நிலைமையைச் சொல்கிறேன். இப்போது, விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வேலைகள், அவர்களால் செய்ய முடியாத நேரத்திலே, அதைச் செய்து முடிக்க வேண்டிய கட்டாயம், பஞ்சாயத்து யூனியனுக்கு ஏற்படுகிறது. எனக்குத் தெரியும், பல பஞ்சாயத்து யூனியன்களில், அந்த வேலையைச் செய்து முடிப்பதற்காக, அவர்கள் ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கிறார்கள். ஒப்பந்தக்காரர்கள் விவசாயத் தொழிலாளர்களை வேலைக்குக் கூப்பிடுவதில்லை. அவர்கள் கொடுக்கக்கூடிய கூலிகள், இவர்களுக்குக் கிடைக்காது. இப்படிப்பட்ட நிலையிலே, அந்த விவசாயிகள் எப்படி வாழ்வது?

இப்போது, ஒரு விஷயத்தை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கெனவே, முதலமைச்சர் அவர்கள் 276 கோடி ரூபாய் என்ற அளவுக்கு நிவாரணத்தை அறிவித்திருக்கிறார்கள். இப்போது, 380 கோடி ரூபாய்க்கான சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்போது எங்களுடைய விவசாயிகள் சங்கத்தினுடைய தோழர்கள் நாடு முழுவதும் போய் எடுத்த கணக்குப்படி, எங்களுடைய கருத்து, 5,387.84 கோடி ரூபாய்க்கான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த 5,387.84 கோடி ரூபாய்க்கான அந்தப் பாதிப்பை இந்த நிவாரணத்தினாலே மாற்றிக்கொள்ள முடியுமா? நான் மாநில அரசை மட்டும் சொல்லவில்லை. What is the role of the Central Government? மத்திய அரசுக்கு—அவர்களுக்கு—பொறுப்பில்லையா? இன்று கேட்கிறோம். அதைத்தான் நான் என்ன சொல்கிறேன் என்றால், மத்திய அரசிடம் நாம் கேட்டது, 3,527.2 கோடி ரூபாய்; அதற்கு மேலும், 14.5 இலட்சம் டன் அரிசி. கொடுக்கப்பட்டது எவ்வளவு? 238 கோடி ரூபாயும், 1.25 இலட்சம் டன் அரிசியும். நான் என்ன சொல்கிறேன் என்றால், Natural Calamity Fund யாரிடம் இருக்கிறது? அவர்களிடம் இருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசு, மாநிலங்களினுடைய வருவாயை எல்லாம் கையிலே வைத்துக்கொண்டு, எல்லாவற்றையும் பிடுங்குகிறார்கள். இப்போது, ராயல்டி, அது, இது என்ற முறையிலே பிடுங்கிச் செல்கிறார்கள். ஆனால், மத்திய அரசு இப்படிப்பட்ட நிவாரணங்களை முழுவதுமாக அவர்கள் கொடுக்க வேண்டும். ஆனால், அதைக் கொடுப்பதற்கு மறுக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல; கண்டுகொள்ளாமலே போகிற ஒரு போக்கு, இப்போது மத்திய அரசிடம் இருந்து கொண்டிருக்கிறது.

இதற்கு மேலே, இப்போது தமிழகத்தினுடைய நிலை என்ன? மத்திய அரசினுடைய கொள்கை காரணமாக, இப்போது கடுமையான தனியார்மயம் தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது. இப்போது இந்தத் தனியார்மயம் காரணமாக மாநில அரசு, போக்குவரத்துக் கழகங்களை மூடுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு எந்தப் போக்குவரத்துக் கழகத்தை மூடியது என்று மாண்புமிகு உறுப்பினர் இப்போது தெளிவுபடுத்த வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டெக்னிக்லாகக் கேட்கிறார்கள். (சிரிப்பு) நான் ஒன்றைச் சொல்கிறேன். இப்போது உங்களுடைய நடவடிக்கையைச் சொல்லலாம், நாங்கள் இலாபமாக இருக்கிற ரூட்களை கையிலே வைத்துக்கொண்டு, இலாபம் இல்லாத ரூட்களைத்தான் தனியாருக்குக் கொடுக்கிறோம் என்று. ஆனால், நடைமுறையிலே என்ன ஏற்படுகிறது என்றால், போக்குவரத்துக் கழகங்களோ அல்லது அரசுப் போக்குவரத்துத் துறையோ நடத்தி இருந்த நேரத்திலே, மக்களுக்கு ஏற்பட்டிருந்த அந்தப் பலன் போகவில்லை; அவர்கள் அனுபவித்துக்கொள்ள முடியவில்லை என்பது மட்டுமல்ல; இப்போது மக்களுக்குச் சலுகைகள் போகின்றன. அதாவது, reservation அடிப்படையிலே, வேலை கிடைத்துக் கொண்டிருந்தது, அது இல்லை. தனியார் கொடுப்பானா? மாணவர்களுக்கு இலவசம்; அதைக் கொடுக்கிறார்களா? அரசு உத்தரவுப் போடலாம். ஆனால், அவர்கள் நடைமுறைப்படுத்தவில்லை. துரதிருஷ்டவசமாக, பல உத்தரவுகள் இன்றைக்கு அரசு போடுகிறது. நடைமுறைக்கு வரவில்லை. அதை நடைமுறைப்படுத்துவதிலே, ஒன்றும் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

அதேபோன்று, அடுத்து என்ன? இப்போது பரம்பரைத் தொழில்கள், பஞ்சாலை; அதேபோன்று, கைத்தறி, இவையெல்லாம் இப்போது நடைமுறையிலே மூடுவிழா என்ற இடத்திலே நிற்கின்றன. அந்தத் தொழில்களுக்குத் திரும்ப உயிர் கொடுப்பதற்கு எந்தத் திட்டமும் அரசு வைக்கவில்லை. அதற்கு மேலாக, இப்போது கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில், கூட்டுறவு நூற்பாலைகளில் . . .

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதான் தமிழகத்தில் இருக்கக்கூடிய நெசவாளர்களினுடைய பிரச்சினைகளை எல்லாம் போக்கி, ஒரு நல்வாழ்வு அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, கிராமப்புறங்களில் சொல்வார்கள்; கசாப்புக் கடைக்காரனுக்கு கருணை இல்லை என்று சொல்வார்கள். ஆனால், இங்கே மரியாதைக்குரிய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர் பேசுவதைப் பார்த்தால், இனிமேல் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களுக்குத்தான் கருணை இல்லாத ஒரு நிலையை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு மிகப் பெரிய கருணை நம்முடைய அமைச்சர் மேலே இருக்கிறது. அமைச்சரிடம் நான் பல தடவை பேசி இருக்கிறேன். கைத்தறித் தொழிலைப் பொறுத்தவரை, இன்றைக்கு என்ன நிலை? அவர் பொறுப்பிலே இருக்கிற 16 கூட்டுறவு நூற்பாலைகளைத் தனியாருக்குத் தாரைவார்ப்பது என்று முடிவு பண்ணி இருக்கிறார்கள். இல்லையா? எங்கே போச்சு கருணை? அதேமாதிரி சர்க்கரை ஆலைகளைத் தனியாருக்குக் கொடுப்பது என்று முடிவு பண்ணி இருக்கிறார்கள். அதற்கும் மேலாக இன்று 50 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளிகளுக்கு வேலை கிடைத்துக் கொண்டிருக்கிற குமரி மாவட்டத்திலே முந்திரி ஆலைகளில் கச்சா முந்திரி கிடைப்பதற்கு வழி இல்லாததன் காரணமாக, அவை மூடு விழாவை நோக்கிச் செல்கின்றன.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இந்தக் கூட்டுறவுத் துறையில் செயல்படுகின்ற சர்க்கரை ஆலைகளும் நூற்பாலைகளும் தொடர்ந்து பெருத்த நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நஷ்டம் இல்லை; ஏற்கெனவே நஷ்டத்தில் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. அவற்றினுடைய நிதிநிலைமையைச் சரி செய்யவேண்டும், சீர் செய்ய வேண்டுமென்றால், பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் தேவைப்படும். அத்தகைய நிதி அரசிடம் இல்லை. அதனால்தான் அவற்றைத் தனியார் மயமாக்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளது; வேறு வழி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விஷயத்திற்கு நான் பின்னால் வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்போது? நாளைக்கா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை; இப்போது; Just now.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, அரசு நட்டம் என்று சொல்கிறது. நான் ஒன்றைச் சொல்கிறேன். நான் சொல்லக்கூடிய கணக்கு அல்ல; மத்திய அரசில் சொல்லப்பட்டிருக்கிற கணக்கு. அதாவது, நம்முடைய நாட்டிலே தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் மூலம் 500 சதவீதம் வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது; ஒன்று, இரண்டல்ல. அதாவது அந்த முறையில் நாம் பார்க்கிற நேரத்திலே, இன்று திவாலாகிக் கொண்டிருக்கிற பொதுத் துறையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக தனியாருக்கு தாரை வார்ப்பது என்ற மத்திய அரசினுடைய கொள்கையை இந்த அரசு நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்பது எங்களுடைய கருத்து. நான் என்ன சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றால், அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; நிதி இல்லை; ஆகவே, உலக வங்கியிடம் போகிறோம் என்று. இன்று இந்த நிதிநிலை அறிக்கையிலே 40 ஆயிரம் கோடி ரூபாய், 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று உள்ளது. இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் எங்கே இருந்து பணம் வர வேண்டும்? உலக வங்கியிடமிருந்து பணம் வர வேண்டும். உலக வங்கியினுடைய உதவியைப் பெற்ற பிரேசில் மற்றும் அர்ஜென்டைனாவினுடைய நிலைமை இன்று என்ன....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் உலக வங்கிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் எந்த அடிப்படையில் இதைப் பேசுகிறார் என்று தெரியவில்லை. 10 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொன்னால், ஆண்டுக்கு ஏறக்குறைய 3 ஆயிரம் கோடி ரூபாய் வீதத்தில் மத்திய அரசு இந்த ஐந்து ஐந்தாண்டு காலத்தில் ஒரு 15 ஆயிரம் கோடி ரூபாய் மாநில அரசுக்கு வழங்கும்; மீதமுள்ள தொகையை மாநில அரசு தன்னுடைய சொந்த வரி விதிப்பு முயற்சிகளால் திரட்ட வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-வது பாராவிலே, 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிற இடத்தில், என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்றால், An outlay of Rs.40,000 crores for Tamil Nadu for the 10th Five Year Plan has been allowed by the Planning Commission. நீங்கள் சொல்லியிருப்பது "Members of the House will be glad to know that our Hon'ble Chief Minister has secured an outlay of Rs.40,000 crores for Tamil Nadu for the Tenth Five Year Plan Period. This has been made possible due to the discussions with the Deputy Chairman of the Union Planning Commission in June 2002. (Interruption) Yes, Yes. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே, நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே..

பிற்பகல் 1-35

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், Planning Commission என்று குறிப்பிட்டதை உலக் வங்கி என்று தவறாகப் புரிந்துகொண்டார் போலத் தெரிகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, உலக வங்கியினுடைய, I.M.F. உடைய dictate -லிருந்து Tenth Five Year Plan தயார் செய்யப்பட்டிருக்கிறது. அந்த Tenth Five Year Plan-லே அவர்கள் guidelines கொடுத்திருக்கிறார்கள். அந்த guidelines-ஐப் பொறுத்தவரையிலே, நான் இங்கே படிக்கிறேன்; Reduction of Centrally Sponsored Schemes, அதாவது privatisation, closure of Public sector undertakings, subsidies குறைக்கிறது, Labour loss .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், இதெல்லாம் என்ன? எதிலிருந்து படிக்கிறீர்கள்? (குறுக்கீடு) எதிலிருந்து படிக்கிறீர்கள்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Planning Commission-னுடைய அறிக்கை, Plan Frame செய்ததிலிருந்து படிக்கிறேன். (குறுக்கீடு) அதாவது, நோட் பண்ணி எடுத்ததைப் படிக்கிறேன். வேண்டுமென்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, நிதிநிலை அறிக்கையிலே உள்ளதைப் படிக்கிறீர்களா? அல்லது தனியாக உள்ளதைப் படிக்கிறீர்களா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது டிசம்பர் 2002-லே Planning Commission--னால் approve பண்ணப்பட்டிருக்கிற அந்த out-lay-யில் அவர்கள் சில guidelines கொடுத்திருக்கிறார்கள். அந்த guidelines-ஐப் படிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய guidelines எல்லாம் உலக வங்கிதான் தந்தன என்பதற்கு ஆதாரம் ஏதும் தங்களிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் கேட்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, அந்த Plan-ஐப் படித்துப் பார்த்தால், அதனுடைய guidelines-ஐப் படித்துப் பார்த்தால், அது தெளிவாகத் தெரிகிறது. இந்த Plan-ஐப் பொறுத்தவரையிலே அவர்கள் கொடுத்திருக்கிற guidelines-ல் "Reduction in subsidies in a time-bound manner... என்றும் incentives for M.N.Cs. and Indian big business should be stopped" என்ற முறையிலேயும் இன்றைக்கு அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கிற...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "Incentive for M.N.Cs. should be stopped" என்றால் M.N.C என்பதே உலக வங்கியினுடைய ஆதரவைப் பெற்றவை. அவற்றிற்கு incentive-ஐ நிறுத்த வேண்டுமென்று சொன்னால் உங்களுக்குச் சாதகமாகத்தானே சொல்லி இருக்கிறார்கள். ஏன் அதில் குழப்பம்?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, Multi-national Companies-ஐப் பொறுத்தவரையிலே, அவர்கள் இன்றைக்கு incentive என்ற பெயரிலே தொழில்களை வாங்கி, அதற்குப் பிறகு, அந்த monopoly அவர்கள் கைக்கு வந்தபிறகு, அந்தத் தொழில்களை அவர்கள் மூடுகிறார்கள் உதாரணமாக, Coco-Colo Company; அவர்கள் இங்கே இருக்கிற மற்ற Soft-drink Company-களையெல்லாம் வாங்கினார்கள். முதலில் அவர்கள் அதை வாங்குவதற்காக வேண்டி incentive கொடுத்தார்கள். But after capturing that industry, அவர்கள் அதை மூடிவிட்டார்கள். அந்த முறையிலே உங்கள் நடவடிக்கை இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. இன்று,



வெளிநாடுகளிலிருந்து மூலதனம் இந்த நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறது. A flow of finance, capital . . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, These are all consequent to the acceptance of the W.T.O. guidelines by the Government of India successively. ஆனால் சீன நாடும் அந்த W.T.O. கொள்கையை ஏற்றுக்கொண்டு அதை நடைமுறைப்படுத்துகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் மறந்துவிட்டுப் பேசக்கூடாது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது, சீன நாடு நடைமுறைப்படுத்துகிறது என்று சொல்லப்படுகிறது. ஆமாம். China has got the power to do it. அவர்களிடம் போய் நிக்சன் சாகிப் பேரம் பேசுகிறான். அவர்கள் சீனாவில் சொல்கிற condition-ஐ ஏற்றுக்கொண்டு அமெரிக்காவிலே வியாபாரம் பண்ணுகிறான். உங்களுடையது அப்படி அல்ல. இந்தியாவிலே அவன் வந்து, he is dictating you. அந்த dictation அடிப்படையிலே இன்றைக்கு..

பிற்பகல் 1-40

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உலக வங்கி இந்தியாவிற்கு dictate செய்கிறது என்பதை நிரூபிக்க வேண்டுமென்று பார்க்கிறார். இப்போது நாம் பேசிக்கொண்டு இருப்பது, மத்திய திட்டக் குழு—Planning Commission-- மாநில அரசுக்கு வகுத்துக் கொடுத்திருக்கிற ஐந்தாண்டு காலத் திட்டம். அதற்கு திட்டக் கமிஷன் சில guidelines தந்திருக்கிறது என்று குறிப்பிடுகிறார் உறுப்பினர். மத்திய திட்டக் குழு—Central Planning Commission—இதேவிதமான Guidelines-தான் எல்லா மாநிலத்திற்கும் வழங்குகின்றது. ஒரு மாநிலத்திற்கு ஒருவிதம், இன்னொரு மாநிலத்திற்கு இன்னொரு விதம் என்று இருக்க முடியாது. அப்போது மேற்கு வங்காளத்தில் கம்யூனிஸ்டுகள் ஆட்சி புரிகின்ற மாநிலத்திற்குக்கூட இதேவிதமான Guidelines-தான் மத்திய அரசின், திட்டக்குழு வழங்கி இருக்கிறது. அப்படியானால், மேற்கு வங்காள அரசு ஏன் இதை ஒப்புக்கொண்டு இருக்கிறது? அவர்கள் உலக வங்கியிடம் அடிமை ஆகிவிட்டார்களா? அடிபணிந்து விட்டார்களா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. மேற்கு வங்காளத்தில் அரசு அந்த condition-ல் உலக வங்கியிலிருந்தோ, I.M.F. என்பதிலிருந்தோ, நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு கடனை வாங்கவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு வங்காள அரசு தமிழ்நாட்டைப் போல விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கவும் இல்லை; அரிசியைக் குறைந்த விலைக்குக் கொடுப்பதற்கு மானியத்தை ஏற்றுக்கொள்ளவும் இல்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாங்கள் என்ன விலைக்கு வழங்கவேண்டுமோ, அந்த விலைக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறோம். நாங்கள் வழியிலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற மேற்கு வங்காளத்தில் அரிசியை, B.P.L. Cards-க்கு கிலோ 6 ரூபாய் என்றும், A.P.L. Cards-க்கு கிலோ 9 ரூபாய் என்றும் வழங்குகிறார்கள். அதுதான் சரியான விலை என்று ஒப்புக்கொண்டதற்கு மிக்க நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) வழங்க வேண்டிய விலைக்கு வழங்குகிறார்கள் என்றார்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே நிலச் சீர்திருத்தச் சட்டத்தை முழுமையாக, சற்றேறக்குறைய அமல்படுத்தக்கூடிய ஒரே மாநிலம் மேற்கு வங்க மாநிலம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், சம்பந்தம் இல்லாதது அது. முதலமைச்சர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லட்டும் அவர். திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு)

**திரு. கே.சி. கருணாகரன்:** மேற்கு வங்க மாநிலத்தில் மட்டும்தான் உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கு வருமானத்தில் 50 சதவிகிதம் நிதி உதவி செய்கின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆகவே..



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரிசி விலையைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் இதற்குப் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு மாநிலத்தைவிட ஒரு முன்மாதிரியான மாநிலம் என்று தமிழகத்தை அடிக்கடி சொல்லிக்கொண்டு இருக்கிறோம். இந்தச் சபையிலும் சொல்கிறோம். எந்த மாநிலத்திலும் செய்யாத சலுகையைத்தான் தமிழக மக்களுக்கு நாங்கள் செய்து கொண்டு இருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, நடைமுறையில் இருந்ததை எடுக்க வருகிறபோதுதான், இங்கு இருக்கிற மக்கள் கேட்க வருகிறார்கள். நடைமுறையில் இல்லாத, பிற மாநிலங்களில் இருப்பதை விவாதிக்க நான் தயாராக இல்லை. இலவச மின்சாரம் தமிழ்நாட்டில் இருந்தது. அரிசி விலை மானிய விலையில் இங்கே இருந்தது. நடைமுறையில் இருந்ததை எடுக்கிறபோதுதான் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். 20 மணித் துளிகளுக்கு மேல் ஆகியிருக்கிறது. இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்? (குறுக்கீடு) இல்லை, எல்லாவற்றையும் கழித்துத்தான் சொல்கிறேன். இன்னும் ஐந்து மணித்துளிகளில் முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது, நம்முடைய பட்ஜெட்டிலே நம்முடைய அரசு எழுதியிருக்கிறது. The lesson from China is that a vibrant small and medium enterprises sector is vital for the robust growth of the economy and for increasing employment opportunities. இதை நீங்கள் கடைப்பிடிக்கிறீர்களா? இதை இன்றைக்கு...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு, குறுந்தொழில்களுக்கு சீனாவைப் போல ஊக்கம் தரவேண்டும் என்ற கொள்கை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய கொள்கை. எனவேதான்—இதற்கு முன்னாலே இருந்த தி.மு.க. ஆட்சி, ஜி. ஓ. 75 என்பதனைக் கொண்டு வந்து, தமிழ்நாட்டிலே இருக்கிற சிறு, குறுந்தொழில்களில் இருந்து அரசுக்கு வேண்டிய

பொருட்களை வாங்காமல் இருந்தது-- நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன், அதை இரத்து செய்தோம். சிறு, குறுந்தொழில்களுக்கு ஊக்குவிப்பைத் தருகிறோம், சீனாவின் அடிப்படையில்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நாங்கள் அந்த நடவடிக்கையை வரவேற்கிறோம். மேலும், நீங்கள் சிறு தொழில்கள் வளர்க்கப்படவேண்டும் என்று சொல்கிற நேரத்தில், சிறு தொழில்கள் மட்டும் வளர்ச்சியை ஏற்படுத்தாது. பெரும் தொழில்களுக்கும் வளர்ச்சி தேவை. அதுதான் 1950-லே Planning Commission உருவாக்கப்பட்ட நேரத்தில், அந்த resolution–ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

"The Resolution setting up the Commission directed it to work for providing the citizens adequate means of livelihood; the ownership and control of the material resources of the community are so distributed as best to sub-serve the common good and to see that the operation of the economic system does not result in the concentration of wealth and means of production...." அதுதான் 1950-லே Planning Commission Memorandum என்பதில் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் இன்றைக்கு Planning Commission அந்த விஷயத்திலிருந்து போய்விட்டது.

பிற்பகல் 1-45

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரிசியினுடைய பிரச்சினையைச் சொன்னார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், மேற்கு வங்காளத்தில் இருக்கிற அரசினர் ஏற்கெனவே என்ன விலைக்கு அரிசியைக் கொடுத்துக் கொண்டிருந்தார்களோ, அந்த விலைக்கு இன்றைக்கும் கொடுக்கிறார்கள். அதை அவர்கள் கூட்டவும் இல்லை, குறைக்கவும் இல்லை. ஆனால், தமிழகத்திலே துரதிருஷ்டவசமாக வறுமைக்கோட்டிற்குக்கீழே இருக்கக்கூடியவர்களுக்கு என்று சொல்லப்பட்டிருந்த அரிசியின் விலையை 3.50 ரூபாயிலிருந்து 6 ரூபாய்க்குக் கொண்டு போகவேண்டிய துரதிருஷ்டம் ஏன் நமக்கு ஏற்பட்டது? மத்திய அரசு நம்மை அந்த இடத்திற்குக் கொண்டு சென்றுவிட்டது. மத்திய அரசிடமிருந்து நமக்குத் தரவேண்டிய நிதி ஆதாரத்தைப் பெறுவதற்கு, நமக்கு முடியாததன் காரணமாக, நாம் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க நேரிட்டது. இன்று ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியிருப்பதைப்போல்--நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால்--நாம் பல நேரங்களிலே, இங்கே மாண்புமிகு அமைச்சர்



கேட்டார்கள், நாங்கள் N.D.A-வை எங்கே ஆதரித்தோம் என்று. ஆனால், தேசிய ஜனநாயக முன்னணியினுடைய அரசு நடைமுறைப்படுத்துகின்ற மக்கள் விரோதக் கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் நீங்கள் நடைமுறைப்படுத்துகிறீர்கள் என்பதுதான் எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. நான் ஒன்றைச் சொல்கிறேன்...

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் சொன்ன அதே குற்றச்சாட்டைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரனும் சொல்கிறார். மத்திய அரசு சொல்கிற எல்லாவற்றையும் நாங்கள் ஆதரிக்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆதரிக்க வேண்டியதை ஆதரிக்கிறோம். எதிர்க்க வேண்டியதை எதிர்க்கிறோம். இதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கை. 'பொடா' சட்டத்தை நாங்கள் ஆதரித்தோம். அது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்பதால் ஆதரித்தோம்; பகிரங்கமாக ஆதரித்தோம். அதைப்போல், வெளிநாட்டில் உள்ள பத்திரிகைத் துறையில் அந்நிய முதலீட்டை நாங்கள் எதிர்த்தோம். அது எங்களுடைய கொள்கை. எதிர்க்க வேண்டிய எங்களுடைய கொள்கையை நாங்கள் நாடாளுமன்றத்திலே எதிர்த்திருக்கிறோம்.

அதைப்போல, ஜனாதிபதி அவர்கள் பதவி ஏற்றபோது, முதலமைச்சர்களுக்கு அழைப்பு இல்லை என்பது குறித்து இந்த இந்திய துணைக் கண்டத்தில் எதிர்த்துக் குரல் கொடுத்த ஒரே முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நாங்கள் எதிர்த்தோமா, இல்லையா? பகிரங்கமாக எதிர்த்தோம். அதற்குப் பிறகு மத்திய அரசு ஒரு recognition-ஐ அதற்குத் தந்தது. துணை ஜனாதிபதி பதவி ஏற்றபோது, முதலமைச்சர்கள் அழைக்கப்பட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, ஆதரிப்பதைக் கொள்கைரீதியாக நாங்கள் ஆதரிக்கிறோம். எதிர்ப்பதைக் கொள்கைரீதியாக நாங்கள் எதிர்க்கிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல், இந்திய துணைக் கண்டத்தில் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்று ஒரு தனி இடம் இருக்கிறது என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனாதிபதி பதவி ஏற்பு விழாவிற்கு அழைக்கவில்லை என்பதற்காக, குஜராத்தில் முதலமைச்சர் பதவியேற்புக்கு நம் முதலமைச்சரை

அழைத்தார்களா? அல்லது குஜராத் மாதிரியே தமிழ்நாடு இருக்கவேண்டுமென்று நினைக்கிறீர்களா நீங்கள்? திரு. ராஜா அவர்கள் பேசுகிறபோதுகூடச் சொன்னார்கள்; அநேகமாக, குஜராத் அளவுக்கு நீங்கள் தமிழ்நாட்டைக் கொண்டுவரலாம் என்று நினைக்கிறீர்கள். ஏனென்றால், சாத்தான்குளம் தேர்தலை வைத்துக்கொண்டு, திட்டமிட்டு, அவருடைய வார்த்தைகள் அத்தனையும்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத் நிகழ்வுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி வீட்டிலே ஒரு நிகழ்ச்சிக்கு நீங்கள் அழைப்பு வைத்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வருவார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை மன்னிக்கவும். உங்களுக்கு இலாபம் இருக்கிற விஷயங்களில் நீங்கள் மத்திய அரசை ஆதரிக்கிறீர்கள். இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகின்ற பிரச்சினையில் நீங்கள் அவர்களை எதிர்க்கவில்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். நீங்கள் இன்று தனியார்மயம் என்பதை எங்கே எதிர்க்கிறீர்கள்? மத்திய அரசு இன்றைக்கு தனியார்மயம் என்ற கொள்கையை வேகமாகக் கடைப்பிடிக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலையைத் தனியார்மயம் ஆக்கவேண்டுமென்று மத்திய அரசு முயற்சி எடுத்தபோது, அதை இந்த அரசு வன்மையாக எதிர்த்திருக்கிறது. அதைக் கண்டித்து நான் பிரதமருக்கே கடிதம்கூட அனுப்பியிருக்கிறேன். அதைப்போலவே, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனைக்கூட தனியார்மயமாக்கப்போகிறது என்று வதந்திகள் பரவியபோது, செய்திகள் வந்தபோது, அதையும் இந்த அரசு கடுமையாக எதிர்த்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-50

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** என்னுடைய கேள்வி, நீங்கள் எதிர்த்திருக்கிறீர்கள், குரல் கொடுத்திருக்கிறீர்கள்; நான் வரவேற்கிறேன். அதற்கு நன்றியைச் சொல்கிறேன். ஆனால், பிரச்சினை அதுவல்ல.



தமிழகத்திற்கு அரிசி தராமல் இருந்த நேரத்திலே மாண்புமிகு அன்றைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் மக்களைத் திரட்டி உண்ணாவிரதம் இருந்தார்கள்; போராடினார்கள்.

இன்றைக்கு சேலம் உருக்காலை, ஹிந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ், இதுபோன்ற தமிழகத்தின் பிரத்யேகமான தொழில் ஸ்தாபனங்கள் மூடப்படுகின்ற நேரத்திலே, அதை எதிர்த்து மக்களைத் திரட்டி, மக்களுடைய இயக்கங்கள் வழியாக மத்திய அரசை நிர்பந்தப்படுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் தலைமை தாங்க வேண்டுமென்று தமிழக மக்கள் விரும்புகின்றார்கள். (மணியடிக்கப்பெற்றது) நான் உரையை முடித்துவிடுகிறேன்.

இன்று கெல்கர் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை மத்திய அரசு நியமித்து எப்படி மக்களைத் தாக்க முடியுமோ, அந்த அளவுக்குத் தாக்குகிறது. அதுபோன்ற ஒரு கமிட்டிதான் ராஜா செல்லையா கமிட்டி. ராஜா செல்லையா கமிட்டியின் recommendation என்ன? மத்திய அரசு வரி விதித்திருக்கிற பொருட்கள்மேல் மாநில அரசு வரி விதிக்கலாம். அதனால்தான் பெட்ரோல்மீது விதிக்கப்பட்டிருக்கிறது. பெட்ரோலுக்கு அவர்கள் வரி போட்டார்கள். நீங்கள் இப்பொழுது Sales Tax போட்டிருக்கிறீர்கள். டீசல் விலையை, பெட்ரோல் விலையைக் கூட்டுகிறீர்கள். இதனுடைய விளைவு யாரைத் தாக்குகிறது? தமிழகத்தில் இருக்கிற சாதாரண மக்களைத் தாக்குகிறது. அதேபோன்று, மோட்டார் வரி ஏற்றப்பட்டிருக்கிறது. ஒரு பக்கத்திலே பெட்ரோல், டீசல் வரி ஏற்றப்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கத்திலே மோட்டார் வரியை ஏற்றியிருக்கிறீர்கள். இதனுடைய பலன் யாருடைய தலையில் விழுகிறது? சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். வண்டியில் பயணம் செய்யக்கூடியவர்கள் தலையில் விழுகிறது.

அதேபோன்று, இன்று 11-வது நிதிகமிஷனும், 12-வது நிதிகமிஷனும் இந்த மாநிலத்திற்குத் தரவேண்டிய விகிதத்தைத் தரவில்லையென்று மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் அதைப் பெறுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தோம்? ஏற்கெனவே 2,900 கோடி ரூபாய் இதனால் நமக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முதல்வர்கள் மாநாட்டிலே போய் 3 ஆயிரம் கோடி ரூபாயை நமக்குத் தரவேண்டுமென்று கேட்டார்கள். தமிழக மக்கள் அதை ஆதரித்தார்கள். அவர்கள் கொடுத்தார்களா? இன்று கடுமையான வறட்சி ஏற்பட்டதற்குப் பிறகும்கூட, ரூ. 5 ஆயிரம் கோடி, 6 ஆயிரம்

கோடி ரூபாய் மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்ட நேரத்தில்கூட, தமிழகத்திற்கு பிச்சை கொடுக்கிறார்கள், 258 கோடி ரூபாய் நாம் என்ன பிச்சைக்காரர்களா? தமிழக மக்கள் என்ன பிச்சைக்காரர்களா? நெய்வேலியிலிருந்து பணத்தைக் கொண்டு போகிறார்கள், மணவாளகுறிச்சியிலிருந்து பணத்தைக் கொண்டு போகிறார்கள். இதுமாதிரி நம்முடைய நாட்டிலே உள்ள பல சம்பத்தை இன்றைக்கு மத்திய அரசு கொண்டு சென்று, நமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை. அதேநோத்தில் இதற்கு யார் தலையில் நீங்கள் கை வைக்கிறீர்கள்? அரசு ஊழியர்கள்; இன்றைக்கு அரசு ஊழியர்கள், (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித் துளிகளில் உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** உரையை முடித்துவிடுகிறேன். அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், முன்பு அவர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு 30 ஆண்டுகள் வேலை செய்தால் போதும் என்று இருந்தது. இப்பொழுது 33 ஆண்டு காலம் அவர்கள் வேலை செய்ய வேண்டும். அதுபோன்று, இப்போது நேரம் இல்லாத காரணத்தால், இந்த விஷயத்தில் அதிகயாக விளக்கப் போவதில்லை. இன்றைக்கு இந்த நடவடிக்கையின் காரணமாக அவர்களைப் பொறுத்தவரையில், 50% முன்பு பென்ஷன் கிடைத்தது. அவர்களுடைய Last drawn wage -ல் இப்போது நீங்கள் last 10 months average என்ற முறையில் கொண்டு வரப்படுவதன் காரணமாக, அவர்களுக்கு அதிலேயும் இழப்பு ஏற்படுகிறது.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்று இந்த பட்ஜெட்டில் பிரத்யேகமாக சில திட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. இந்தத் திட்டங்களின் வழியாகத் தமிழகத்தில் இருக்கிற மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். ஆனால் அரசு ஊழியர்களுடைய co-operation இல்லாமல் நீங்கள் இந்தத் திட்டங்களை அமல்படுத்த முடியுமா? அது மக்களுக்குப் போய்ச் சேருமா? நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்த planning-ஐப் பொறுத்தவரையில், active participation and Co-operation பங்காற்றுதல் - அரசு ஊழியர்கள், மக்கள், தொழிலாளிகள், அதேபோன்று விவசாயிகள் ஆகியோரின் பங்காற்றுதலால்தான் நாம் இதை நடத்திக்கொள்ள முடியும். அப்படிப்பட்ட பங்காற்றுதலை இன்று ஏற்படுத்த வேண்டுமென்றால், இப்படித் தொழிலாளர்களுடைய, அரசு ஊழியர்களுடைய, அதேபோன்று விவசாயிகளுடைய வாழ்விலே நாம் கை வைப்பதன் வழியாக முடியாது.



பிற்பகல் 1-55

இன்று அந்த அரசு ஊழியர்களைப் பொறுத்தமட்டிலே, அவர்கள் வேலைக்குச் செல்கிற நேரத்திலே அல்லது அவர்களுக்குப் பல ஊதிய உயர்வுகள் கொடுக்கப்படுகிற நேரத்திலே, அவர்களுடைய பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசிச் செய்திருக்கிறீர்கள். அதேபோன்று இப்போது ஒருதலைப்பட்சமாக நீங்கள் முடிவுகள் எடுப்பது சரிதானா? ஆகவே, நான் இந்த நேரத்திலே பணிவன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புவது, இன்று மத்திய அரசிடமிருந்து வரவேண்டிய இந்த நிதியைப் பெறுவதற்காக நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அது எடுக்கப்படாமல், ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாது. ஐந்தாண்டுத் திட்டத்தை பொறுத்த அளவிலே, இந்த Planning Commission இந்த உலக வங்கியினுடைய, அதேபோன்று சர்வதேச நிதி நிறுவனத்தினுடைய Guideline-லேதான் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது.

நான் கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய கட்சியைப் பொறுத்த அளவிலே, நாங்கள் சின்னக் கட்சி. நாங்கள் உண்டியல் வசூலித்துத்தான் கட்சியை நடத்துகிறோம். அதிலே எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் நான் ஒன்றைச் சொல்கிறேன். நாங்கள் டெகல்கா என்ற ஊழலிலே இலட்சங்கள் வாங்கி, டி.வி.-யிலே எங்களை யாரும் படம் பிடிக்கவில்லை. இந்த கார்கிலிலே, அங்கே இராணுவத்தைச் சேர்ந்தவன் இறந்துகொண்டிருக்கிற நேரத்திலே, அதற்கு ஆயுதங்கள் வாங்கியதிலே ஊழல் நடத்தினவர்களா? எங்களை உண்டியல்காரர்கள் என்று பேசுகிறீர்கள்? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, முடியுங்கள். கோபப் படாதீர்கள். (சிரிப்பு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைச் சொல்கிறேன். இன்று கடவுளுக்குக்கூட உண்டியல் வைக்கப்பட்டிருக்கிறது. (சிரிப்பு) நாங்கள் உண்டியல் வசூலித்துத்தான் நடத்துகிறோம். நாங்கள் இன்றைக்கு ஊழல் நடத்தவில்லை. எங்களுடைய தலைவர் 25 ஆண்டு காலம் ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்தார், மேற்கு வங்காளத்திலே. அவர் லஞ்சம் வாங்கினதாகவோ ஊழல் பேர்வழி என்றோ, யாராலேயும் சொல்ல முடிந்ததா? 25 ஆண்டு காலம், ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு அல்ல. நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்; இன்று கடைசியாக என்னுடைய ஒரு

தாழ்மையான வேண்டுகோள்; தமிழக அரசினுடைய ஒரு விஷயத்தை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பரிசீலனைக்காக வேண்டி வைக்க விரும்புகிறேன். இன்று இவ்வளவு கடுமையான நிதி நிலை இருக்கிற நேரத்திலே, தமிழகத்தினுடைய, நம்முடைய இந்த தலைமைச் செயலகத்தை இராணி மேரி கல்லூரியிலே புதிதாகக் கட்டவேண்டும் என்பது தேவைதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரம், 10 நாள் புதிய தலைமைச் செயலகக் கட்டடத்தில் மாண்புமிகு உறுப்பினர் தங்கியிருப்பாரேயானால், எப்போது இடிந்து விழுந்துவிடும், உயிருக்கு ஆபத்து வந்துவிடும் என்று தெரிந்து நீங்களே தீர்மானம் போட்டுவிடுவீர்கள், உடனடியாக மாற்றிவிடலாம் என்று. 1973-1974 வாக்கில் என்று கருதுகிறேன்; கட்டப்பட்ட அந்தக் கட்டடம் இடிந்து விழுகின்ற நிலையிலே இருக்கிறது. நான்காவது, ஐந்தாவது மாடியிலே இருக்கிற கழிவறையிலிருந்து தண்ணீர் எல்லாம் கீழே இருக்கிறவர்கள் தலைமீது கொட்டிக்கொண்டிருக்கிறது. மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது. இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** என்னுடைய வேண்டுகோள் ஒன்றுதான். அதாவது, இன்று தமிழகத்திலே ஆயிரக்கணக்கான மக்கள் கடுமையாக வாடிக்கொண்டிருக்கிற நேரத்திலே, வாழ்க்கை நடத்துவதற்குத் தவித்துக்கொண்டிருக்கிற நேரத்திலே, உடனடியாக அதனைக் கட்ட வேண்டுமா? ஒரு வருடம், இரண்டு வருடம் அதைத் தள்ளிப் போட்டாலே ஆபத்து வருமா? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடியுங்கள், முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-59 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

63. 2001-2002-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை (தமிழ்நாடு சாராவிக் கழகத்தின் பதிமூன்றாவது ஆண்டறிக்கை உள்ளிட்டது). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

97. 2001-2002ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

98. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

99. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
184536